www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 16 | ஏப்ரல் 2009 | பக்கம் 16 | விலை 20/= | சுழற்சி 122

# மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துங்கள்!





முல்லைத்தீவுக்கு வடக்கே வெள்ளாம்முள்ளிவாய்க்கால் முதல் புதுமாத்தளன் வரையான பதினான்கு கி.மீ. நீளமான குறுகிய நிலப்பரப்பே தற்போதைய "யுத்த தவிர்ப்பு மக்கள் பாதுகாப்பு வலயம்" இருந்து வருகிறது. அரசாங்கத்தின் ராணுவ நடவடிக்கைகளும் புலிகள் இயக்கத்தின் தற்காப்பு செயற்பாடுகளும் இப்பிரதேசத்திலேயே இடம் பெற்று வருகின்றன. இதனால் அங்குள்ள மக்கள் அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்த வண்ணம் உள்ளனர். இது மேலும் பேரழிவாக மாறுவதை அனைத்து சக்திகளும் இணைந்து தடுத்து நிறுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கிலே அரசாங்கம் மேற்கொண்டு வந்த இராணுவ நடவடிக்கைகளினால் ஏறக்குறைய எல்லாப் பிரதேசங்களையும் அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது. ஒரு சிறிய நிலப்பரப்பு அதுவும் அரசாங்கம் அறிவித்த பாதுகாப்பு வலயமே எஞ்சியுள்ளது. இந்நிலையில் அங்கு இடம் பெறும் தாக்குதல்கள் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறிப்பாக உயிரிழப்புகள், காயங்கள் மிகவும் அதிகம். இந்த இராணுவ நடவடிக்கைகளின் முன்னேற்றத்திலிருந்து அரசாங்கமும், இராணுவமும் அதே வேளை புலிகள் இயக்கமும் எத்திசையில் பயணம் செய்யப்போகின்றன என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

புதுமாத்தளன் பகுதியிலுள்ள "யுத்த தவிர்ப்பு" பகுதியில் இருக்கும் மக்களை வெளியேற்றுவதில் அரசாங்கம் புலிகள் இயக்கமும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் பல தடவைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசிவிட்டார். யுத்தத்தை நிறுத்தப்போவதில்லை என்றும் யுத்த தவிர்ப்பு பகுதியிலிருந்து மக்களை வெளியேறவிடாது மக்கள் மீது புலிகள் இயக்கம் தாக்குதல் நடத்துவதாக ஜனாதிபதி திட்டவட்டமாகப் பதிலளித்துள்ளார். அதேவேளை புலிகள் இயக்கமோ அரசாங்க இராணுவமே மக்கள் மீது தாக்குதலை நடத்துவதாகக் கூறுகிறது. நாளாந்தம் மக்கள் இறப்பதும் காயப்படுவதும் பட்டினியால் வாடுவதும் இடம் பெயர்வதும் அங்கு இயற்கையாக நடைபெறவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்.

ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் இலங்கையில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி சீனாவின் தலையீட்டால் கைவிடப்பட்டது. நோர்வேயின் தலையீட்டுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் இணைத் தலைமை நாடுகளாக அரங்கத்திற்கு வந்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஜப்பான், நோர்வே என்பன மனப்பூர்வமாக இல்லாவிட்டாலும் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்படி தொடர்ந்து கேட்டுவருகின்றன.

பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுள்ள மக்கள் வெளியேறுவதற்கு இடமளிக்கப்படும் வகையில் இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தும்படியே அவை கோரிக்கை விடுத்துவருகின்றன. அதற்கு அரசாங்கம் செவிசாய்ப்பதாய் இல்லை. அதே நேரம் மக்களை அவர்களின் பிரதேசத்திலிருந்து வெளியேறும்படி கோரிக்கை விட எவருக்கும் உரிமை இல்லை என்று கூறிவரும் புலிகள் இயக்கம் மக்கள் சுதந்திரமாக அங்கிருந்து வெளியேறுவதைப் பலாத்காரமாகத் தடுத்தும் வருகின்றது. மீறி வெளியேறும் மக்கள் மீது தாக்குதல்களும் நடாத்தப்படுகிறது.

இந்நிலையில் யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளை உறுதிசெய்யும் வகையில் நியாயமான அரசியல்தீர்வு காணப்பட வேண்டும் என்பது தான் தமிழ் மக்களின் சார்பான கோரிக்கை மட்டுமல்ல இலங்கை என்ற சுதந்திரமான நாட்டை நேசிக்கும் அனைவரினதும் எதிர்பார்ப்புமாகும். இதைப் பற்றி சிறிதும் கவலைப்படாது ராஜபக்ச அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஐ.நா சபை இணைத் தலைமை நாடுகள் இந்தியா என்பவற்றை நடவடிக்கை எடுக்கக் கோரி இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

உலக சமாதானம், நல்லாட்சி, மனித உரிமைகள் ஜனநாயகம் என்பவற்றை நிலைநாட்டுவதென்ற பேரிலேயே ஐ.நா சபை தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பை மீறி அமெரிக்கா செயற்படுவதும் அதனதும் ஏனைய வல்லரசுகளினதும் கட்டுப்பாட்டிலுமே ஐ.நா. இயங்குகிறது. சாதாரண நாடுகளினதும் மக்களினதும் விடுதலை அமைப்புகளினதும் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக ஐ.நா சபை இன்னில்லை. ஏகாதிபத்தியத்தினதும் வல்லரசுகளினதும் தேவை விருப்பம் என்பவற்றின் அடிப்படையில் ஐ.நா. சில நாடுகள் மீது அழுத்தங்களை தலையீடுகளை எடுத்து வருகிறது. ஈராக், ஆப்கான் போன்ற நாடுகளில் அமெரிக்கா நேரடியாகவே தலையிட்டது. அவ்வாறான நடவடிக்கைகளில் ஏதாவதொன்றைப் போன்று இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்க முடியுமா என்றே தமிழ்மக்கள் சார்பாகச் சிந்திக்கப்படுகிறது. அதற்கான முயற்சிகள் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் குழப்புவதில் இந்திய மேலாதிக்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இயங்கியதுடன் தற்போது இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் இராணுவ நடவடிக்கைகள் இந்திய மேலாதிக்கத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும் கூட்டு முயற்சி என்பதால் இலங்கை அரசாங்கத்தின் மீது மேற்படி அழுத்தங்களை கொடுக்க இந்தியா இடமளிக்காது.

2ம் பக்கம் →



இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் முக்கிய பங்கு வகிப்பது பெருந்தோட்டத்துறையாகும். முன்பு பிரித்தானிய வெள்ளையரிடமும் பின்பு அரசாங்கத்திடமும் அதன் பின்

## மலையகத் தோட்டங்களைத் தனியாருக்கு பிரித்துக் கொடுக்க அபாய அறிவிப்பு!

இருபது தனியார் கம்பனிகளிடமும் கைம் மாறிக் கைமாறி வந்திருப்பதே பெருந்தோட்டத்துறையின் வரலாறாகும். இந்த வரலாற்றில் இந்தியாவிலிருந்து கொலனிய வாதிகளால் கூட்டி வரப்பட்ட தமிழ் மக்களே அன்றிலிருந்து இன்றுவரை தோட்டத் தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர். இன்று பெருந் தோட்டத் தொழில் துறையில் சுமார் 5 லட்சம் தொழிலாளர்கள் இருந்து வருகின்றார்கள். இங்கு கவனத்திற்குரியது யாதெனில் சுமார் இருநூறு வருடங்களைத் தொடப் போகும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வும் வளமும் இன்று வரை அடிநிலையில் அரை குறையானதாக இருந்து வருவது தான்.

அதே வேளை அத் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுத்த அந்நிய கொலனித்துவ ஏகாதிபத்திய வாதிகளும் உள்நாட்டுப் பெரு முதலாளிகளும் மிகப் பெரும் லாபங்களைக் கொள்ளையிட்டு வந்துள்ளனர். இச் சுரண்டலானது இப்போது இருபது தோட்டக் கம்பனிகளின் முதலாளிகளால் உறுஞ்சப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் மேற்படி கம்பனிகளிடமிருந்து தோட்டங்களைத் தனியாருக்குப் பிரித்துக் கொடுக்க ஆலோசித்து வருகிறது. இப் பிரித்துக் கொடுப்பதில் இரு நோக்கங்கள் உள் உறைந்து காணப்படுகின்றன. ஒன்று, தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்து அடிப்படை உரிமைகள் அற்ற நிலையில் சுரண்டலுக்குள் அமுக்கிக் கொள்வது. இரண்டாவது மலையகத்தில் பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து மலையகத் தமிழ் மக்களின் தேசிய இன வளர்ச்சியைச் சிதைத்து சின்னாபின்னப்படுத்துவது. எனவே இவ் அபாய அறிவிப்புக்கு எதிராக மலையக மக்கள் ஆழ்ந்து சிந்தித்து செயல்பட ஆயத்தமாக வேண்டும்.

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

புதிய -ஜனநாயக கட்சியின்
புரட்சிகர மேதினம்
01.05.2009
யாழ்ப்பாணம் - அட்டன்

உழைக்கும் மக்களே!
ஒடுக்கப்படும் தேசிய இனங்களே!
அனைத்து ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் ஐக்கியப்படுங்கள்!
வெகுஜனப் போராட்டப் பாதையில் அணிதிரள்வீர்!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





# விடுதலை அல்லது விசாரணை வேண்டும்.

புதிய-ஜனநாயக கட்சியின் தோழர்களான ஆர். ஜெயசீலன், எஸ்.சுகேசனன் ஆகிய இருவரும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இரண்டு வருடங்களின் பின் கடந்த 13.02.2009 அன்று மூன்று தோழர்களான வெ. மகேந்திரன் எஸ். மோகன்ராஜ், என். கிருஷ்ணப்பிரியன் ஆகியோர் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்த முடியாத நிலையில் விடுதலை செய்ய ப்பட்டனர். அவர்களது சொந்த வாழ்வும் அரசியல் வாழ்வும் இரண்டு ஆண்டுகள் வீணாக்கப்பட்டன. அதேவேளை அவர்கள் முன்பை விட சிறைவாழ்வின் ஊடாக உறுதியும் ஓர்மமும் கொண்ட கம்யூனிஸ்டுக்களாகியும் கொண்டனர். இருப்பினும் சிறை என்பது கம்யூனிஸ்டுக்களை மக்களிடமிருந்து சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தி வைத்து அவர்களைச் செயலிழக்கச் செய்யும் முயற்சியேயாகும். எனவே தொடர்ந்து சிறைவைக்கப்பட்டுள்ள தோழர்கள் இருவரையும் விடுதலை செய்யவேண்டும் அல்லது விசாரணைக்கு நிறுத்த வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றோம்.

# தோழர் பிரதீபனை தடுத்து வைத்திருப்தேன்?

வவுனியாப் பிரதேச புதிய ஜனநாயக கட்சியின் முன்னிலை உறுப்பினரும் மக்கள் சேவையாளனும் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவனுமாகிய தோழர் நீ.பிரதீபன் கடந்த மார்ச் 7ம் திகதி வவுனியாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொழும்பு கிறாண்பாஸ் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். ஒரு மாதம் கடந்த நிலையிலும் அவர் விடு விக்கப்படவில்லை. அவர் சமூக அக்கறையும் மக்கள் சார்பும் மிக்க ஒரு இளம் தோழராவர் படிப்பதிலும் மக்களுக்கு சேவை செய்வதிலும் முன்நின்று வந்த தோழர் பிரதீபன் ஒரு கம்யூனிஸ்டாகத் தன்னை தகவமைத்து வந்தவர். அதனால் மக்கள் விரோத சக்திகளுக்கு அவரை பிடிக்காமல் இருப்பதற்கு காரணம் இருந்திருக்காலாம். ஆனால் அவரை ஏன் கைது செய்து தடுத்து வைத்திருக்கிறார்கள் என்றே மக்கள் கேட்கின்றனர். ஒருவரைத் தனிப்படவும் அரசியல் ரீதியிலும் பழிவாங்கி தடுத்து வைத்திருக்க அவசர காலச்சட்டம் துணை புரிகின்ற அவலச் சூழலிலேயே தோழர் பிரதீபனும் விடுவிக்கப்படாது தடுத்துவைக்கப்பட்டுள்ளார். நீதி நியாயம் மனித உரிமை என்பனவற்றின் பெயரால் புதிய ஜனநாயக கட்சியும் புதிய பூமியும் வற்புறுத்துவது அவரை விடுதலை செய்ய வேண்டும் என்பதையேயாகும்.

# ஊடகவியலாளர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்

ஊடகங்கள் ஊடகவிலாளர்கள் மீதும் ஊடகப் பணிமனைகள் மீதும் தாக்குதல்கள் தொடருகின்றன. அதனை இந்த அரசாங்கம் ஒரு வகை தர்மாகவே கடைப்பிடித்தும் வருகிறது என்றே கூற வேண்டும். ஏனெனில் இதுவரையான எந்தவொரு தாக்குதல்களுக்கும் அல்லது ஊடகவியலாளர் கொலைக்கும் உரியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு முறையான விசாரணை மூலம் தண்டிக்கப்படவில்லை என்பதே முன்பு கூறியதற்கான ஆதாரமாக அமைகிறது. இறுதியாகக் கொலையாளிகளால் குரூரமாகத் கொல்லப்பட்டவர் நாடறிந்த சர்வதேசக் கவனத்தை பெற்றிருந்த பத்திரிகையாளரும் ஆங்கில வார இதழின் ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்கவாகும். அவரது கொலையுடன் எண்ணிப் பார்த்தால் 2006ம் ஆண்டு முதல் 18 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் அவ்வப்போது தாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். திஸ்ஸநாயகம் ந.வித்தியாதரன் உட்பட வேறும் சில பத்திரிகையாளர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வித்தியாதரனைப் பிரதம ஆசிரியராகப் கொண்ட உதயன் பணிமனை கிறைனேட் வீச்சுக்கு மீண்டுமொரு முறை இலக்காகியுள்ளது.

இம்மாத முற்பகுதியில் மட்டக்களப்பின் "வார உரைகல்" வார தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் எம்.ஐ.ரஹமத்துல்லா மிக மோசமாகத் தாக்கப்பட்டு கொலை அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டார். அப் பத்திரிகையானது அநீதி ஊழல் முறைகேடுகளை அம்பலத்திற்கும் விமர்சனத்திற்கும் கொண்டு வந்ததைப் பொறுக்கமாட்டாதோரே மேற்படி தாக்குதலில் ஈடுபட்டனர் என அதன் ஆசிரியர் ரஹமத்துல்லா தெரிவித்துள்ளார். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழிகளுடனேயே மகிந்த சிந்தனை அரசு ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து கொண்டது. ஆனால் இன்று வரை ஊடகவியளார்களும் ஊடகங்களும் தொடர்ந்து கொல்லப்பட்டும் தாக்கப்பட்டும் வருகின்றமையைத் தான் காணமுடிகிறது. அதனைத் தொடர்ந்து கிரிபத்கொடவில் சிரச தொலைக்காட்சி ஊடகப் படப்பிடிப்பாளர் சுசந்த அபேரட்ண இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றைப் படம் பிடித்துக் கொண்டிருந்த போதே தாக்கப்பட்டு காயமடைந்தார். காத்தான் குடியில் முஸ்லீம் பத்திரிகை ஆசிரியர் அடித்துக் காயப்படுத்தப்பட்ட 48 மணி நேரத்திற்குள் கிரிபத் கொடவில் சிங்கள ஊடகவியலாளர் தாக்கப்ப ட்டுள்ளார்.

இவற்றை உடனடியாகவே கண்டித்து ஐந்து ஊடக அமைப்புக்கள் எதிர்ப்பும் தெரிவித்தன. ஆனால் அரசாங்க அரவணைப்புப் பெற்ற சக்திகள் தமது தாக்குதல்களைத் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மேற்படி அண்மைக்காலத் தாக்குதல்களை புதிய பூமி மிக வண்மையாக கண்டிக்கிறது. மக்கள் தான் இவற்றுக்குரிய பதிலைக் கூற முடியும்.

## மக்கள் மீதான தாக்குதலை

1ம் பக்க தொடச்சி

சிறிய, வறிய நாடுகள் பெரும்பாலும் ஏகாதிபத்தியத்தினதும் வல்லரசுகளினதும் "வாடிக்கை" நாடுகளாகவே இருக்கின்றன. அதேவேளை அவற்றின் செல்லப்பிள்ளைகளாக இருந்து கொண்டு அந்நாடுகளின் தலைமைகள் சர்வாதிகாரமாக செயற்படுகின்றன. ஆனால் வாடிக்கையாளராக இல்லாது செயற்படும் நாடுகள் மீது ஏகாதிபத்திய வல்லரசு நாடுகள் கடுமையான போக்கிலான தலையீடுகளைச் செய்கின்றன.

கீயூபா, வடகொரிய, ஈரான், சில ஆபிரிக்க நாடுகள், போன்றவற்றின் மீதும் அவ்வாறான தலையீடுகளைச் செய்கின்றன. இன அழிப்பு, ஜனநாயக மனித உரிமை மீறல் போன்றவற்றில் அவ்வாறான தலையீடுகளையும் அழுத்தங்களையும் ஐ.நா. மூலம் கொடுக்க முடியும். அத்தகைய ஒரு முயற்சியே அண்மைக் காலமாகச் சில வல்லரசுகளினூடாக இலங்கை அரசாங்கத்தின் மீது கொடுக்க முயற்சிக்கப்படுகிறது. இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நடைபெறும் போராட்டங்களினூடாகவும் பரீட்சிக்கப்படுகிறது. ஆனால் ஐ.நா தலையீடு என்பது எவ்வாறனவை என்பதைக் கடந்தகால அனுபவங்கள் தெளிவாக்கி வந்துள்ளன. உரிமைக் கோரிக்கைகள் போராட்டங்கள் போன்றவற்றுக்கு சர்வதேச ஆதரவு அவசியமாகும். சர்வதேச ஆதரவு என்பதும் ஏகாதிபத்திய வல்லரசுகள் மேலாதிக்க சக்திகள் என்பனவற்றுக்கும் அடக்குமுறை அரசிற்குமிடையிலான முரண்பாட்டை அடக்குமுறை அரசிற்கு எதிராகவும் மக்கள் சார்பாகவும் பயன்படுத்துவது என்பதும் வேறுவேறு விடயங்களாகும். அதிலும் போராட்டங்களின் கையறு நிலையில் அந்த முரண்பாட்டை பயன்படுத்துவது என்பது மிகவும் வரையறுக்கப்பட்டதும் ஆபத்தானதும் ஆகும்.

இலங்கையில் தமிழ்மக்கள் அரசியல் ரீதியாகப் பலமற்றவர்களாக இருக்கின்ற சூழலில் தமிழ்த்தரப்பில் முன்னெடுக்கப்பட்ட ஆயுத எதிர்ப்பு நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. இவ்வேளையில் ராஜபச்ஷஅரசாங்கத்திற்கும் ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசு சக்திகளுக்குமிடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு சார்பான யுத்த நிறுத்தமாகவும் அரசியல்தீர்வாகவும் காணவும் அழுத்தங்கள் கொடுக்கலாம் என்பதற்கான இடம் மிகவும் சொற்பமானதேயாகும்.

நிறுவனப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் ஆளும் சிங்கள பௌத்த பேரினவாதம் ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஏனைய தேசிய இனங்களை முழுமையாக அடக்கி ஒடுக்குகின்ற சிங்கள பௌத்த அரசென்ற முழுமையை அடையுமாயின் அடக்கி ஒடுக்கப்படுகின்ற தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களின் எதிர்காலம் பெரும் அபாயங்களுக்கு உள்ளாவது நிச்சயமானதாகும். அவ்வாறான சூழ்நிலையில் இலங்கை சுதந்திரம் இறைமை ஒருமைப்பாடு ஐக்கியம் போன்றனவற்றுக்கு பாரிய சோதனைகள் ஏற்படவே செய்யும். அதன் ஊடாக ஏகாதிபத்திய மேலாதிக்கத் தலையீடுகள் அப்பட்டமாக இடம் பெறலாம். அச் சூழலில் தமிழர்தரப்பில அடுத்த கட்டப் போராட்டம் பற்றிய சரியான தெரிவு அவசியம்.

அதற்கு கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு கட்டப் போராட்டங்கள் பற்றியும் இன்று வரையான முன்னெடுப்புகளின் தோல்வி பின்னடைவுகள் பற்றியும் உரிய மதிப்பீடுகளும் சுயவிமர்சனங்களும் செய்யப்பட வேண்டும். ஏகாதிபத்தியத்தைக் கைப்பிடித்த யூத சியோனிசப் பாதையில் பயணிப்பதா அல்லது வர்க்கப் போராட்டப் பாதையிலான விடுதலைப் பாதையில் பயணிப்பதா என்பது தீர்மானிக்கப்படல் வேண்டும். அதற்கான பரந்த கருத்துத் தளங்களில் விவாதங்கள் முன்னெடுக்கபடல் வேண்டும். இல்லாது விடின் இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினையின் தீர்வின்றிய நிலைக்கு காரணமான அழிவுகள் போன்று நீண்ட காலத்திற்கு தொடர வாய்ப்பு உண்டு.

# நாலும் நடக்கும் உலகிலே நற்குணன்

## முதலாம் பிள்ளை

மத்திய மாகாண சபைக்கான நுவரெலியா மாவட்டத்தில் மூன்று இடதுசாரிக் கடசிகள் போட்டியிட்டதாகவும் அதில் தனது கட்சியான ஐக்கிய சோசலிச கட்சியே அதிக வாக்குக்ககளைப் பெற்றதாகவும் அதன் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய சொல்லி வருகிறார். அவர் கூறும் மூன்று கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகளையும் விட அதிகமான வாக்குக்களை கேத்தல் சின்னத்தில் போட்டியிட்ட புதிய னைநாயக கட்சியினரின் சுயேற்சைக் குழு பெற்றுள்ளது. புதிய ஜனநாயக்க் கட்சி ஒரு இடதுசாரிக் கட்சியல்ல என்று அவர் விளக்கினாரா? அல்லது தங்களைப்போல என்.ஜி.ஓ. ஆதரவில் நடக்கிற இடதுசாரிக் கட்சியல்ல என்று சொல்கிறாரா? தனது தான்தோன்றித்தனத்தால், சமசமாஜக் கட்சியின் அரசியல் பாரம்பரியத்துக்கமைய தனது கட்சியில் பிளவை ஏற்படுத்தியுள்ள இந்த ட்ரொட்ஸிவாதி முதலில் உண்மையை மழுப்பாமல் சொல்லப் பழகட்டும்.

## அடமானமாகும் இரண்டாவது சுதந்திரம்

மூழ்குகிற கப்பலிலிருந்து எலிகள் தப்பி ஓடுவது போல என்று ஒரு நிறுவனம் பலவீனப்படுகிற போது அதை விட்டு விலகுகிறவர்க்ளும் சொல்வார்கள். சர்வதேச நாணய நிதியம் ஒரு மூழ்குகிற கப்பல் என்பது மட்டும்ன்றி இவ்வளவு காலமாக ஏழை நாடுகளின் பொருளாதாரத்தை மூழ்கடித்த கப்பலுமாகும். உலக நாடுகள் ஒவ்வொன்றாக அதன்பிடியிலிருந்து நழுவிச் செல்லுகிற வேளையிலே இலங்கை அரசாங்கம் அதனிடம் தஞ்சமடைந்திருக்கின்றது. இது ஏன்? ஏகாதிபத்திய நாடுகள் பற்றி வாய் வீரம் பேசி யார் சொன்னாலும் போரை இறுதிவரை தொடர்வதாகப் பேசி வந்த ஆட்சி இன்று நாட்டைப் பெரிய பொருளாதாரச் சிக்கலில் மாட்டிவிட்டுள்ளது. உடனடியாக நெருக்கடியிலிருந்து மீளப் புலம் பெயர்ந்த தேசப் பற்றாளர்களை இலங்கைத் திறைசேரியின் கடனீட்டுப் பத்திரங்களில் முதலிடுமாறு அரசாங்கம் கேட்டிருந்தது. போரை ஊக்குவித்த தேசபக்தர்கள் தமது பணம் பத்திரமாக இருக்கிற இடங்கள் பற்றி நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர். நாடும் மக்களும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிபந்தனைகளால் மேலும் பெரிய சுமைகளைத் தாங்கப் போகின்றனர்.

## கப்பலோட்டுகிற கதைகள்

முல்லைத்தீவு பகுதியில் போரில் சிக்குண்டு கிடக்கும் தமிழருக்கான நிவாரணம் பொருட்கள் ஐரோப்பாவிலிருந்து கடல் வழியாக அனுப்பப்படுவதைப் பற்றிப் புலம்பெயர்ந்த தமிழ்த் தேசியவாதி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை ஒன்றில் நீளமாக எழுதியிருந்தார். இந்தக் கப்பலில் வருகிற பொருட்களை இறக்குவதற்கு இலங்கை அரசின் கடற்படை அனுமதிக்குமா என்பது போக இந்த நிகழ்வை 1948ல் யூதர்களை ஏற்றிக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேலுக்கு போன "எக்ஸோடஸ்" கப்பல் போனதுடன் ஒப்பிட்டு மனமுருகியிருந்தார். ஒப்பிடும்படி கப்பல்கள் இரண்டிலும் என்ன இருந்ததோ தெரியாது. ஆனால் தமிழ்த் தேசியவாதிகள் சிலரது தலைகளை இறுக அடைத்துக் கிடக்கும் ஆண்ட பரம்பரைச் சிந்தனையும் இஸ்ரேல் பற்றியும் ஏகாதிபத்தியம் பற்றியுமான கனவுகளும் அழியப் போவதில்லை.

## ஏசமானர்களின் காலடியில்

இந்தியா இலங்கைத் தமிழர்களிடம் காட்டி வந்தது வெறும் அலட்சியம் மட்டுமல்ல. திட்டமிட்ட குழிபறிப்புக்கள் கூட. தமிழர் தேசிய கூட்டமைப்பு இதை அறியும். ஆனால் வாயடைத்துப் போயிருக்கிறார்கள். மாவை சேனாதிராஜ சிவசங்கர் மேனனைச் சந்திக்க மறுத்த செய்தி ஒரு வேளை விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெற்றாலும் என்ற சிறிய ஐயத்தலானாக இருக்கலாம். ஆனால் இந்திய ஆதரவுக் குழலுதூகிற மூன்று எம்.பி மார் தமிழகத்தில் முகாமிட்டு இருக்கிறார்கள். இனி இந்திய எசமானர்கள் இடுகிற கட்டளைகளை நிறைவேற்ற எப்படித் தமிழ் மக்கள் கண்ணில் மிளகாய்ப் பொடி தூவுவது என்பது தான் அவர்களது கவலையாயிருக்கும்.

தமிழ் மக்கள் வழமையிலும் கொஞ்சங் கவனமாயிருக்க வேண்டிய காலம் இது.

## யாருக்காக வோட்டுக் கேட்கிறார்கள்?

மேல் மாகாணத்தில் யூ.என்.பி யில் ஒட்டிக் கொண்டு தேர்தலில் நிற்கிற தமிழ்ப் பிரதிநிதிகட்கும் ஐ.ம.சு.மு யில் ஒட்டிக் கொண்டு தேர்தலில் நிற்கிற தமிழ்ப் பிரதிநிதி கட்குமிடையில் என்ன வேறுபாடு என்றால் முன்னவர்கட்குத் தாங்கள் தேர்தலில் வெல்லுவதற்கான உபாயங்கள் கொஞ்சம் தெரியும் என்பது தான். பின்னவர்கள் வெல்லும் வாய்ப்புக் குறைவு என்றாலும் அவர்கள் சார்ந்துள்ள கட்சித் தலைவர்களது செல்வாக்குடன் வெல்லுவதற்கு நிறைய வாய்ப்பு உண்டு. இரண்டு தரப்பினரும் எங்க ளுக்கு வாக்களியுங்கள் வென்று தருகிறோம் என்று தான் சொல்லுகிறார்கள். இது ஏறத்தாழ எண்பது ஆண்டுகளாகச் கேட்டுச் சலித்த கதை. தங்களது எசமான்களை அதிகாரத்தில் இருத்த அவர்கட்கு அவதி. தமிழ் மக்கள் ஏன் அதற்காக ஏமாற வேண்டும்?

## இன்னமும் அதே பழைய ஊளைகள்

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பலஸ்தீனம், நேபாளம் போன்றவற்றிலிருந்து கற்க வேண்டும் அன்று யாருஞ் சொல்லுகிற போதெல்லாம் யாரிடமிருந்தும் தமிழர் போராட்டம் எதையுங் கற்க வேண்டியதில்லை. அவர்கள் எல்லாருக்கும் கற்பிக்கச் கூடியவர்கள் என்று வீறாப்புப் பேசியவர்கள் இன்றாவது தங்கள் பிழையை ஒப்புச் கொள்வார்களா கிடையவே கிடையாது. கீறல் விழுந்த பழைய கிராமபோன் ஒலித்தட்டு மாதிரிச் சீனா ஒழிக, பாக்கிஸ்தான் ஒழிக என்று பாடிக் கொண்டே இருக்கிறார்கள் அதை விட இன்னமும் இஸ்ரேலின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்கிற பழைய பல்லவியும் இடையிடையே கேட்கும். அது ஒயப்போவதில்லை. ஆனாலும் தமிழ்மக்கள் புதிய திசைகளைத் தேடத் தொடங்குகிற போது அவர்கள் ஒதுக்கப்பட்டுப் போவர்கள் என்பது உறுதி.

## மெய்யும் பொய்யும் பக்கசார்பின்மையும்

பி.பி.சி தமிழோசையிலும் ஆங்கிலச் செய்திகளிலும் பக்கச் சார்பற்றுச் செய்திகள் கூறப்படுவதாக ஒரு "பிதாமகர்" தனது பத்தியில் சொல்லியிருக்கிறார். கொஞ்ச மாதங்கள் முன்பு இதே பி.பி.சி இலங்கைத் தமிழர் பற்றி எப்படிப்பட்ட செய்தித் திரிப்பில் ஈடுபட்டது என்று அவருக்கு நினைவில்லை. எல்லா விடயங்களிலும் பி.பி.சி பக்கசார்பற்றுச் செய்திகளைக் கூறுகிறதா? தனக்கு வாய்ப்பாகப் பேசினால் மெய்யன். மாறாகப் பேசினால் பொய்யன். இதுதானா அவரது துலாக்கோல்?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழகத்தின் தேர்தல் அரசியலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையும்

இலங்கைத் தமிழர்கள் இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகி கொடிய யுத்தத்தால் தினம் தினம் செத்து மடிந்தவண்ணம் உள்ளனர். இந்தநிலை உச்சத்திற்கும் இறுதிக் கட்டத்திற்கும் வந்துள்ளது. தமிழ்நாட்டில் வாக்குச் சேகரித்து பாராளுமன்ற சட்டசபைப் பதவிகள் பெற்று அரசியல் நடாத்தும் கட்சிகள் இலங்கைத் தமிழர்களின் அவலங்களைத் தமக்குரிய வாக்குகளாக மாற்றுவதில் முன்னிற்கின்றன. "தடியும் முறியாது பாம்பிலும் நோகாது" என்ற கதை போன்றே பிரதான திராவிடக் கட்சிகளும் அதன் தலைவர்களும் நடந்து வந் திருக்கிறார்கள். இப்போது இந்தியப் பாராளுமன்றத்திற்கு தேர்தல் இடம் பெறக் கூடிய சூழலில் தமிழகக் கட்சிகளினதும் அவற்றின் தலைவர்களாலும் வேசம் கட்டல்களும் காட்சி காட்டல்களும் கண்ணீர் விட்டுக் கதறி அழும் கூத்துகளும் தாராளமாக இடம் பெற்று வருகின்றன.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக உண்மையான அக்கறையுடனும் அனுதாபத்துடனும் தமிழக மக்களின் உணர்வுகள் அவ்வப் போது வெளிவந்த வண்ணம் உள்ளன. அவை இலங்கை அரசாங்கத்தின் இன ஒடுக்குமுறைக்கும் யுத்த வழிமுறைகளுக்கும் எதிரான மக்கள்



சார்பு நிலைக்கு உட்பட்டதேயாகும். அத்தகைய மக்கள் எதிர்ப்புணர்வானது இலங்கை அரசுக்கு மட்டுமன்றி இந்திய வல்லாதிக்க மத்திய அரசுக்கும் எதிரானதாகும். இத்தகைய நேர்மையான மக்கள் எதிர்ப்புணர்வை தமிழ் நாட்டில் தேர்தல் நோக்கங்களுக்கு அப்பால் ஒழுங்குபடுத்தி வெளிப்படுத்துவதில் மாக்சிச லெனினிசப் புரட்சிகர அமைப்புகளும் கட்சிகளுமே முன்னெடுத்து வருகின்றன. காத்திரமானதும் கொள்கை வழிப்பட்டதுமான அவ் எதிர்ப்பை முதலாளித்துவ ஊடகங்கள் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வெளிக்காட்டாது இருட்டடிப்புச் செய்து கொள்கின்றன. அது மட்டுமன்றி இலங்கையில் தமிழர்களுக்கான தரப்புக்களும் கவனத்தில் கொள்வதில்லை. ஏனெனில் அத்தகைய சக்திகளின் வர்க்க நிலைப்பாடும் தமிழ் நாட்டு - இந்தியத் தலைமைகளின் மீதான எசமானர் வழிபாட்டு அடிமை மனப்பான்மை நிலைப்பாடுமேயாகும். இத்தகையோர் தமிழக மக்களின் குறிப்பாக உழைக்கும் மக்களின் ஆதரவைப் பெறுவதை விட மாநிலத்தில் கருணாநிதி, ஜெயலலிதா, வை.கோ, திருமாவளவன், சினிமா நட்சத்திரங்களிடம் ஆதரவையும் அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெறவே நிற்கிறார்கள். அதே போன்று மத்திய அரசியலில் புள்ளிகளாக உள்ள சோனியா மன்மோகன்சிங் அத்வானி போன்ற தலைவர்களிடம் எதிர்பார்த்து நிற்கும் நிலையிலே உள்ள பரிதாபம் தொடர்கிறது. அடித்தாலும் உதைத்து விரட்டினாலும் நீங்களே ரட்சிக்க வேண்டும் என்ற நிலையிலேயே இலங்கைத் தமிழர் தரப்புக்கள் இருந்து வருகின்றன.

இப்போது பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற உள்ள சூழலில் தி.மு.க, அ.தி.மு.க, அணிகளுக்கிடையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்வைத்து ஏட்டிக்குப் போட்டி பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. இதில் அவதானிக்க வேண்டியது என்ன வெனில் இந்திய மக்களும் தமிழ்நாட்டு மக்களும் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் ஏராளம். தமிழ்நாட்டில் மக்களது அன்றாட வாழ்வு மிக மோசமடைந்துள்ளது. கருணாநிதியின் "பச்சைத் தமிழன்" ஆட்சியில் பல்வேறு கொடுமைகள் நடந்துள்ளன. ஏற்கனவே ஜெயலலிதா ஆட்சியும் அதற்குக் குறைந்த அளவில் இருந்ததில்லை. இருப்பினும் இவ்விருவரும் தான் தமிழகத்தை மீண்டும் மீண்டும் ஆள்வதற்கு வரிந்து கட்டி நிற்கிறார்கள்.

கருனாநிதி இலங்கைத் தமிழர்களுக்காக கலங்கித் தவிப்பதாகக் கூறுகிறார். உண்மையில் அவரது கலக்கமும் தவிப்பும் அடுத்த ஆட்சி பீடத்தில் தானும் தனது குடும்பமும் இருக்க முடியாத சூழல் வந்து விடுமோ என்பதாகவே உள்ளது. அதே வேளை ஜெயலலிதா எப்படியும் அடுத்த ஆட்சிக் கட்டிலைப் பிடித்து விட வேண்டும் என்றே முனைப்புக் காட்டி நிற்பதுடன் இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் வடிப்பதுவும் ராமதாசும் திருமாவளவனும் தத்தமது தேர்தல் அரசியல் இருப்புக்காகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தூக்கி நிற்கிறார்கள். அத்துடன் வேறு நிகழ்ச்சி நிரல்களுடனும் அவர்கள் சம்மந்தப்பட்டிருக்கிறார்களே தவிர மக்கள் சார்புநிலையில் அல்ல என்பதே மறைந்திருக்கும் உண்மையாகும். இத்தகைய தமிழகத் தலைமைகளால் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வாறு உதவ முடியும். இறுதி நேரத்திலாவது எந்தவொரு தமிழ் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினரோ அன்றி சட்டசபை உறுப்பினரோ தமது பதவியைத் துறந்து கொள்ளமுன்வரவில்லை. அதனை ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக்க முடியவில்லை. ஏனெனில் அவர்களது இலக்கு அத்தகைய பதவிகள் மீதானதேயாகும்.

இவ்வேளையில் "பெரியார்" ஈ.வே.ரா வின் ஒரு கூற்று நோக்கத் தக்கதாகும். "நீங்களும் அடிமைகளாக உள்ளீர்கள் நாங்களும் அடிமைகளாகவே உள்ளோம். இந்நிலையில் ஒரு அடிமை மற்றொரு அடிமைக்கு எவ்வாறு உதவ முடியும்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த எஸ். ஜே.வி. செல்வநாயகத்திடம் பெரியார் கூறினாராம். இது 1974ல் அவரிடம் ஆதரவு கேட்டுச் சென்ற தமிழரசுக் கட்சித்தலைவருக்கு கூறப்பட்டதாகும்.

பெரியாரின் கூற்றில் உள்ள உண்மையாதெனில் தமிழக மக்கள் நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தினால் இந்திய ஆளும் வர்க்கத்தால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறே இலங்கைத் தமிழர்களும் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதாகும். கருணாநிதியும் ஜெயலலிதாவும் ராமதாசும் வை.கோ.வும் மத்திய ஆளும் வர்க்கத்திற்கு அடிமைகளாக்வும் ஏகாதிபத்தியத்திற்கு அடிமை சேவகம் செய்யவர்களாகவும் உள்ள நிலையில் எப்படி இலங்கைத் தமிழர்களுக்கு உதவ முடியும். அம்மா தாயே சோனியாவே அடிபணிந்து தயவாகக் கேட்கிறேன்" என்று 87 வயது முதிய தமிழர் தலைவன் கருணாநிதி முழந்தாளிட்டு தனது அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் போது தமிழர்களின் தன்மானம் எந்தளவிற்கு விலைபோகிறது. இதனை இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு விளங்கிக் கொள்வது.

எனவே தான் தேர்தல் அரசியல் நடாத்தும் ஆளும் வர்க்க கட்சிகள் வெறும் தமிழ்இன மொழி லேபல்களில் வாய்ப்பந்தல் போடுவதை நம்பி இலங்கைத் தமிழர்கள் ஏமாந்து விடமுடியாது. எனவே உழைக்கும் தமிழக மக்களின் வர்க்க அரசியலுடன் ஐக்கியப்படுவதே சரியான வழிமுறையாகும்.

குகன்

# மேல் மாகாணசபைத் தேர்தலில் இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்!

## புதிய-ஜனநாயக கட்சி வேண்டுகோள்


எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணிக்கோ அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கோ அவற்றில் இணைந்து நிற்பவர்களுக்கோ வாக்களிப்பது அர்த்தமற்ற செயற்பாடாகும். அதனால் மக்களைப் பாதிப்பதாகத் தொடர்ந்து இருந்து வரும் பிரச்சினைகள் எதுவும் தீர்ந்து விடப் போவதுமில்லை. அதற்குப் பதிலாக வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புகளுக்கு எதிராகவும் யுத்தத்திற்கு எதிராகவும் ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வற்புறுத்தியும் வரும் இடதுசாரிகளுக்குக் குறிப்பாக மேசைச் சின்னத்தில் போட்டியிடும் இடதுசாரி முன்னணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதையே புதிய-ஜனநாயகக் கட்சி வேண்டிக் கொள்கிறது.

இவ்வாறு புதிய- ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மேல்மாகாண சபைத் தேர்தல் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையிஜல், விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான மேசைச் சின்னத்தில் போட்டியிடும் இடதுசாரி முன்னணியின் சில குறிப்பிட்ட நிலைப்பாடுகளில் எமது கட்சிக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. அவற்றை அக் கட்சியின் தலைமைத்துவத்திடம் அண்மையில் இடம்பெற்ற இரு கட்சிக் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டியிருந்தோம். இருப்பினும் இன்றைய சூழலில் ஒரு வலுவான இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஐக்கியம் கட்டியெழுப்பப்படும் தேவையை முன்னிறுத்தியும் இரண்டு ஆளும் வர்க்கக் கூட்டணிகளை நிராகரிக்கவும் இடதுசாரி முன்னணிக்கு வாக்களிப்பதே சரியான தெரிவாகும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

மேல்மாகான சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கோ அதனுடன் இணைந்து நிற்கும் வேட்பாளர்களுக்கோ வாக்களிப்பதால் மக்களுக்கு எவ்வித பலாபலன்களும் ஏற்படப் போவதில்லை. இவ் இரு தரப்பினரும் கடந்த முப்பது ஆண்டுகளாக நாட்டையும் மக்களையும் நாசகாரப் பாதையில் வழி நடத்தி வந்தவர்களாவர். இவர்கள் மாறி மாறி அதிகாரத்திற்கு வரவும் பதவிகள் பெறவும் சொத்து சுகம் பெறவும் நிற்கிறார்களே தவிர எந்தவொரு மக்கள் பிரவினருக்கும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கத் தயாராக இல்லை. எனவே இடதுசாரி சக்திகளுக்கு பலம் சேர்க்கும் வகையில் மக்கள் தமது வாக்குகளை இடதுசாரி முன்னணிக்கும் அதன் மேசைச் சின்னத்திற்கும் வழங்குமாறு மேல்மாகாண வாக்காளர்களைப் புதிய-ஜனநாயகக் கட்சி கேட்டுக் கொள்கிறது.

## தோழர் சந்திரகுமார் 4 ம் ஆண்டு நினைவாக



வாழ்வொன்றின் பெறுமதி
வாழ் நாட்களின் எண்ணிக்கையோ
ஏட்டுப்படிப்பும் பட்டங்களுமோ
ஈட்டிய பொருளோ
சாதனைப் பட்டியல்களோ புகழுரைகளோ
கொண்டு அளக்கப்படுமெனின்
ஒரு நல்ல கம்யூனிஸ்ற் தோழரின் வாழ்வின் பெறுமதி
எந்த இன்னொரு வாழ்வினதும் பெறுமதி போலவோ
அல்லது பகைவர் கூறும் விதமாகப்
பயனும் பெறுமதியும் அற்றதாகவோ தெரியலாம்

ஒரு நல்ல தோழரின் உயர்வு
ஒரு நல்ல தோழராக வாழ்வதாலேயே அமைகிறது.
மக்களோடு மக்களாக நின்று
போராட்டப் பாதையைக் காட்டிப்
போராட்ட வழி சென்று
வஞ்சிக்கப்பட்டோரின் ரட்சகன் என்ற
பாவனை ஏதுமின்றி
மக்களின் வலிமையை மக்களே அறியவும்
மக்களின் விடுதலையை மக்களே வெல்லவும்
வாழ்வே போராட்டமாய்ப்
போராட்டமே வாழ்வாய்
உயர்வு காண்கிறதால், அவர்
மரித்தாலும்
என்றென்றும் மக்களிடை வாழுகிறார்.
ஒரு நல்ல தோழரின்
ஒவ்வொரு நற்பணியும்
இன்னும் பல நூறு தோழர்களை உருவாக்கும்
இருக்கின்ற தோழர்கட்கு உரமூட்டி ஊக்குவிக்கும்.
ஒரு நல்ல தோழரின்
ஒவ்வொரு நாட் போராட்ட வாழ்வும்
எத்தனையோ ஆயுட்காலங்கள் பெறும்.
அதனால்
அவரது மறைவின் கனம் ஒரு மலையின் அளவென்போம்
அவர் செய்த பணிகளின் கனமோ
எத்தனையோ மலைகள் பெறும்!
கடக்க எத்தனை மலைபோல் தடைகள்!
சுமக்க எத்தனை மலைபோல் பணிகள்!
மறைந்த தோழரின் மறையா நினைவு
எங்கள் தோள்களை வலிமை செய்யும்
மலைகளை எல்லாம் மாறுடம் வெல்லும்.

செவ்வரும்பு நினைவுமலரிலிருந்து
19.03.2005

# எழுப்பபடும் கேள்விகளும் தேடப்படும் விடைகளும்

போர் மூலம் மட்டுமே தேசிய இனப்பிரச்சினைத் தீர்க்க இயலுமா?
போர்களை யார் வென்றாலும் தோற்றாலும் பேரினவாதத்தையும் குறுகிய தேசிய வாதத்தையும் ஒழிக்க முடியுமா?
நமது தேசிய இனப்பிரச்சினை தனியே வடக்கு கிழக்கின் தமிழருக்கும் சிங்களப் பெரும்பான்மையினருக்கும் இடையிலானதா?
மலையக மக்களும் முஸ்லிம்களும் தனித்துவமான தேசிய இனங்கள் என நாம் ஏற்கிறோமா?
எல்லாத் தேசிய இனங்களதும் சுயநிர்ணய உரிமையை நிபந்தனையின்றி ஏற்கிறோமா?
இலங்கையில் மோசமாகி வரும் சனநாயகத்துக்கு எதிரான மிரட்டல் பற்றிய நிலைப்பாடென்ன?
இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைவது பற்றி நமது பார்வை என்ன?
இலங்கையில் மனித உரிமை மீறல்களை பற்றிய நமது பார்வை என்ன?
மேற்கூறிய நெருக்கடிகள் தமிழரை மட்டுந்தான் பாதிக்கின்றனவா?
உலக நாடுகட்கு இலங்கைத் தமிழர் பற்றி அக்கறை எதுவும் உண்டா?
இந்தியாவின் அக்கறை எவரது நலன் சார்ந்தது?
இன்றைய சூழலில் எந்த நாடுகளின் மேலாதிக்கம் ஓங்கியுள்ளது?
இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் எந்த அயற் குறுகீட்டாலும் நன்மை கிட்டுமா எவ்வாறு?
இந்தியா, சீனா,அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் அயல் நாடுகளில் தமது படைகளை நிறுவியுள்ள நாடுகள் எவை?
அயல்நாடுகளை மிரட்டியுள்ள நாடுகள் எவை?
அயல் நாடுகளைப் படையெடுப்பின் மூலமோ இராணுவச் சதி மூலமோ தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தவை எவை?
ஐ.நா.சபை என்பது பக்கச்சார்பற்ற அமைப்பா?
இல்லையெனில் அது யாரின் சார்பாக இயங்கி வந்துள்ளது?
தமிழக அரசியல் தலைவர்களில் யாராவது இலங்கைத் தமிழருக்கு விரோதமாகச் செயற்பட்ட எந்த அரசாங்கத்திலிருந்தும் அந்தக் காரணத்திற்காக விலகிக் கொண்டுள்ளனரா? தமிழக அரசியற் கூட்டணிகட்குக் கொள்ளை அடிப்படை உண்டா?
புலம்பெயர்ந்த தமிழரதும் தமிழகத் தமிழரதும் உணர்ச்சிக் கொந்தளிப்பால் நன்மையடைய முயல்கிறவர்கள் யார்? உலகத் தமிழரின் அனுதாபம் வீணாக்கப்படுகிறதா? ஓம் எனில், ஏன்? எவ்வாறு?
தமிழ்த் தேசியவாதிகளது அணுகுமுறை எப்போதுமே சரியாக இருந்து வந்துள்ளதா? ஓமென்றால் இன்றைய அவலத்துக்குக் காரணமென்ன? இல்லையென்றால் மாற்று வழியென்ன?
விரிந்து செல்லக் கூடிய இவ்வாறான கேள்விகளில் தமது அரசியல் வியாக்கியானங்கட்கு பொருந்தி வருகிற சில கேள்கிகட்கேனும் நெஞ்சுக்குப் பொய்யாமல் விடை தேடிவிட்டு நமது அறிஞர்களும் நிபுணர்களும் ஆய்வாளர்களும் தமது கட்டுரைகளை எழுதினாற் பயனிருக்கும். தாங்கள் இதுவரை சொல்லி வந்த கருத்துகளில் பொய்த்துப் போனவை பற்றி நேர்மையாக சிந்தித்து அவை பற்றிய சில விளக்கங்களையேனும் இடையிடையே எழுதுவதற்கு மனதில் உறுதி வேண்டும். அதனை அவர்கள் செய்வார்களா?

தினக்குரல் 15-03-2009 வாரமலரின்
மறுபக்கம் பத்தியிலிருந்து

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உரிமையாளர்களிடம் கொத்தடிமைகளாக்கும் சதி முயற்சி

பெருந்தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்து நடத்தும் கம்பெனிகளிடமிருந்து தோட்டக்காணிகளை மீளப்பெற்று சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவை உபகுழு சிபாரிசு செய்துள்ளது. அமைச்சர் டி.ஈ.டபிள்யூ குணசேகர தலைமையிலான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜீவன் குமாரதுங்க, சமால் ராஜபக்ஜ ஆகியோரைக் கொண்ட குழுவே மேற்படி சிபாரிசை செய்துள்ளது.

பெருந்தோட்டக் கம்பெனிகள் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய வருடாந்த குத்தகைப்பணத்தையும் வர்த்தக வங்கிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தையும் கொடுக்காதபடியால் அக்கம்பெனிகளின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்த அமைச்சரவை உப குழுவே மேற்படி சிபாரிசை செய்துள்ளது. இந்த சிபாரிசு மூலம் சட்டியிலிருந்து தொழிலாளர்களை அடுப்பில் போடுவதாக அமையும் என தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சிறுதோட்ட உரிமையாளர்களின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்கள் எவ்வித தொழிற்சங்க உரிமைகளுமற்ற கொத்தடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர். இவ்வாறான நிலைமையில் தொழிலாளர்களை பெருந்தோட்டக்கம்பெனிகளிடமிருந்து சிறுதோட்ட உரிமையாளர்களின் உடமையாக்குவது தொழிலாளர்களை மேலும் பிரச்சினைக்குள்ளாக்கிறது. தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தை உள்ளடக்கிய மலையகத் தமிழ்த் தேசிய இனத்தை சிதைப்பதாகும்.

## வரலாறு

தேயிலை றப்பர் தென்னை பெருந்தோட்டங்கள் 1800 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் காலனித்துவ வாதிகளால் இந்தியாவிலிருந்து இங்கு அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களால் (மலையகத் தோட்டத்தொழிலாளர்களால்) உருவாக்கப்பட்டன. பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கு பெரும்பாலான தோட்டங்களும், சிறிய அளவில் உள்நாட்டு முதலாளிகளுக்கும் சொந்தமாக இருந்தன.

1972 ஆம் ஆண்டு காணி சீரத்திருத்தச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு சொந்தமான காணியின் பரப்பளவு 50 ஏக்கராக வரையறுக்கப்பட்டதனால் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றது. 1975 ஆம் ஆண்டு விசால கூட்டுறவு சட்டத்தின் கீழ் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கூடாக பெருந்தோட்டங்கள் பொறுப்பேறகப்பட்டன

**இ.தம்பையா**

அதை விட உசவசம, நட்சா போன்ற அரசாங்கத் திட்டங்களினால் பெருந்தோட்டங்கள் மூடப்பட்டு வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பெருந்தோட்ட காணிகளில் திட்டமிட்டவாறு பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. மேற்படி அரசாங்கத்தின் இரண்டு அமைப்புகளால் 1992ஆம் ஆண்டுவரை தோட்டங்கள் நடத்தப்பட்டன. அவை லாபமாக இயங்கவில்லை என்று கூறப்பட்டு உலக வங்கியின் ஆலோசனையின்படி மீளமைப்பு செய்தல் என்ற பெயரில் தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் ஆரம்பத்தில் 50 வருடங்களுக்கும் பின்னர் 99 வருடங்களுக்கும் குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. அகலவத்த, அக்கரபத்தன, பலாங்கொட, பொகவந்தலாவ, எல்பிட்டிய, ஹப்புகஸ்தன்ன, ஹொரண, கஹவத்த, கேகாலை, களனிவெளி, கொட்டகலை, மடுல்சீம, மல்வத்த வெளி, மஸ்கெலிய, மத்துரட்ட, நமுனுகுல, புஸ்ஸல்லாவை, தலவாக்கொல்லை, உடபுஸ்ஸல்லவை, வட்டவளை, குருநாகல், சிலாபம், எல்கடுவ, ஆகிய 23 கம்பெனிகள் அழைக்கப்பட்டு பெருந்தோட்டங்கள் அவற்றுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. இந்த 23 கம்பெனிகளில் குருநாகல், சிலாபம், எல்கடுவ ஆகிய கம்பெனிகள் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றிடம் வைத்துக்கொள்ளப்பட்டு ஏனையுவை தனியாரிடம் கொடுக்கப்பட்டன.

அந்த 20 கம்பெனிகளுக்கும் வரிச்சலுகை கொடுக்கப்பட்டு அரசாங்கங்கள் ஊக்குவிப்புக்களை வழங்கி வருகிறது. இருந்தபோதும் அவை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய வருடாந்த குத்தகைப் பணத்தை கொடுக்காமல் இருக்கின்றன. தோட்டங்களை குத்தகைக்கு எடுத்த கம்பெனிகள் அவற்றை முகாமை செய்வதற்கு முகாமைத்துவ கம்பெனிகளிடம் ஒப்படைத்திருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகள் பலவற்றை மறுத்து வேலை நிபந்தனைகளை அதிகரித்து, சம்பள உயர்வுகளை வழங்க மறுத்து, பெருந்தோட்ட வளங்கள் அனைத்தையும் சூறையாடி வருகின்ற பெருந்தோட்டக் கம்பெனிகள் அரசாங்கத்திற்கு வழங்க வேண்டிய குத்தகைப் பணத்தையும் வழங்கவில்லை. அவை பெருந்தொகையான நிலுவையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தின் அக்கறை

பெருந்தோட்டக் கம்பெனிகள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய குத்தகைப்பணத்தை செலுத்தாது நட்டத்தில் இயங்குவதாகக் கூறி வருகின்றன. உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்றுமதியிலும் வீழ்ச்சி இவ்வாறு பலகதைகள் கூறப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் இவற்றைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நெவில் பியதிகர என்பவரின் தலைமையிலான 10 பேரைக் கொண்ட குழுவை அரசாங்கம் நியமித்திருந்தது. அதன் அறிக்கையின்படி அரசாங்கத்திற்கு கம்பெனிகள் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைப்பணம் 291 மில்லியன் ரூபாய் ஆகும். அதன்படி அரசாங்கத்திற்கு கம்பெனிகள் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை குறைக்கும் படியும் முகாமைத்துவ பணத்தை குறைக்கும் படியும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அவ் வறிக்கையின்படி 2 லட்சம் தொழிலாளர்கள் தேயிலை, றப்பர், தென்னை பெருந்தோட்டங்களில் வேலை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அமைச்சர் டி.ஈ.டபிள்யூ குணசேகர தலைமையிலான அமைச்சரவை உப குழுவானது முற்றிலும் வேறு விதமான அறிக்கையை சமர்ப்பி த்துள்ளது. 1996-2007 வரை பெருந்தோட்டக் கம்பெனிகள் 291 மில்லியன் ரூபாவை அரசாங்கத் திற்கு குத்தகைப் பணத்தை செலுத்த வேண்டியதுடன், வர்த்தக வங்கிகளுக்கு 10.13 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டும். அதே வேளை முகாமைத்துவத்திற் கென 10.059 பிலியன் ரூபாவை கம்பெனிகள் அரசாங்கத்திட மிருந்து பெற்றுக் கொண்டுள்ளன. அக்கம் பெனிகள் தோட்டங்களை ஒழுங்கான புனரமைப்பு, பராமரிப்பு, நடவடிக்கைகளை மேற் கொள்ளவில்லை என்று "கண்டு பிடிக்கப்பட்டுள்ளது". அக்கம்பெ னிகளிடம் இருக்கும் 408, 487 ஹெக்டெயர் காணியில் கடந்த 10 வருடங்களில் 5000 ஏக்கரில் மட்டும் தேயிலை, றப்பர், மீள் நடுகை செய்யப்பட்டுள்ளன. அவை லாபத்தில் 20 வீதத்தை முகாமைத்துவ பணமாக எடுத்துக் கொள்கின்றன. ஒரு கம்பெனி கடந்த 10 வருடங்களாக அரசாங்கத்திற்கு குத்தகைப் பணத்தை செலுத்தாதபோதும் 700 மில்லியன் ரூபாவை முகாமைத்துவ பணமாக எடுத்துக் கொண்டுள்ளது.

அதே வேளை பெருந்தோட்டக் கம்பெனிகளின் கீழ் 4 லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும் அமைச்சரவை உப குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது. இந்த அறிக்கைகளும் கண்டுப்பிடிப்புக்களும் சரியானவையாக இருக்கலாம்.

## கம்பெனிகளின் மோசடி

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சம்பள் உயர்வைப் பெற்றுக் கொள்வதற்காக தொழிலாளர்கள் பாரிய போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். சம்பள உயர்வுகளை வழங்க வேண்டிய வேளைகளில் கம்பெனிகள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்படுவதுண்டு. தொழிலாளர்களுக்கு அதிகமாக சம்பளம் கொடுப்பதாலேயே நட்டம் ஏற்படுவதாக கம்பெனிகள் தெரிவிப்பதுண்டு. தொழிலாளி ஒருவரின் உயர்ந்த பட்ச நாளாந்த சம்பளம் 265 ரூபாவாகும். அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய குத்தகைப் பணத்தை செலுத்தாது மட்டுமன்றி தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கான பணப் பொறுப்பான திணைக்களங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை. என்று குற்றம் சாட்டப்படுகிறது. அது மட்டுமன்றி தொழிற்சங்கங்களுக்கென கழிக்கப்படும் மாதாந்த தொழிற்சங்க சந்தாப்பணத்தையும் (அங்கத்துவ பணம்) தொழிற்சங்கங்களுக்கு அனுப்பப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பலவிதமான குற்றங்களும் விமர்சனங்களும் இருப்பதனால் தோட்டங்களை கம்பெனிகளிடம் தொடர்ந்தும் விட்டு வைக்க முடியாது. இந்நிலையில் தோட்டங்களும் தோட்டப் பொருளாதாரமும் தொழிலாளர்களும் கொள்ளைக்கார பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது.

## அமைச்சரவை உப குழுவின் தவறான சிபாரிசு.

அரசாங்கத்திற்கு கொடுக்கப்படவேண்டிய குத்தகைப்பணத்தை செலுத்தாமையால் விசாரணைக்குழு அமைக்கப்பட்டு ஆராயப்பட்டது. கம்பெனிகளின் ஊழல் பற்றி அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தொழிலாளர்களின் நியாயமான சம்பளத் திட்டம் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை பாதுகாத்தல் போன்றவற்றில் அமைச்சரவை உபகுழு கவனஞ் செலுத்தத் தவறிவிட்டது. பெருந்தோட்ட உற்பத்தியில் 76 சதவீதத்தை சிறு தோட்ட உரிமையாளர்களே செய்வதாகவும் அதனால் பெருந்தோட்டக் கம்பெனிகளின் குத்தகைக்கு கீழிருக்கும் 408487 ஹெக்டெயர் காணியை அல்லது 461 தோட்டங்களை அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென அமைச்ச ரவை உபகுழு விபாரிசு செய்துள்ளது. தனியார் கம்பெனிகளுக்கு தோட்டங்கள் ஒப்படைப்பதுடன் பல உரிமைகளை தொழிலாளர்கள் இழந்தனர். கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோதும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சம்பள உயர்வை பெற்றுக் கொள்வது மிகவும் கஷ்டமான காரியமாகவே இருக்கிறது. சம்பள உயர்வை தீர்மானிக்க வேண்டிய மார்ச் 31 கடந்து விட்ட போதும் அதைப் பற்றி எவ்வித பேச்சையும் தோட்டக் கம்பெனிகளோ தொழிற்சங்கங்களோ ஆரம்பிக்க தயாரில்லை. பிரதான பெருந்தோட்ட தொழிற்சங்கமென்று சொல்லப்படுகின்ற இ.தொ.கா. வின் தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தற்போது தேயிலை விலை வீழ்ச்சியடைந்திருப்பதால் சம்பள உயர்வை கேட்பது சரியாகாது என்று கூறியுள்ளார்.

அத்துடன் பெருந்தோட்டங்களை சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசு கவலையளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதை எதிர்ப்பதாக கூறுவதற்கு அவருக்கு துணிவில்லை. பெருந்தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டப்பிறகு தொழிலாளர்களின் சம்பள தொழிற்சங்க உரிமைகள் பறி போய்விட்டன. வீடு, வீட்டுத்தோட்டம், வைத்தியசாலை, வீதி, நீர் விநியோகம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பை பெருந்தோட்டக் கம்பெனிகள் தட்டிக் கழித்துவிட்டன.

தொடர்ச்சி 10ம் பக்கம்

# சம்பள வாசல்

— ஓடும்பிள்ளை

## புத்திஜீவிகளின் புரட்டல

தொழிற் சங்கங்களிலும் அரசியல் கட்சிகளிலும் படித்தவர்களுக்கு இடமில்லையென்று ஒரு மலையக சட்டத்தரணி தொலைக் காட்சியில் பேசினார். உண்மைதான். மலையக சமூகம் தொழிலாளர்கள் நலன்பற்றி சிந்திப்பவர்களுக்கு தொழிற்சங்கங்களில் அரசியல் கட்சிகளில் இடம் கொடுக்கப்படுவதில் என்பது உண்மையே.

மலையக தேசிய இனத்தின் இருப்பை அழிக்கும் மேல்கொத்மலை திட்டத்தினை ஆதரித்த மலையகப் படித்தவர்களுக்கு பட்டமும் பதவியும் கிடைத்துள்ளதே! ஆகவே மக்கள் விரோத நடவடிக்கைகளில் அரசாங்கத்திற்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும், என்.ஜி.ஓக்களுக்கும் துணைபோகும் படித்தவர்களுக்கு இடமில்லையென்று சொல்ல முடியுமா? மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்தினைக் காட்டிக் கொடுத்த மலையகப் படித்தவர்கள் பாதுகாப்பாகவும், பதவி சுகங்களுடனும் இருக்கின்றனரே! பெருந்தோட்ட தனியார் கம்பெனிகளினால் பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கும் தொழிலாளர்களுக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தற்போது ஒப்புவிக்கப்பட்டுள்ளது. மலையகத்திலுள்ள மாக்சியவாதிகள் தோட்டங்களை தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்க கூடாது என்று போராடிய போது அவர்களை எள்ளி நகையாடி தனியர்ர் கம்பெனிகளிடம் ஒப்படைப்பதே சிறந்ததெனப் பேசிய, எழுதிய, மலையகப் படித்தவர்கள் இருக்கின்றனர். அவர்கள் இப்போது எதையும் கூறுமாட்டார்கள்., அப்போது அவர்கள் கூலிக்கு மாரடித்தார்கள். பெருந்தோட்டங்களை தனியார் மயமாக்க ஆய்வறிக்கை சமர்ப்பிக்க லட்சக்கணக்கில் பணம் வாங்கியதுடன், பட்டங்களையும் வாங்கிக் கொண்டனர். அவர்களில் ஒருவர் மலையகத்தின் படித்தவர்களில் மூத்தவர் என்று அறியப்படும் பேராசிரியர் எஸ். மூக்கையா. அவர் தற்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினருமாவார்.

மலையகத்தை சமூக ரீதியாகவும் சூழலியல் ரீதியாகவும் அழிக்கும் மேல்கொத்மலைத்திட்டம் சரியென ஆய்வறிக்கை சமர்ப்பித்த கலாநிதி (தற்போது) ஏ.எஸ். சந்திரபோஸ் மலையத்தை சேர்ந்த படித்தவர். மேல்கொத்மலைத் திட்டத்துக்கு எதிரான மக்கள் இயக்கம் நடத்திய போராட்டங்கள் முறியடிக்கப்பட்டாலும் தற்போது மக்கள் அத்திட்டத்தின் பாதிப்புக்களையும் அரசாங்கத்தின் பொய் வாக்குறுதிகளையும் நடைமுறை ரீதியாக உணர்கின்றனர். ஆனால் கலாநிதிப் பட்டம் பெற்றதற்காக அவருக்கு பாராட்டு விழாக்கள் நடைபெறுவதற்கோ குறைவில்லை. கலாநிதி பட்டம் பெறும் வரை அயலவனையும் திரும்பிப் பாராதவர் எப்படி மலையகத் தமிழ் மக்களினதும் தொழிலாளர்களினதும் உரிமைகள் பற்றி தெரிந்திருக்கவோ கவலைப்படவோ முடியும். பட்டம், பதவி பின்னர் சமூகத்திற்கு வழிகாட்டுவதாகப் பம்மாத்து. எல்லாம் உழைப்புத் தான் பெருந்தோட்டக் கம்பெனிகளை விட சிறு தோட்ட உரிமையாளர்களை உற்பத்தி திறமை கொண்டவர்களாக எடுத்துக்காட்டி பெருந்தோட்டங்களை அவர்களிடம் ஒப்படைப்பதே சரியென்று படிப்புகளையும், ஆய்வுகளையும் சிபாரிசுகளையும் அதே சந்திரபோஸ் செய்துள்ளதாக அறிய முடிகிறது. பெருந்தோட்ட கம்பெனிகள் என்ற சட்டியிலிருந்து சிறுதோட்ட உரிமையாளர்கள் என்ற அடுப்புக்குள் தொழிலாளர்களை வீழ்த்தும் அற்புதமான ஆய்வு. அவருக்கென்ன அவரது பெருமைக்காக அட்டன் ஹைலன்ஸ் கல்லூரி தேவை. வனராஜா தோட்டம் அட்டன் பகுதி எல்லாம் மறந்து விடலாம். அங்கு வாழும் தொழிலாளர்கள் மலையகத்தமிழ் தேசிய இனம் (இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் என்று அழைப்பதில் அவருக்கும் அலாதிப் பிரியம். கலாநிதி பட்டம் பெற்றது இந்தியாவிலாயிற்றே) பற்றியெல்லாம் அவருக்கென்ன கவலை?

ஒரு தனி மனிதன் தன்னளவில் முக்கியமில்லை தான். ஆனால் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு அவன் செய்யும் பங்களிப்புச் சரியென்றால் சிவனொளிபாத மலைக்கு ஒப்பிடும் அளவிற்கும் விசாலமான பரந்த மனசு தேவை. அவனின் பங்களிப்பு சமூகத்தை அழிப்பதற்கு துணைபோகுமாயின் அவனை சமூகத்துரோகி என்று சொல்வதற்கு தயக்கமோ கருமித்தனமோ இருக்கக் கூடாது. இதே சந்திரபோஸ் 1977 மே மாதம் 5ம் திகதி மலையகத்தின் 7 ஆயிரம் ஏக்கர் தேயிலை தோட்டகாணியில் பேரின வாத குடியேற்றம் நடைபெறுவதை தடுத்து நிறுத்திய போராட்டத்தில் பொலிஸாரால் சுடப்பட்டு தியாகியான சிவனுலட்சுமணனின் கொலைக்கு எதிரான அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மாணவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டு பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளானவர். அதனை இன்றும் மறக்க முடியாது. பிறகு ஹைலன்ட்ஸ் கல்லூரியின் அதிபரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று மாண வர்கள் நடத்திய போராட்டத்தில் அவரின் பங்களிப்பையும் தலைமைத்துவத்தையும் மறக்க இயலாது.

க.பொ.த உயர்தரத்தில் படிக்கும்போது அவரது வகுப்பினர் வெளியிட்ட "செந்துளி" என்ற கையெழுத்து சஞ்சிகையை மறக்க முடியாது. அதில் வெளிவந்த அவரது "பேரன் போராடப் போகிறானே" சிறுகதையை மறக்க முடியாது. பொலிஸ் அடக்குமுறைகளுக்கும் உள்ளான அவரின் உறுதியும் கூட்டுப் பொறுப்பும் மதிப்பிற்குரியவை. அவன் தனிமனிதன் தான். ஆனால் ஆக்கபூர்வமான அவரின் தனிமனிதப் பங்களிப்பு அற்புதமானவை. அழிவுபூர்வமான தனிமனிதப்பங்களிப்பு கண்டனத்துக்குரியவை. சமூகத்தின் அசைவியக்கத்திற்கு முன்னால் ஓடுபவன் சமூகத்திற்காக ஓடுவானாயின் முற்போக்கானவன் சுயநலத்திற்காக ஓடுவானயின் பிற்போக்கானவன். பேராசிரியர் மூக்கையா சொல்லாவிட்டாலும் பெருந்தோட்டங்களை தனியார் கம்பெனிகள் பொறுப்பேற்றிருக்கலாம். ஆனால் அதற்கு அவரும் பங்காளியாகி விட்டாரே. அதுவே நாம் முன் வைக்கும் விமர்சனம்.

கலாநிதி சந்திரபோஸ் சொல்லாவிட்டாலும் மேல்கொத்மலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கலாம். ஆனால் அந்நிலத்தை பாதுகாக்கப் போராடிய தியாகி சிவனு லட்சுமணனின் கொலையை கண்டித்து போராடிய அவரா அந்நிலத்தை காவுகொள்ளும் திட்டத்திற்கு உதவினார். பெருந்தோட்டங்களை சிறுதோட்ட உரிமையாளருக்கு பகிர்ந்தளிப்பதற்கு சந்திரபோஸின் ஆலோசனை மட்டும்தான் காரணமாக இருக்க முடியாது. ஆனால் அதுவும் காரணமாகி விட்டதே !

வாழ்க மலையகப் "புத்திஜீவிகள்". உய்யுமா மலையக சமூகம்?

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 16 ஏப்ரல் 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 122

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org.

# தொழிங்சங்க உரிமைகளைப் பறிக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரவாதம்

அரசாங்க சேவையிலுள்ளோரின் தொழிற்சங்க உரிமைகள் உட்பட பல உரிமைகளை பறிக்கும் வகையிலும் கட்டுப்படுத்தும் வகையிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடைமுறையில் இருக்கும் தாபனக்கோவையை திருத்தி அமைக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் 20ஆம் திகதி பெப்ரவரி 2009 வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை அரசாங்கத்துறை ஊழியர்கள் அனுபவித்து வந்த பல உரிமைகளைப் பறிப்பதாக இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் அமைந்துள்ளது.

அரசாங்கத்துறையிலுள்ள ஊழியர்களின் நியமனம் பதவி உயர்வு, பதவி நீக்கம், சம்பளம் விடுமுறை, ஒழுக்காற்று நடவடிக்கை தொழிற்சங்க உரிமை போன்றன பற்றிய ஒழுங்கு விதிகள் தாபனக்கோவை ஆகும். தற்போது நடைமுறையில் இருக்கும் தாபனக்கோவையில் தொழிலாளர்களுக்கு ஊழியர்களுக்கு இருக்கும் உரிமைகளை குறைத்து மதிப்பிட முடியாது. அந்த உரிமைகளைப் பாதிக்கும் வகையிலேயே அரசாங்க சேவை ஆணைக்குழு குறிப்பிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

தொழிங்சங்கமொன்றின் உத்தியோகத்தர் இருவருக்கு தொழிற்சங்க கடமைகளை செய்வதற்காக சேவை விடுவிப்பு வழங்கப்படுகிறது. இதனை கட்டுப்படுத்தி 5 வருடங்களுக்கு மட்டுமே சேவை விடுவிப்பு வழங்கப்படுமென்று புதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட ப்பட்டுள்ளது.

இதேபோன்று அரசாங்க ஊழியர் ஒருவரின் நியமனத்தை நிரந்தரமாக்குதல் பதவியுயர்வு போன்ற விடயங்களில் இதுவரை இருந்த பல அம்சங்கள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவைக்காகப் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் ஒருவரின் நியமனம் திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்தால் மட்டமே நிரந்தரமாக்கப்படுவது வழமை. ஆனால் அதற்கு காலவரையறை இருக்கவில்லை. புதிய வர்த்தமானி அறிவித்தலின் படி நியமனம் பெற்று மூன்று வருடங்களுக்குள் திறன்காண் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார். இவ்வாறு புதிய வர்த்தமானி அறிவித்தலில் அரசாங்க துறை ஊழியர்கள் இதுவரை அனுபவித்துவந்த உரிமைகளுக்கு கட்டுப்பாடு விதிப்பதாகவும் சில உரிமைகளைப் பறிப்பதாகவும் இருக்கிறது. அரசாங்க சேவை ஆணைக்குழு என்பது அரசியல் தலையீடற்ற நிர்வாகமுறையை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டதாகவே கூறப்படுவதுண்டு. முதலாளித்துவ ஆட்சிமுறையில் இவ்வாணைக்குழு நிர்வாக சுதந்திரத்தை உறுதிசெய்வதாக புகழப்படுவதுமுண்டு. அதே ஆணைக்குழு தான் இந்த புதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தாபனக்கோவையில் கூறப்பட்டுள்ள பல உரிமைகளைப் பாதிப்பதாக நடந்து கொண்டுள்ளது.

இதில் வேடிக்கை யாதெனில் அரசாங்க சேவை ஆணைக்குழு ஒரு சுதந்தரமான அமைப்பென்பதால் அது வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அரசாங்கத்திற்கு தெரியாது என்றும் அதற்கு பொது நிர்வாக அமைச்சு பொறுப்பில்லை என்றும் பொதுநிர்வாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளமைதான். தாபனக் கோவையும் அரசாங்க நிர்வாகமும் பொதுநிர்வாக அமைச்சின் பொறுப்பிலேயே இருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே,

17வது திருத்தச்சட்டத்தினூடாக அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சபையின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு சுதந்திரமாக இயங்குவதாகவும் தற்போது தாபனக்கோவை போன்றவை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பொறுப்பிலேயே இருப்பதாகவும் ஆனால் அது வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அரசாங்கம் பொறுப்பல்ல என்றும் அமைச்சர் அமுனுகம தெரிவித்திருக்கிறார். அரசாங்கத்துறை ஊழியர்களின் உரிமைகளை பறித்துவிட்டு அவர் சமாதானம் கூறுகிறார்.

அவர் முழுக்க முழுக்க மூலதனத்தின் பக்கமாக நின்று செயற்படும் முதலாளித்துவ அமைச்சர். அவர் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்று கூறப்படுவதிலுள்ள "சோசலிசம்" என்ற சொல்லை அகற்ற மேண்டுமென்றும் இலங்கை முதலாளித்துவ அரசன்றி சோசலிச அரசல்ல (உண்மையில் சோசலிச அரசல்ல என்பதை அவர் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. பெயரளவில் கூட அச் சொல்லை கொண்டு அழைக்கப்படக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்.) என்பதை அவர் அடிக்கடி தெரிவித்து வருகிறார். அவர் சொல்லில் மட்டுமல்ல செயலில் அதனை நிரூபிக்கவே தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் ஆர்வமாக இருக்கிறார்.

இலங்கையின் அரசாங்க நிர்வாக சேவை சீரழிக்கப்பட்டு திறமையற்றதாக இருப்பது உண்மை. அதை சீரமைப்பதற்கு அதில் நிலவும் ஆளும் அரசியல் கட்சிசார் நிகழ்ச்சி நிரல், மோசடி, ஊழல் போன்றன களையப்படுவதற்காக இதுவரை ஊழியர்கள் அனுபவித்து வரும் உரிமைகளை பறிப்பது எந்தவகையிலும் நியாயமாகாது. அரசியல் நிர்வாகத்தை சீரமைப்பதென்ற பெயரில் பூகோளம யமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து ஆட்குறைப்பு செய் வது போன்ற தொழிலாளர் விரோத நடவடிக்கைகளையும் அடக்குமுறைகளையும் மேற்கொள்வதே இலங்கை அரசாங்க த்தின் கொள்கை ஆகும்.

அதன் ஒரு வெளிப்பாடே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் குறித்த வர்த்தமானி அறிவித்தலா கும்.

அரசாங்க சேவை, ஆணைக்குழு சுதந்திரமான நிறுவனம் என்று கூறப்படுகின்றபோதும் தற்போதைய ஆணைக்குழு சட்டபூர்வமானதா என்பது கேள்வி ஆகும். ஏனெனில் அரசாங்க சேவைக்குழு உறுப்பினர்கள் போன்ற உயர்பதவிகளுக்கு அரசியலமைப்பு சபையேச் நியமனங்களைச் செய்ய வேண்டும். அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே நிலவும் இழுபறி அல்லது இணக்கப்பாடின்மையால் அரசியலமைப்பு சபையே இயங்கவில்லை. எனவே முறையான அரசியலமைப்புச் சபையால் நியமிக்கப்படாது அதேவேளை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்கள் எப்படி அரசாங்கசேவை ஆணைக் குழுவாக இயங்க முடியும்? அப்படி இயங்குவது சட்டப்படியான தாக இல்லா விட்டால் அது வெளியிட்டுள்ள அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் எப்படி சட்டபூர்வமானதாகும். எவ்வகையிலும் இருக்கும் உரிமை களைப் பறிப்பதாக அமைவதான குறித்த அந்தவர்த்தமானி அறிவித்தல் சட்டபூர்வமானதல்ல. அது தாபனக் கோவைக்கு பதிலீடாக அமையமுடியாது அதனால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைப்படுத்தக் கூடாது. இதற்குமப்பால் தற்போதைய அரசாங்க சேவை ஆணைக்குழு பூகோளமயமாதலின் கீழ் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரவாத முதலாளிவர்க்க நிறுவனமாக செயற்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அதிகாரவாத முதலாளிவர்க்கம் பூகோளமயமாதல் சூழ்நிலையில் அதனை இயக்குவதில் சக்திவாய்ந்த அதிகாரிகள் வர்க்கமாக செயற்படுகிறது. அதன் வெளிப்பாடாக அவ்வாணைக்குழு இலங்கை அரசாங்கத்துறை ஊழியர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அதிகார வர்க்க அமைப்பாக நிறுவப்பட்டுள்ளது. இது தொழிலாளர் வர்க்கத்திற்கு ஆபத்தானதாகும். இதனைத் தொழிலாளர் வர்க்கம் எதிர்க்க வேண்டியுள்ளது.

அரசாங்கத்துறை தொழிலாளர்கள் மீதான அரசியல் கட்சி ரீதியான அடக்குமுறைகளுக்கு எதிராக சுதந்திரமாக இயங்குவதற்காக அமைக்கப்பட்டதாக கூறப்படும் அரசாங்க சேவை ஆணைக்குழு தொழிலாளர்களுக்கு பாதகமாக செயற்படுவதை எப்படி சகித்துக் கொள்வது. புதன்கிழமை தோறும் பொதுமக்கள் அல்லது ஊழியர்கள் தங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு நேரடியாக செல்லக் கூடியதாக இருந்த நடைமுறை தற்போது மாற்றமடைந்துள்ளது. பொதுமக்கள் நாள் என்பது தற்போது இல்லை. அதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்குமான ஆணைக்குழு அவர்களிடமிருந்து பிரிந்து "சுதந்திரமாக" இயங்குகிறது. இதுதான் அரச நிர்வாகத்தின் நடுநிலையும் சுதந்திரமும். இவ்விதமான மாற்றங்கள் எந்த எசமான்களின் பரிந்துரைகளினால் முன்னெடுக்கப்படுகிறது.

**ஆசிரியர் குழு**

# அவசரகாலச் சட்டமும் அரசியல் பழிவாங்கலும்

**ஜனநாயகம் என்றால் என்ன?** அதற்கு விளக்கம் யாது என்று கேட்டவுடன் "மக்களுக்காக மக்களால் மக்கள் மீது நடைமுறைப்படுத்தப்படுவதே ஜனநாயகமாகும். இதனை ஜனநாயகத்திற்கான அருள் வாக்காக அருளியவர் முன்னாள் ஐ.அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் என்பதும் அதுவே இன்றுவரை ஜனநாயகத்திற்கான உயர்ந்த விளக்கவுரையாகவும் இருந்து வருகிறது. சிறு வயது முதல் மாணவர்களின் மூளைகளில் பதிய வைக்கப்படும் இவ் ஜனநாயகத்திற்கான விளக்கம் வாழையடி வாழையாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் சாரம்சத்தில் மீது கேள்வி எழுப்பி அப்படிக் கூறப்படும் ஜனநாயக விளக்கம் முதலாளித்துவத்திற்கும் அதன் உறுதிப்பாட்டிற்கும் உரிய ஒன்று தான் தவிர மக்களுக்குரிய ஜனநாயகம் இல்லை என்று கூறினால் அதனை ஏற்றுக் கொள்வது பலருக்கு சிரமமானதாகவே உள்ளது. ஆனால் சற்று ஆழ்ந்து நோக்கி சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் விளக்கம் காண முனைவோர் பொத்தம் பொதுவாகக் கூறப்படும் ஜனநாயகம் என்று கூறப்படுவதற்கு பின்னால் உள்ள சாரம்சத்தின் உண்மைகளைத் தெரிந்து கொள்வர். அதன் பின் அது பற்றிய மயக்கத்திற்கு ஆட்பட நியாயமில்லை.

அவ்வாறு அவசரகாலச் சட்டம் என்றால் என்ன அதற்கான விளக்கம் யாது என்று கேட்போமாயின் "ஆளும் அரசாங்கங்களினால் ஆளும் வர்க்கத்தினருக்காக ஆளப்படும் மக்கள் மீது அடக்குமுறை செய்வதற்கான கருவியே அவசரகாலச் சட்டமாகும் " என்றே விளக்கமளிக்க முடியும். இதனை மேலும் விளக்குவதற்கு பின்நோக்கியும் பார்க்கலாம். சமகாலத்தையும் நோக்கலாம்.

இலங்கையில் முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறைமை ஏற்பட்டு அறுபத்திரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலப் பகுதியில் சுமார் மூன்றில் இரண்டிற்கு மேற்பட்ட காலம் இந்த அவசர காலச் சட்டத்தின் கீழேயே நாடு ஆளப்பட்டு வந்திருக்கிறது. கடந்த முப்பது ஆண்டுகளை எடுத்து நோக்கின் ஒரு சில வாரங்கள் மாதங்கள் மட்டுமே அவசரக் காலச்சட்டம் இன்றி ஆளப்பட்டிருப்கிறது. ஏன் என்று கேட்போமாயின் அதற்குரிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதாவது பாராளுமன்ற பலகட்சி ஆட்சிமுறை என்பது சாரம்சத்தில் முலாளித்துவ் ஜனநாயகத்தின் கீழான ஒரு பகட்டுத்தனமேயாகும். மக்களை ஏமாற்றி நீங்கள் தான் இந்நாட்டின் எசமானர்கள் என்று கூறி ஒரே ஒரு புள்ளடியைக் கவனமாகக் கீறுவதன் மூலம் நீங்கள் இந்நாட்டின் மன்னர்கள் ஆகிறீர்கள். தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளாகிய நாங்கள் உங்கள் விசுவாசம் மிக்க ஊழியர்கள் என்றே கூறிக் கொள்ளப்படுகிறது. இந்த ஊழியர்களின் நாளாந்த "சேவைகளை" பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர்கள் ஜனாதிபதி வடிவிலே காணும் போது தான் இந்த "மக்கள் ஊழியர்களின்" மகிமையை மக்கள் காணக் கூடியதாக இருக்கும். இத்தகைய ஆளும் வர்க்கத்தினரின் சுயரூபம் வெளிப்பட்டு மக்கள் பிரச்சினைகள் அதிகரித்து கண்டனம் எதிர்ப்புக்கள் செயல் வடிவ த்தில் போராட்டங்களாக மாறும் போது ஏற்கனவே நடைமுறையில் உள்ள சாதாரண சட்டங்களால் அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாது போகிறது. எனவே தான் அடக்கு முறையை நடைமுறைப்படுத்தவும் அரசு யந்திரமான ஆயுதப்படைகளுக்கு அதிகாரங்களைக் கையளிக்கவும் அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இது நிரந்தரமானதல்ல என்று காட்டப்படுவதற்கு மாதம் ஒரு முறை பாராளுமன்ற அங்கீகாரத்துடன் அது நீடிக்கப்படுகிறது. அதற்கான நியாயங்கள் பாராளுமன்றத்தில் ஒப்பிக்கப்படும்.

இத்தகைய அவசகாலச்சட்ட விதிகளை முன்னெடுப்பதில் பொலீஸ் உட்பட முப்படைகளும் மும்முரமாகப் பங்கு கொள்ளும். கைதுகள் சித்திரவதைகள் தடுத்து வைத்தல்கள் என்பன நீண்டு செல்லும். ஏதாவது ஒன்றின் காரணமாகவே அவசரகாலச் சட்டம் அமுலுக்கு

**வெகுஜனன்**

கொண்டு வரப்படும். உதாரணமாக வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கெதிராக, பின்பு ஜே.வி.பியின் கிளர்ச்சிக்கு எதிராக, அதன் பின் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக பின் புலிகள் இயக்கத்திற்கு எதிராக என்று கூறியே அவசரக்காலச் சட்டம் பிரயோகப்பட்டு வந்துள்ளது. இன்றும் கூட இச்சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் சமூகத்தினர் மட்டும் பாதிப்படையவில்லை. ஆளும் வர்க்கத்தினுருக்கு எதிராக யார் செயல்பட்டாலும் அவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களும் குற்றவாளிகளுமாவார். அச் சட்ட விதிகளுக்கு கீழ் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் படி எவரையும் தடுத்து வைக்க முடியும். ஒருவரை அரசியல் பழிவாங்கவோ அல்லது தமது அரசியல் எதிரிகளை தடுத்து வைத்து செயழிக்கச் செய்யவோ முடியும்.

சில ஊடகவியலாளர்கள் தமக்கு விரும்பாத அரசியல் செயற்பாட்டாளர்கள் ஏதாவது ஒரு காரணம் கூறப்பட்டு இவ் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்படுவது தொடர்ந்து இடம் பெறும் நடைமுறையாகியுள்ளது. நீதிமன்றங்கள் கூட தலையிட்டு நீதி வழங்க முடியாத அளவுக்கு அவசரகாலச் சட்ட விதிகளும் அதன் கீழான சட்ட ஏற்பாடுகளும் ஆக்கப்பட்டுள்ளவற்றை அவதானிக்க முடியும். ஆளுவோர் குறித்தொதுக்கிய குற்றங்களுக்கு தண்டிக்கக் கூடிய காரணங்கள் இல்லாத ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விசாரணை இன்றி இவ் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத்தகையோர் அரசியல் கைதிகளாகவே உள்ளனர். இவர்கள் கொலைகளோ கொள்ளைகளோ ஏனைய சமூக விரோதச் செயல்களோ புரிந்தவர்கள் அல்லர். எனவே தான் அவசர காலச் சட்டம் என்பது முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சிமுறையின் கீழ் ஆளப்படும் மக்களுக்கு எதிரானதாக அவர்களது அடிப்படை உரிமைகளை மறுப்பதாக அமைந்திருப்பதை காண முடிகிறது. ஒருவர் கேள்வி எழுப்பாதவரை அல்லது கண்டனம் கிளப்பாதவரை ஆளும் வர்க்கத்தின் அநீதியான ஆட்சியையும் அதன் மக்கள் விரோத செயற்பாடுகளையும் எதிர்க்காத வரை "நல்ல குடிமகன்" என ஆளும் வர்க்க சக்திகளும் அரசு யந்திரமும் நற்சாட்சிப் பத்திரமும் வழங்கிக் கொள்ளும். சராசரி குடிமகனாக யாவற்றையும் ஏற்று இருக்கும் வரை ஆளும் வர்க்கத்திற்கு எவ்விதப் பிரச்சினையும் இருக்கமாட்டாது. அதற்கு அப்பால் சென்று ஏன் எப்படி எதற்காக என்று சிந்திக்கவும், கூடிச் செயல்படவும், கருத்துக் களை எழுதி வெளியிடவும் முயலும் போது சட்டங்கள் தன் வேலையைச் செய்யவும் அச் சூழலில் தான் அரசாங்கத்தினதும் அரசு யந்திரத்தினதும் சுயரூபம் வெளிப்படும். அதற்கு அனுசரணை வழங்குவ்தற்காகவே அவசரகாலச் சட்டம் செயல்படுத்தப்படும். அப்போது அரசு யந்திரம் தேவையான அளவுக்கு அடக்கு முறைகளை செய்து கொள்ளும். இலங்கையில் அவசர காலச்சட்டம் கொண்டு வரப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் சம்மந்தப்பட்டவாக்ளாகக் கருதப்பட்டவர்கள் மட்டும் அடக்கு முறைகளினால் ஒடுக்கப்பட்டதில்லை. அதன் பேரில் ஏற்கனவே ஆளும் வர்க்கத்தினருக்கும் எதிரான கருத்துடையோரும் செயற்பாடுடையோரும் சிறைகளில் தள்ளப்பட்டும் இல்லாதொழிக்கப்பட்டும் வந்த வரலாறு இந் நாட்டில் உண்டு இதில் இன மொழி சமுக வேறுபாடுகள் காட்டப்படுவதில் என்போர் ஏற்கனவே அரசுயந்திரத்தின் புலனாய்வுப் பிரிவினால் மோப்பமிடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டிருப்பர். தருணம் வரும் வரை விட்டுவைக்கப்பட்டு நெருக்கடிகளும் போராட்டங்கள் வெடிக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றுடன் சம்மந்த மில்லாது விடினும் ஏதாவது ஒரு சாட்டிலும் சந்தேகத்திலும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல்வேறு அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்படுவர். இது தான் முதலாளித்துவ ஜனநாயகத்தின் பேரிலான சர்வாதிகராமாகும். இச் சர்வாதிகாரத்தின் க்ருவியே அவசரகாலச் சட்டமாகும். இதனை இலங்கை அனுபவத்தில் நிறையக் காண முடியும். உலக நாடுகளும் இதற்கு விதிவிலக் கல்ல.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடி!

தேசிய அபிவிருத்தி வங்கி (PDF) பிரதம நிறைவேற்று அதிகாரியான இரான் விக்கிரமரட்ண உலகளாவிய ரீதியில் பொருளாதாரம் பின்னடைந்துள்ளதையும் நிதி கரைந்து போயுள்ளதையும் நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். எனக் கூறியுள்ளார். எமது பொருளா தாரம் உலக பொருளாதாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. எமது ஏற்றுமதி அமெரிக்க சந்தைக்கும் ஐரோப்பிய சந்தைக்கும் மத்திய கிழக்கிற்கும் ஏனைய இடங்களுக்கும் செல்கின்றது. மேற் கூறப்பட்ட சந்தைகள் யாவும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. அதன் காரணமாக எமது ஏற்றுமதி பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக வியாபாரிகள் பணப் புரள்வில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். இதுவரை காலமும் அரசு நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏதும் இல்லையென்றது. இப்போது சர்வதேச நாணய நிதியத்திடம் சுமார் பத்தொன்பதினாயிரம் கோடி ரூபாய் (19000) கடனுக்காக மன்றா டுகிறது.

இந்த நிதியம் என்ன நிபந்தனைகளை விதிக்கப்போகின்றதென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நிதியம் சிறிய நாடுகளுக்கு உதவி வழங்கும்போது அரச தலையீடு இருக்கப்படாது என்றும் தனியார் துறைக்கு ஊக்கம் என்பது பற்றியும் மானியம் வழங்குவதை நிறுத்த வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கும். இதே நிபந்தனை களை ஐ.எம்.எவ் அமெரிக்காவிற்கோ பிரிட்டன், பிரான்சுக்கோ, ஜேர்மனிக்கோ விதிக்காது. அந்த நாடுகள் தற்போது மீட்பு நிதியெ ன்ற போர்வையில் பெரிய வங்கிகள் நிதி நிறுவனங்கள் என்பனவ ற்றை அரசமயமாக்கியுள்ளன.

1929-30 களில் ஏற்பட்ட முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி யின்போது சோவியத் யூனியன் பாதிப்புக்குள்ளாகாமல் இருந்தது. ஆனால் இன்று முன்னைய சோவியத் ஒன்றிய நாடுகளான பெலாறஸ், லற்வியா, உக் கிரேன் பெரும் பொருளாதார நெருக்கடியில் உள்ளன. முதலாளி த்துவத்தை ஏற்றுக்கொண்டதன் விளைவாக ஹங்கேரி, ருமேனியா, சேர்பியா, என்பன பாரிய நெருக்கடியில் சிக்கி உள்ளன. நாடுகள் தத்தம் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையை மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்கவேண்டுமென உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியுமும் ஆலோசனை, நிபந்தனை வழங்கி வருகின்றன.

அமெரிக்காவில் வரவு செலவுப் பற்றாக்குறை உள்நாட்டு உற்பத்தியின் 12 வீதத்தில் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது. உலகப் பொருளாதார நெருக்கடிக்கு எந்த் வகையிலும் காரணமாயிராத லத்வியா உக்கிரேன் ஆகியன சர்வதேச நிதியத்திடம் உதவிக்கு சென்றபோது பல நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. பெலரஸ் நாட்டிற்கு 250 கோடி டொலர் வழங்குவதற்காக அந்நாட்டின் நாணயத்தில் 20 வீத மதிப்பிறக்கத்துடன் ஊதியங்களில் கட்டுப்பாடும் விதித்துள்ளது. கங்கேரிக்கு 2510 கோடி டொலருக்காக செலவுக்குறைப்பு அரசு துறை ஊழியர்களின் சம்பளக் குறைப்பு நிபந்தனையானது. லத்வியாவுக்கு 1025 கோடி டொலர் வழங்கி ஊதியச் செலவின் குறைப்புடன் பற்றாக்குறையை 5 வீதத்தில் வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஐஸ்லாந்து ருமேனியா சேர்பியா, துருக்கி, உக்கிரேன் என்பவற்றிற்கு உதவி வழங்குமுகமாக நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

எமது விவசாய கைத்தொழில் துறைப் பொருள்களின் விலை வீழ்ச்சியால் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சி கண்டுள்ளது. உலக பொருளாதார வீழ்ச்சியால் எமது ஏற்றுமதியின் அளவும் குறைந்துள்ளது. ஜனவரி 2009ல் விவசாய ஏற்றுமதியானது ஐம்பது வீத வீழ்ச்சி கண்டுள்ளது. தேயிலையின் விலை 9.7 வீதத்தால் ரப்பர் 45.9 வீதத்தாலும் வீழ்ச்சிகண்டுள்ளது. வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் அனுப்பும் செலாவணி 6.6 வீத வீழ்ச்சி கண்டுள்ளது. குறிப்பிட்ட நாடுகளின் நாணயங்கள் பவுண்ஸ், யூரோ, அவுஸ்திரேலியா டொலர்கள் ஆகியன இங்கு அனுப்பப்படுகின்றன. இந்த நாணயங்களின் பெறுமதி அமெரிக்க டொலர்களில் வீழ்ச்சிகண்டுள்ளதால் உள்நாட்டிற்கு வரும் செலாவணி தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது மட்டுமல்ல யுத்தச் செலவு, அதிகரித்த அமைச்சரவை செலவு, மிகின் லங்கா போன்றவற்றின் விரயம், நாட்டின் பொருளாதா ரத்தை சீரழிக்கின்றது. மேலும் ஊழல் மோசடிகள் அரச தனியார் துறைகளில் கொடி கட்டிப் பறக்கின்றன. 2009ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நாடு மேலும் மிகப் பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்கும் என பொருளியல் துறை நிபுணர்கள் எதிர்வு கூறி வருகின்றனர். மேலும் பல தொழிற்சாலைகள் மூடப்படும். ஆயிரக்கணக்கில் வேலை இழப்பு ஏற்படும். இதற்கான ஆரம்பம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மகிந்த சிந்தனை அரசாங்கமும் ஜனாதிபதியும் மாற்று நடவடிக்கையாக எதைச் செய்யப் போகிறார்கள்? இதுவரை யுத்தத் திரையால் மறைத்து வந்தமை போன்று மேலும் தொடர முடியாத நிலையே தோன்றி உள்ளது. பொருளாதார நெருக்கடி என்ற பூனையை எத்தனை நாட்களுக்குத்தான் பைக்குள் மறைத்து வைத்திருக்க முடியும். அது விரைவில் வெளியே வரத்தான் செய்யும். அப்போது தான் மக்கள் விழித்தெழும் சந்தர்ப்பம் உருவாகும். காலதாமதமான விழிப்பானாலும் மக்கள் உண்மைகளை விரைவில் காணவே செய்வர். அவ்வேளை வீதக்கு இருங்குவார்கள்.

- சிறீ -

### வானத்தைத் தொடும் பொதுக் கடன்

| வருடம் | செலுத்தாத கடன் | செலுத்தாத கடன் மொத்த தேசிய உற்பத்தியில் |
|---|---|---|
| 2003 | 186,385 கோடி | 105.8 வீதம் |
| 2004 | 213,953 கோடி | 105.5 வீதம் |
| 2005 | 222,234 கோடி | 93.9 வீதம் |
| 2006 | 260,772 கோடி | 88.7 வீதம் |
| 2007 | 307,007 கோடி | 85.8 வீதம் |
| 2008 | 345,700 கோடி | 82 வீதம |

### அரச கடனுக்கான வட்டி

| | |
|---|---|
| 2003 | 12,512 கோடி 60 இலட்சம் |
| 2004 | 11,978 கோடி 20 இலட்சம் |
| 2005 | 12,015 கோடி 90 இலட்சம் |
| 2006 | 15,078 கோடி 80 இலட்சம் |
| 2007 | 18,268 கோடி 10 இலட்சம் |
| 2008 | 20,982 கோடி 50 இலட்சம் |

தகவல் இலங்கை மத்திய வங்கி

2008 டிசம்பர் 31இல் இலங்கையின் செலுத்தப்படாத கடன் நிலுவை 34500 கோடி ரூபாய். அதாவது இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரும் 171,014 ரூபாவுக்கு கடனாளியாக உள்ளனர் இது 2007ம் ஆண்டை விட 13 வீதம் அதிகமாகும்

# அன்புள்ள தோழருக்கு

## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

முன்னேறிய மனிதர் ஒன்றுபட்டு இயங்கும் அமைப்பே எல்லாவற்றுக்கும் மேலாக எம்மெல்லோருக்கும் வழிகாட்டியாக – ஒளி விளக்காக விளங்குகிறது. அவ்வமைப்பு மாக்ஸீய அறிவியலால் ஒளியூட்டப் பெற்றிருப்பதே அதற்கான காரணம். இத்தகு பொது அமைப்பொன்றின் பண்பும் பயனும் பற்றிய சிலவற்றைக் கடந்த மடலில் கருத்தாடினோம்.

மாக்ஸீய மையங் கொண்ட அமைப்பொன்று; அரச சார்பாகவோ, அரச சார்பற்ற என் ஜி ஓவாகவோ அன்றி, மக்களில் முன்னேறிய மாக்ஸீய ஒளியில் புடம் போடப்பட்ட உறுப்பினர்களால் உருக் கொண்டிருப்பதாகும்.

அவ்வுறுப்பினர்கள் சமகால ஆதிக்க சமுதாயத்திலிருந்து விட்டு விடுதலையான பாட்டாளி வர்க்க குணாம்சம் கொண்ட புதிய வார்ப்புக்கள். அவர்களின் உடலும் உள்ளமும் தோழமை என்ற உணர்வில் ஊட்டம் பெற்றவை. இழப்பதற்கு எதுவுமற்றவர்கள். வெல்வதற்கு உலகுண்டென்று நம்பிக்கை பெற்று உயிர்ப்புடன் விளங்குபவர்கள். மாக்ஸீயக் கருத்தும் மக்கள் சார்பான நடத்தையும் இயக்கத்தில் உயிர்ப்பும் உள்ளபடி செயலாற்றுபவர்கள்.

தோழமை என்ற இத்தகைய பண்பு வாய்க்கப் பெறாவிடில் மக்கள் அமைப்பின் கொள்கைக்கும் நடைமுறைக்குமிடையில் பாரிய இடைவெளி ஏற்படும். தோழர் என்று சொல்லப்படுபவரின் சொல்லுக்கும் செயலுக்குமிடையில் ஆழமான வேறுபாடு தோன்றும். நம்பிக்கைக்கு மாறாக விரக்தியே மிஞ்சும். பயமே குடி கொள்ளும். அதிகார மனப்பாங்கே செங்கோலோச்சும்.

பொதுமக்கள் அமைப்பில் இயங்கும் நாம் ஒவ்வொருவரும் பாட்டாளி வர்க்கத்தவரா? எமது வர்க்க முத்திரை எத்தகையது என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும். தொழிலாளியாக –உழைப்பாளியாக வாழ்வதும், தொழிலாளரின் பிள்ளைகளாகப் பிறந்திருப்பதும் மட்டும் பாட்டாளி வர்க்கக் குணாம்சம் எனக் கொள்ளப் போதுமானதன்று. இவை முக்கியமானவை தான். எனினும் நிலமானிய சிந்தனை கொண்டு பிறப்பு அடிப்படையில் பேதம் காண்பது மாக்ஸீய விஞ்ஞானமாகாது. பிறப்பு அடிப்படையானதெனினும் அதுவே அளவுகோலாகாது. சொல்லும், செயலும், வாழ்வும் நம்பிக்கையும், கொள்கையும் நடைமுறையும் ஒன்றெனத் தெரியின் மாக்ஸீய உயிர்ப்பு துலங்கும். பாட்டாளி வர்க்கப் பண்பில் புடம் போடப்படுவர். நான் யார்? எந்த வர்க்கம் சார்ந்தவன்? சமூக விஞ்ஞான மாக்ஸீய உண்மையை உள்ளத்தால் ஏற்றுள்ளேனா? மற்றோரை மேய்க்காமல் மேயாமல் மக்களாய் உள்ளேனா? இக் கேள்விகளை என்மீது நானே எழுப்பிச் சுயவிமர்சனம் செய்யும் பக்குவம் பெற்றுள்ளேனா? என் மீது நான் எழுப்பும் கேள்விகளுக்கும் என்னையே நான் கூண்டில் ஏற்றி சுயவிசாரணை செய்வதும் எமக்குள்ள முதன்மையான– உடனடிப் பிரச்சினையாகும்.

இத்தகைய சுயவிசாரணையின்றி சும்மா உடலைச் சுமந்து எண்ணிக்கைக்குத் தலையைக் காட்டுவது வீண்புரளியாகும். மாக்ஸீய அமைப்பில் - மக்கள் இயக்கத்தில் இவை சரிப்பட்டு வராது. என்னுடைய வர்க்க முத்திரையின் போலித் தன்மையை நானே கண்டு கொள்வதே பாட்டாளி வர்க்கத்திற்குச் செய்யும் கைமாறாகும். என்னுடைய தரம் பற்றி நானே அறிவதே நன்மை தரும்.

வர்க்கம் பற்றிய தெளிவு உள்ளேனா? என்னுடைய எதிரி யார்? நண்பர் யார்? என்னுடைய எதிரியே சமூகத்தின் எதிரியாகவும் என்னுடைய நண்பரே மக்கள் சமூகத்தின் நண்பர்களாகவும் உள்ளனரா?

மாக்ஸீய விஞ்ஞான கருத்தியலின் இயங்குதளம் பற்றிய தெளிவு எனது உளப்பூர்வமானதா? பயபக்தியுடைய போலி ஆசாரம் பற்றியதா? எனது வர்க்கத் தளத்தின் தேர்வை நெஞ்சார ஏற்கிறேனா? தொழிலாளி வர்க்கத் தளம் என்பது 'எனது விருப்பா? எனது இருப்புக்கான தற்காலிக ஒதுக்கிடமா?

நானே தொழிலாளியாகவும் முதலாளியாகவும் நானே ஒடுக்கப்படுபவனாகவும் ஒடுக்குபவனாகவும் நானே பாட்டாளியாகவும் பட்டாடோப நுகரியாகவும், விஞ்ஞானக் கருத்தும் நிலமானிய சிந்தனையும், பாட்டாளிவர்க்கத் தோற்றமும் மேட்டுக்குடி மனப்பாங்கும், சேவைப் போலியும் அதிகார மமதையும், ஸ்தாபனம் பேருக்கும் தன் முழுமையே முதன்மையும், வீட்டினுள் மௌனம் அனுஷ்டிப்பதும் வெளியில் போராட்ட முரசறைவதும், எளிமையைப் போதிப்பதும் ஆடம்பரத்தில் பிரியராய் இருப்பதும், சொல்லில் மாக்ஸீயமும் செயலில் ஆதிக்கமும் உள்ளபடி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தும் இரண்டக ஆளுமையுடன் செயற்படும் 'வாய்ச் சொல்' வீரராக நான் உள்ளேனா, இல்லேனா என்பது என் மூளைக்குத் தெளிய வைப்பது பயன்தரும்.

சமகால சமுதாயம் பற்றிய வர்க்க ஆய்வினை உளமாரத் தெரிந்துள்ளேனா? எல்லாவற்றிலும் சமரச மனப்பாங்குடையேனா? போராட்ட மார்க்கத் தெளிவுடையேனா? மக்கள் போராட்டம் என்பதற்கும் பல்தேசியக் கம்பனிகளின் ஆயுத நுகர்வின் யுத்தம் என்பதற்கும் வேறுபாடு தெரிகிறதா? ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் மூல உபாயத்தில் விட்டுக் கொடுப்புக்கு இடமுண்டா? நாட்டின் சுதந்திரத்தையும் தேசிய இனங்களின் விடுதலையையும் மக்களின் புரட்சியையும் வெல்வதில் தந்திரோபாய அறிவு பற்றிய தெளிந்த ஞானம் உடையேனா?

ஏகாதிபத்திய தாசர்களுடன் சமரசம் செய்து என்னை இழப்பேனா, போலி முகம் காட்டி எனது ஆசார சீலம் பற்றி வெளிப்படுத்துகிறேனா? நண்பர்கள் மத்தியில் அவர்களின் வளர்ச்சி உயர்ச்சி கண்டு அழுக்காறும், ஒளிவுமறைவும், கோள் சொல்லிக் கொழுவல் செய்வதும், தன்முனைப்பும் தளர்ச்சியடைவதும் தருணம் பார்த்துக் கழுத்தறுப்பதும் மறைமுக நிகழ்ச்சி நிரலை தான் மட்டும் கொண்டு மற்றையோர் மத்தியில் திணிப்பதும் எல்லாப் புகழும் எனக்கே என இறுமாப்பதும் எல்லாவற்றிலும் முதலாமிடம் பெறும் முதலாளியப் போட்டி மனப்பாங்கு பொங்கி வழிவதும் என்றெல்லாம் எனது உள்ளம் அன்றாடம் உருக்குலைகிறதா என சுயவிசாரணை செய்ய வேண்டாமா?

'பாடுவது தேவராம் இடிப்பது சிவன் கோயில்' என்ற நாட்டார் சொல்லின் சாராம்சத்தின்படி உச்சரிப்பது மாக்ஸீயம். செய்து முடிப்பது பொது அமைப்பைத் துவம்சம் செய்வது அல்லது விலகியிருப்பது அல்லது வெறுப்பைக் காட்டுவது அல்லது எல்லாவற்றுக்கும் மேலாக சும்மாவே இருந்து விடுவது. ஸ்தாபனம் பற்றிய முதன்மையை உதாசீனம் செய்வது. ஒன்று கூடலுக்கான அறிவின் அதிகாரத்துக்கான பெயர்ப் பலகையாக ஸ்தாபனம் பற்றிப் புரிந்து கொள் வது என்பது வெறும் பம்மாத்தே என்றாகும்.

பொதுமைக்கு முதன்மை, சுயநலத்துக்கு இடமின்மை, புகழ் பற்றிய பிரமையின்மை, பயம் கொள்ளாமை, பொறுப்பேற்பதில் மகிழ்வு, மற்றோரை மகிழ்விப்பதில் திருப்தி, உண்மையைத் தேடுவதும் நன்மையைச் செய்வதும் மானுட முழுமையை கண்டறிவதும், மானுட விழுமியங்களான மதசார்பின்மை, சோசலிச மனப்பாங்கு, ஜனநாயக விருப்பு, மனிதாபிமானம், விடுதலை நோக்கு போன்றவற்றில் பற்றுடனிருப்பதே பாட்டாளிவர்க்க பண்பாட்டின் ஊற்று மூலமாகும்.

மாக்ஸீய உயிர்ப்பை இழப்பின் நடைப் பிணங்களும் மயானமுமே எஞ்சும். பிரபஞ்சத்தின் இயற்கை உற்பவிப்பின் இந்த உலகத்தின் புதிய பூமியைப் புரிந்து கொண்டு தோழமையை தொடர்வோமா? புரிதலை பகிர்வோமா? என்ன? பேசாமல் மௌனமாய் உறைகிறீர்கள். வாருங்கள் பேசுவோம். புரிவோம். மகிழ்வோம். எம்மால் ஒரு அடிதான் எடுத்து வைக்க முடியுமாயினும் சரியாக வைப்போம். தாதமமேன்?

மறுமடலில் சிந்திப்போம்

**தோழமையுடன் செண்பகன்**

ஜீ 20 மாநாடு சொர்க்கத்திற்
12ம் பக்க தொடர்ச்சி

ஜேர்மனியும் கோரியிருந்தன. இருசாராருக்கும் முழுமையான வெற்றி கிட்டவில்லை. எவ்வாறாயினும் ஜி 20 மகாநாடு ஒரு திருப்பு முனையென ஒபாமா கூறியிருந்தார். அதேவேளை ஜி 20 மகாநாட்டின் முடிவில் பத்திரிகையாளரை சந்தித்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பின்வருமாறு கூறியிருந்தார். "தற்போதைய நெருக்கடி ஆசியாவிலோ லத்தீன் அமெரிக்காவிலோ ஆரம்பிக்கவில்லை. இந்த நெருக்கடியானது முதலாளித்துவத்தின் இதயத்திலிருந்தே ஆரம்பமானது. சர்வதேச நாணய நிதியம் கண்டனத்தின் பொறுப்பின் ஒரு பகுதியை ஏற்க வேண்டும். சர்வதேச நாணய நிதியம் வளர்ச்சியடையும் நாடுகளின் பொருளாதாரங்களை கண்காணிக்கும் அதே வேளை வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரங்களைக் கண்காணிப்பதில்லை" ஆனால் இதே மன்மோகன் சிங் மகாநாட்டில் என்ன கூறினாரோ தெரியாது. வளர்ச்சியடையும் நாடுகளில் இந்தியா கரிசனை காட்டுவது போல் ஒரு தோற்றத்தைக் காட்டுவதற்காகவே மகாநாட்டின் முடிவில் ஊடகங்களுக்கு மேற்கூறிய கருத்தைக் அவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் அவரது கூற்று உண்மையானதாக இருப்பினும் தனது சொந்த நாட்டில் அந்த மனிதர் எதைப் பின் பற்றுகின்றார் என்பது மற்றொரு கேள்வியாகிறது. ஜி 20 மகாநாடு நடைபெற்ற காலப்பகுதியில் அமெரிக்காவில் மார்ச் மாதத்தில் 663,000பேர் வேலையிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்த வருடத்தில் அமெரிக்காவில் முதல் மூன்று மாதத்தில் இருபது லட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது செல்வந்த நாடு என வர்ணிக்கப்படும் ஏகாதிபத்தியத்தின் வரண்டு வரும் நிலையை எடுத்துக் காட்டுகிறதல்லவா? அது மட்டுமல்ல ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் அதிகரித்து வருவதையும் காண முடிகிறது.

ஜீ 20 நாடுகளின் மீட்பு நிதியுடன் உலகப் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடைந்து 1930 காலப்பகுதியை ஒத்த நிலைக்குத் தள்ளப்படும் என்பதை எதிர்வரும் காலப்பகுதி தெளிவு படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதற்காக எந்தவொரு முதலாளித்துவநாடும் தனது பாதையை மாற்றப் போவதில்லை என்பது உணரப்பட வேண்டியதாகும். "முட்டாள்கள் பாறாங்கல்லைத் தூக்குவது முடிவில் தனது கால்களில் போட்டுக் கொள்ளவே " என்பது தெளிவாகத் தெரிகிறது.

சிறீ

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தத்தின் அகோர முனைப்பும் அரசியல் தீர்வின் மறுப்பும்

வன்னிப் பெருநிலப் பரப்பின் கிழக்கே முல்லைத்தீவின் புதுக் குடி யிருப்புக்கு அப்பால் இலங்கை ராணுவம் புலிகளுக்கிடை யிலான கடும் சமர் இடம் பெற்று வருகிறது. வன்னியின் சகல பிரதேசங்களில் இருந்தும் பின்வாங்கிச் சென்ற புலிகள் இயக்கம் தனது கடைசி நிலையாகப் புதுக்குடியிருப்பிற்கு அப்பாலான சிறு நிலப்பரப்பை வைத்திருக்கிறது. இப் பகுதியோடு அண்டியதாகவே அரசாங்கம் பிரகடனம் செய்துள்ள பாதுகாப்பு வலயம் இருந்து வருகிறது. இது முல்லைத்தீவு நகருக்கு வடக்கே வட்டு



வாய்க்காலில் இருந்து சமுத்திரக் கரையோடு புதுமத்தாளன் பகுதிவரையான 12.கி.மீ. நீளத்தையும் இரண்டு கி.மீ குறைவான அகலத்தையும் கொண்ட நிலப்பரப்பாகும். இதனை 20 சதுர கி.மீ பரப்பளவு என்றே கூறப்ப டுகிறது. இதன் முக்கியத்துவமும் சோகமும் என்னவென்றால் இச் சிறிய நிலப்பகுதியில் தான் சுமார் ஒன்றரை லட்சத்திற்கும் இரண்டு லட்சத்திற்கும் இடைப்பட்ட மக்கள் அவலங்கள் மத்தியில் வாழ்வோ டும் சாவோடும் வாழ்ந்து வருகிறார்கள். இப் பாதுகாப்பு வலத்திற்குள் புலிகள் இயக்கமும் இருந்து வருகிறது. அதனால் இங்கு இருக்கும் மக்களைத் தமது பாதுகாப்பிற்கான மனிதக் கேடயங்களாகப் புலிகள் இயக்கம் பயன்படுத்தி வருவதாக அரசாங்கம் குற்றம் சாட்டி வருகி றது. இதனை ஐ.நா வின் முகவரமைப்புகள் தமது அறிக்கைகளில் உறுதிப்படுத்தியும் உள்ளன. அத்துடன் இப்பாதுகாப்பு வலயங்களில் இருந்து தப்பி வந்த மக்களும் தகவல்களாகக் கூறியுள்ளனர். மக்களை வெளியேற விடாது தடுத்து வருவதுடன் அதனையும் மீறி வெளியேறியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்த சம்பவங்களையும் அம் மக்கள் கூறியுள்ளனர். இவற்றையெல்லாம் மறுத்து வரும் புலிகள் இயக்கம் மக்கள் அங்கு விரும்பியே இரு ந்து வருகின்றனர் என்றே கூறி வருகின்றது. எவ்வாறாயினும் அர சாங்க ராணுவம் அங்குள்ள மக்களை வெளியேற்றி நலன்புரி முகாம்களுக்கு கொண்டு செல்லவே முற்படுகிறது. அதே வேளை அம் மக்களைக் கட்டாயப்படுத்தி அங்கு வைத்திருப்பதன் மூலம் கடலுக்குள் மீன்கள் போன்று தம்மைத் தக்க வைத்துக் கொள்ள புலிகள் இயக்கம் முயன்று வருகிறது. இத்தகைய இருதலைக் கொள்ளி நிலைக்குள்ளேயே இரண்டு லட்சம் மக்கள் தினம் தினம் செத்துப் பிழைத்த வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

இப்பாதுகாப்பு வலயத்தின் மீது சுடுகலன்கள் கொண்ட தாக்குதல் நடாத்தக் கூடாது என்பதாலேயே (No Fire Zoon) சுடுநிலை அற்ற வலயம் என அழைக்கப்படுகிறது. ஆனால் இங்கு எறிகணை வீச்சுக்களும் பீரங்கித் தாக்குதல்களும் நடாத்தப்படுகின்றன. இதில் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி வருகிறார்கள். எவ் வாறாயினும் இறந்து கொள்வோரின் தொகையும் படுகாயமடைந்து திருகோணமலைக்கும் புல்மோட்டைக்கும் அழைத்து வரப்படுகின்ற மக்களின் நிலையும் தாக்குதல்களுக்கான சாட்சியமாகின்றன. பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மக்களின் வாழ்வு பதுங்குழி வாழ்வாகும். வெளியேவந்து உணவு தேடி அலையும் வாழ்வாகவும் இருந்து வருகிறது. அதே வேளை உணவு உடை இருப்பிடம் மரு ந்து மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகள் பெற முடியாத அவலங்களுடனேயே மக்கள் வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். இவ்வா றான முல்லைத்தீவின் போர்க்களத்தை அரசாங்கம் இறுதி யுத்த மாகக் கொண்டு எந்த ஒரு விட்டுக் கொடுப்பையும் செய்யத் தயாரி ல்லாத யுத்த நிலைப்பாட்டையே முன்னெடுத்து வருகிறது. யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றே அடிக்கடி அடித்துக் கூறி வருகிறது. அதே வேளை தற்போதைய இறுதி நிலப்பரப்பையும் அதில் கட்டாயப்படுத்தி வைத்திருக்கும் மக்களையும் கையிழந்து விட்டால் தமது இருப்பும் தொடர்ச்சியும் அற்றுப் போய் விடும் எனப் புலிகள் இயக்கம் அச்சமடைந்து சகல வழிகளிலும் எதிர்ப பையும் இராஜதந்திர நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது அதனாலேயே மீண்டும் மீண்டும் யுத்த நிறுத்தக் கோரிக்கையையும் பேச்சுவார்த்தையையும் வற்புறுத்தி வருகின்றது. தமிழகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அதற்காதரவான வெகுஜன நடவடிக் கைகளை இடைவிடாது முன்னெடுத்து வருவதுடன் ஐ.நா. நபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி விவாதிக்கப்படும் சூழலைத் தோற்றுவிக்கவும் புலிகள் இயக்கம் முழு முயற்சி எடுத்து வருகிறது. இவற்றுக்கெதிரான ராஜதந்திர நடவடிக்கைகளை அரசாங்கம் ஒவ்வொரு முனையிலும் சளைக்காது முன்னெடுத்தும் வருகின்றது. ஏற்கனவே உருவாகிய சந்தர்ப்பங்களில் இரு தரப்பினரும் நமது நாடு நமது மக்கள் எங்களது எதிர்காலம் என்ற அடிப்படைகளில் தூரநோக்குடைய கொள்கைகளை முன்வைத்து ஒருவரை ஒருவர் நிராகரிக்காது புரிந்துணர்வுடன் செயல்பட்டிருக்க முடியும். ஆனால் இரு தரப்பினருமே இரண்டு அந்தலைகளில் நின்று தத்தமது இல க்குகளை அடையவே முற்பட்டனர். இதன் காரணமாக இரு தரப்பிற் குமே மக்களைப் பற்றிய அக்கறைகள் துளியளவும் இருக்கவி ல்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் தமிழர்களின் ஆதரவோ டும் ஆரம்பித்த விடுதலைப் போராட்டம் ஒரு கட்டத்திற்கு பின் மக்களின் மனநிலைகளை உரியவாறு அறிந்து கொள்ள மறுத்து தமது தனி இயக்க இருப்புக்கும் ஆதிக்கத்திற்குமான ஒன்றாக மாற்றமடைந்து கொண்ட பாதகமான வழிகளில் வழிநடக்க ஆரம்பி த்தது. இதன் பாரிய எதிர்விளைவுகளை இன்று காண முடிகிறது. அதற்காகப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு அடிபணிந்து சென்றிருக்க வேண்டும் என்பது அதன் அர்த்தம் அல்ல. வெளி சக்திகளுக்கும் புலம் பெயர்ந்த வசதி பெற்ற உயர்வர்க்கத் தமிழர்களின் ஆலோச னைக்கும் அங்கிருந்து வரும் நிதி வளங்களுக்கும் செவிசாய்த்த அளவுக்கு இங்கு மண்ணில் வாழ்ந்து போராடி வந்த மக்களின் விருப்பங்களையும் நாடித்துடிப்புக்களையும் உரியவாறு புலிகள் இயக்கத்தால் உள்வாங்க முடியவில்லை.

அதேவேளை பேரினவாத ஒடுக்குமுறை ஆளும் வர்க்க அரசாங்க ங்கள் யாவும் தமது உயர் மேட்டுக் குடிவர்க்க நலன்களுக்காக தேசிய இனப்பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வுக்குத்தானும் வரத் தயாராக இருக்கவில்லை. இன்றைய யுத்தத்திற்கும் கோர அழிவுகளுக்கும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிகளுக்கும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்மை தான் அடிப்படைக் காரணம் என்பதை மறைத்தும் மறுத்தும் தமிழர்களின் ஆயுத நடவடிக்கை மட்டுமே பிரச்சினைக்கு காரணம் எனக் காட்டப்பட்டது. அதன் தொடர்ச்சி பாகவே மகிந்த சிந்தனை அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினையைப் பயங்கர வாதமாகக் காட்டி சிங்கள மக்களை திசைத்திருப்பி கொண்டது. அதற்கு உதவுவது போலவே சிங்கள குடிமக்கள் மீதான தாக்குதல்களைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்தும் வந்தது. இன்று யுத்தம் உச்சத்திற்கு சென்றுள்ளது. இன்னும் சில நாட்களில் பயங்கரவாதம் முறியடிக்கப்படும் என்றே ஜனாதிபதியும் அமைச்சர் களும் எதிர்வு கூறி வருகின்றனர். ஆனால் அரசியல் தீர்வு பற்றி எதுவுமே கூறத்தயாராக இல்லை. ஏற்கனவே இந்தியாவுடன் இணை ந்து கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தத்தைக் கூட மனப்பூர்வமா கவும் அதில் கூறப்பட்டவாறான அதிகாரங்களுடன் நடைமுறை ப்படுத்த அரசாங்கம் தயாராக இல்லை. வேடிக்கையும் விநோதமும் யாதெனில் அதே பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ்ன ஏனைய மாகாணசபைகளின் தேர்தலிலும் அவற்றின் அதிகாரத்தை கைப்ப ற்றுவதிலும் அரசாங்கம் முனைப்புக் காட்டி நிற்கும் நிலையாகும். மகிந்த சிந்தனை ஒற்றையாட்சியையே வற்புறுத்தி நிற்கிறது. அதன் பங்காளர்களான ஜே.வி.பி. யும், விமல் வீரவன்ச தலைமை யிலான கட்சியும், ஜாதிக ஹெல உறுமயவும் அதிகாரப் பகிர்வை வன்மையாக எதிர்த்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் அதிகாரப் பகிரவுக்கு திட்டவட்டமாக எதனையும் தெரிவிக்கவில்லை. சர்வகட்சிப் பிரதிநிதிகளின் மாநாடு என்பது வெறும் கண்துடைப் பாகவே இருந்து வருகிறது. யுத்தத்தை முன்னெடுக்க முழு மூச்சாக

**சண்முகம்**

உதவிவரும் இந்தியா பதின்மூன்றாவது. திருத்தத்தையே தீர்வாகப் பேசி வருகிறது. ஆனால் அதனை மகிந்த அரசாங்கம் ஒரு காதால் வாங்கி மறு காதால் விட்டவாறே இருந்து வருகிறது. அடிப்படையில் அரசியல் தீர்வு என்பதற்கு மறுப்புக் காட்டி வரும் நிலையைத் தான் அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. இன்றைய யுத்தத்தின் மத்தியில் கூட தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைத்திருக்க வேண்டும். அதற்கு அழுத்தம் கொடுக்க இந்தியாவோ "சர்வதேச சமூகமோ" தயாராக இல்லை. அவ்வாறே சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக அல்லது சிவில் சமூக அமைப்புக்களும் தயாராக இல்லை. கருத்துச் சுதந்திர மறுப்பும் ஊடக அடக்குமுறைகளும் மனித உரிமை மீறல்களும் பேசவேண்டிய சக்திகளை மௌனமாக்கியுள்ள சூழல் அச்சத்தின் ஊடே நீடிக்கிறது.

இத்தகைய நிலையில் பயங்கரவாதம், யுத்தம், புலிகள் அழிப்பு என்பவற்றை உரத்துக் கூறிக் கொண்டு அரசாங்கம் தனது இருப் புக்கும் எதிர்காலத்திற்கும் உரிய வேலைகளைச் செய்து வருகிறது. தெற்கிலே உள்ளூரப் பூதாகரமாகி வரும் பொருளாதார நெருக்கடிக ளைத் திசைத் திருப்பி வருகிறது. அதே வேளை கிழக்கில் செய் யப்பட்டது போன்று வடக்கிலும் செய்யப்போவதாக அறிவித்தும் கொள்கிறது. அங்கும் உள்ளூராட்சி மாகாணசபைத் தேர்தல்களை வைத்து விட்டால் வடக்கு கிழக்கின் இனப் பிரச்சினை தீர்ந்து கொள்ளும் என்ற நிலையிலேயே அரசாங்கம் செயலாற்றி வருகிறது. அதற்குரிய ஆட்களை வடக்கில் தேடுவதையும் மும்முரமாக்கியு ள்ளது. அதன் நோக்கிலேயே தமிழ்க் கட்சிகளை அண்மையில் ஜனாதிபதி அழைத்திருந்தார். அதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கலந்து கொள்ளவில்லை. அதற்கு நியாயம் கூறி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அரசியல் தீர்வு பற்றிப் பேச முடியாத கூட்டமோ சந்திப்போ அர்த்தமற்றது என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. தமிழ்க் கூட்டமைப்பினர் இருதலைக் கொள்ளிக்குள் அகப்பட்ட நிலையில் இதைவிட வேறு எதைத்தான் செய்ய முடியும். ஆனால் எதிர்காலத் திற்கான ஒரு சமிக்கையை வைத்தே கடிதம் எழுதியுள்ளனர்.

இன்றுள்ள யுத்தத்தின் அகோர முனைப்பானது முல்லைத்தீவின்



எஞ்சியுள்ள நிலப்பரப்பை முழுமையாக விடுவித்து விடக் கூடியதா கும். புலிகள் இயக்கத்தினை தோல்வியடையச் செய்து பயங்கரவா தம் என்பதை அழித்ததாக வெற்றிச் செய்தி வெளியிட்டு விழாக்க ளும் நடத்தலாம். இவையாவும் ராணுவத் தீர்வின் பாற்பட்டதாகும். இதற்கும் நியாயமான அரசியல் தீர்வுக்கும் சம்மந்தம் இருக்க முடி யாது. ஏனெனில் ராணுவத்தீர்வு ஆயுதம் ஏந்திய புலிகளோடு சம் மந்தமுடையது. ஆனால் அரசியல் தீர்வு என்பது இந்நாட்டின் தமி ழ்த் தேசிய இனத்தின் உரிமைகளோடும் அபிலாசைகளோடும் சம் மந்தமுடையது. கடந்த நூற்றாண்டின் 1920 துகளின் ஆரம்பத்துடன் தோற்றம் பெற்ற தமிழின உரிமைகள் மறுப்பு நிராகரிப்புக் கொள்கை இன்று வரை விரிவுபடுத்தப்பட்டே வந்திருக்கிறது அதற்கு முற்றுப் புள்ளி வைத்து நியாயமான அரசியல் தீர்வு உறுதியானதாக முன் வைக்கப்படவும் இல்லை நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை. இதில் பேரினவாத ஆளும் வர்க்க முதலாளித்துவ சக்திகள் விட்ட பாரிய தவறுகள் அடிப்படையானவையாகும். அதேவேளை உயர் வர்க்க மேட்டுக்குடி தமிழ்ப் பாராளுமன்றவாதத் தலைமைக ளும் தவறிழைத்து வந்தன என்பது மறுக்கப்படக் கூடியவை அல்ல. அதன் தொடர்ச்சியாக ஆயுதங்களை முதன்மைப்படுத்தி நின்ற தீவிரவாதத் தமிழர் அமைப்புகளும் கருத்தியல் நடைமுறை வழிகளில் "ஆதிக்கத் தமிழர்களின் ஆண்ட பரம்பரை திமிர்த்தன" அரசியலையே விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் முன்னெ டுத்தும் வந்தனர். இந்த இயக்கங்கள் யாவும் உலகக் கண்ணோட் டத்திலும் அரசியல் நிலைப்பாட்டிலும் சர்வதேச சக்திகளைக்



கணிப்பீடு செய்து அணுகுவதிலும் சிங்கள மக்களை நேச சக்தி யளாக்குவதிலும் சரியான வழிமுறைகளில் செல்லவில்லை.

மேற்கூறப்பட்ட விடயங்களை அரசியல் அடிப்படையாகவும் நேர்மை யான மக்கள் சார்பு விமர்சனமாகவும் நோக்குதல் வேண்டும். இவை பரந்தளவில் தமிழ் மக்களிடையே விவாதிக்கப்படல் வேண்டும். சுதந்திரமான கருத்துக்களுக்கும் விவாதங்களுக்கும் மக்களிடையே ஜனநாயக ரீதியிலான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும். ஆயுத கலாச்சாரம் பகிரங்கமாகவோ அன்றி மறைமுகமாகவோ முன்னெடுக் கப்படுவதை மக்கள் இனிமேலும் பொறுத்துக் கொண்டு மௌனமாக இருக்க முடியாது. ஒரு ஆதிக்கத்தை நிராகரித்து வேறொரு ஆதிக் கம் உருவாகுமானால் தமிழர்களுக்கு விடிவும் இல்லை. விமோசன மும் வரமாட்டாது.

எனவே தான் தமிழ் மக்கள் நியாயமான அரசசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து வெகுஜன இயக்கத்தை முன்னெடுக்க முன்வரல் வேண்டும். இதில் சிங்கள ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகள் இணைய வேண்டும். அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை யும் அதிகாரப் பகிர்வையும் வற்புறுத்துவதாக இருக்க வேண்டும். சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கிற்கான சுயாட்சி வழங்கப்படுவதே உரிய அரசியல் தீர்வாக அமைய் முடியும். இதுவே சமாதானமான சபீட்சமான தேசிய இனங்களின் ஐக்கியப்பட்ட இலங்கையைக் கட்டியெழுப்பும் பாதையிலான பயணமாக இருக்க முடியும்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கந்தலானது அமெரிக்க மாயை

## அதிகார வர்க்க ஊழலும் பொருளாதார மோசடிகளும்

அமெரிக்காவில் நேற்று வரை மிகவும் புகழ்பெற்ற நிதி நிறுவனமாக இருந்து வந்த பெர்னார்ட் எல்.மடோ .:.ப் இன்வெஸ்ட்மென்ட் செக்யூ ரிட்டீஸ் என்ற 'பிளேடு கம்பெனி' இன்று குப்புறக் கவிழ்ந்து விட் டது. நேற்று வரை அமெரிக்காவின் மிகச் சிறந்த நிதி முதலீட்டு நிபுணராகக் கொண்டாடப்பட்ட அந்நிறுவனத்தின் அதிபர் பெர்னார்ட் மடோ.:.ப் இன்று பண மோசடி நம்பிக்கை துரோகம் உள்ளிட்ட பல்வேறு "420" குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார். இந்நிறுவனம் ஏறத்தாழ 5,000 கோடி அமெரிக்க டாலர் (இரண்டு முதல் இரண்டரை இலட்சம் கோடி ரூபாய்) அளவிற்கு முதலீட்டாளர்களின் பணத்தை ஏப்பம் விட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



பங்குச் சந்தை சூதாடி மடோ.:.பின் நிறுவனம் இத்தனை பெரிய மோசடியில் ஈடுபட்டிருப்பதை அமெரிக்க அரசின் எந்தவொரு புலனாய்வு அமைப்பும் ஆராய்ந்து கண்டுபிடித்து விடவில்லை. மாறாக நமது நாட்டின் சத்யம் நிறுவன அதிபர் போல, பெர்னான்டா மடோ.:.பே தனது நிறுவனம் செய்துள்ள பண மோசடிகளை ஒத்துக் கொண்டு விட்டார். இத்தனைக்கும் மடோ.:.ப் முதலீடு என்ற பெயரில் நடத்திவந்த மோசடிகள் கண்டுபிடிக்க முடியாத அளவிற்குச் சிக்கலானதும் அல்ல.

"எங்கள் நிறுவனத்தின் முதலீடு செய்தால் மற்ற நிறுவனங்களை விட அதிக வட்டி தருவோம். "என்பதுதான் பெர்னார்ட் மடோ.:.பின் வர்த்தக தாரக மந்திரம். இந்த அதிக வட்டிக்கு ஆசைப்பட்டுச் சாதாரண முதலீட்டாளர்கள் மட்டுமன்றி பங்குச் சந்தை நிறுவனங்கள் தொடங்கி சேமிப்பு வங்கிகள், முதலீட்டு வங்கிகள், ஓய்வூதிய நிதி நிறுவனங்கள் எனப் பல தரப்பினரும் மடோ.:.பின் நிறுவனத்தில் முதலீடு செய்து வந்தனர். இந்த முதலீட்டாளர்கள் மட்டுமன்றி அமெரிக்காவின் பங்குச் சந்தைக் கண்காணிப்பு வாரியம் கூட "இந்த அளவிற்குக் கூடுதலான வட்டியை மடோ.:.ப் நிறுவனம் எப்படித் தர முடியும்? என்ற கேள்வியை மறந்தும் எழுப்பவில்லை. இந்த மோசடியின் சுவாரசியமான அம்சம் என்னவென்றால் மடோ.:.ப் தனது முதலீட்டாளர்களுக்கு 2008 டிசம்பருக்கு முன்பு வரை சொல்லியபடி வட்டியை ஒழுங்காகக் கொடுத்து வந்தார். அசலை கூடத் திருப்பிச் செலுத்தி வந்தார். இதனால் அமெரிக்க முதலீட்டாளர்கள் மத்தியில் மடோ.:.ப் நிறுவனத்தில் முதலீடு செய்யும் ஆர்வம் அதிகம் இருந்து வந்தது. மடோ.:.ப் தனது நிறுவனத்தை இப்படி "ஒழுங்காக" நடத்துவதற்கு கையாண்ட நடவடிக்கையும் மிக எளிதானது.

இந்நிறுவனத்தின் பழைய முதலீட்டாளர்களுக்குத் தரப்படவேண்டிய வட்டியோ அசலோ நிறுவனத்தின் இலாபத்திலிருந்து தரப்படாமல் புதிதாக முதலீடு செய்பவர்களின் பணத்திலிருந்து தரப்பட்டது. அப்புதிய முதலீட்டாளர்களுக்குத் தர வேண்டிய தவணைப் பணம் அவர்களையடுத்து முதலீடு செய்பவர்களின் பணத்தில் இருந்து தரப்பட்டது. இந்தச் சங்கிலித் தொடர் அறுந்து போகாமல் இருப்பதற்கு மடோ.:.புக்கு புதிது புதிதாக முதலீட்டாளர்கள் தேவைப்பட்டனர். சேமிப்பு வங்கிகளும் முதலீட்டு வங்கிகளும் இந்த ஆள் பிடிக்கும் வேலையைச் செய்து கொடுத்து கமிஷன் வாங்கிக் கொண்டன.

சான்டாந்தர், பேங் மெடிசி, ஹெச். எஸ். பி.சி. உள்ளிட்ட பல வங் கிகள் .:.பேர் .:.பீல்டு கிரீன்வீச், ட்ரேமோண்ட் நிதி மேலாண்மை உள்ளிட்ட பல முதலீட்டு வங்கிகள் மடோ.:.பின் தரகர்களாகச் செயல்பட்டுள்ளன. இவ்வங்கிகள் ஆள் பிடிக்கும் வேலையைச் செய்து கொடுத்ததோடு மடோ.:.பின் நிறுவனம் கவிழ்ந்து விடாமல் காப்பாற்றுவதற்காகத் தேவைப்படும் நேரத்திலெல்லாம் வங்கிச் சேமிப்புக்களையும் தொழிலாளர்களின் ஓய்வூதிய நிதியையும் மடோ.:.பின் நிறுவனத்தில் கொட்டி இச்சூதாட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தன.

"சப் பிரைம்" கடன் பிரச்சினையால் அமெரிக்கப் பொருளாதாரம் திவாலானதையடுத்து, இவ்வங்கிகள் முட்டுக் கொடுத்து வந்த சங்கிலித் தொடர் அறுந்து போனது. புதிய ஏமாளிகள் கிடைக்காமல் போனதால் பழைய ஏமாளிகளுக்கு 700 கோடி அமெரிக்க டாலரை (ஏறத்தாழ 28,000 கோடி ரூபாய்க்கு மேல்) திருப்பிக் கொடுக்க முடியாமல் மடோ.:.ப் மாட்டிக் கொண்டார். இதனையடுத்து வங்கிகளின் துணையோடு அவர் நடத்தி வந்த மோசடிகளை அவரே ஒப்புக் கொள்ள வேண்டியதாகிவிட்டது. 5,000 கோடி அமெரிக்க டாலர் அளவிற்கு நடந்துள்ள இம்மோசடியில் 2,200கோடி அமெரிக்க டாலருக்கான கணக்கு வழக்குகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. மடோ.:.ப் இம்மோசடியைப் பல ஆண்டுகளாக எந்தவிதமான சந்தேகங்களுக்கும் இடம்தராமல் நடத்தி வந்ததற்கு வங்கிகளைப்போலவே அமெரிக்க தணிக்கை நிறுவனங்களும் உடந்தையாக இருந்துள்ளன. பல லட்சம் கோடி ரூபாய் வரவு செலவு நடத்தி வந்த மடோ.:.ப் நிறுவனத்தைத் தணிக்கை செய்த .:.பிரிஹ்லிங்க் அண்ட் ஹோரோவிட்ஸ் என்ற தணிக்கை நிறுவனத்தில் வெறும் மூன்றே பேர்தான் ஊழியர்களாக இருந்துள்ளனர். மேலும் இந்தத் தணிக்கை நிறுவனம் வேறு எந்தவொரு நிறுவனத்தையும் தணிக்கை செய்ததாகத் தெரியாததால் கடந்த பதினைந்து ஆண்டுகளில் இத்தணிக்கை நிறுவனத்தின் செயல்பாடுகள் மர்மமாகவே இருந்துள்ளன. இம்மோசடி அம்பலமான பிறகுதான் மடோ.:.ப் நிதி முதலீட்டு நிறுவனத்தை மேற்கண்ட தணிக்கை நிறுவனம்தான் "தணிக்கை" செய்துவந்த தகவலே வெளியுலகுக்கு தெரியவந்தது. சத்யம் மோசடி வழக்கில் மாட்டிக் கொண்டுள்ள தணிக்கை நிறுவனமான பிரைஸ்வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ், எர்ன்ஸ்ட் அண்ட் யங் மற்றும் கே.பி.எம்.ஜி. ஆகிய அமெரிக்கத் தணிக்கை நிறுவனங்களுக்கு அமெரிக்க வங்கிகள் தங்களின் சேமிப்பிலிருந்து மடோ.:.ப் நிறுவனத்திற்கு நிதியுதவி அளிப்பது தெரிந்தும்கூட, அத்தணிக்கை நிறுவனங்கள் இக்கூட்டு களவாணித்தனம் பற்றி வாய்மூடிக் கிடந்ததாகக் கூறப்படுகிறது.

பல ஓய்வூதிய நிறுவனங்கள் மடோ.:.ப் நடத்தி வந்த இச்சூதாட்டத்தில் பணத்தைப் போட்டு ஏமாந்து விட்டதால் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்களின் வாழ்நாள் சேமிப்பையெல்லாம் இழந்து போண்டியாகிவிட்டார்கள். இக்குற்றத்திற்காக மடோ.:.பிற்குத் தூக்கு தண்டனைகூட விதிக்கலாம். ஆனால் மடோ.:.போ சிறைக்குப் போன சில நாட்களிலே பிணை வாங்கிக் கொண்டு வெளியில் வந்துவிட்டான். இம்மோசடிக்குத் துணைநின்ற வங்கி அதிகாரிகள், தணிக்கை அதிகாரிகளில் ஒருவர் கூட கைது செயட்யப்படவில்லை. 2005 மற்றும் 2007 - ஆம் ஆண்டுகளில் இம்மோசடிகள் பற்றி அமெரிக்கப் பங்குச் சந்தை வாரியம் விசாரணை நடத்திய போதும் உருப்படியாக எதனையும் கண்டுபிடிக்காமல் விட்டுவிட்டது. இந்த மேம்போக்குத்தனத்திற்காக எந்தவொரு அதிகாரியும் விசாரிக்கப்படவில்லை. அந்தளவிற்கு அமெரிக்க நீதி பங்குச் சந்தை சூதாடிகளுக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது.

அமெரிக்க வங்கிகளும் காப்பீட்டு நிறுவனங்களும் அடுத்தடுத்து திவாலானபோது அதற்கு வீட்டுக் கடன் வாங்கி கட்டாமல் விட்ட அமெரிக்க உழைக்கும் மக்களின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்க முனைந்தது அமெரிக்க ஆளுங் கும்பல். ஆனால் மடோ.:.ப் என்ற ஒரேயொரு சூதாடி நடத்திய இம்மோசடியைப் பூசி மெழுகி, அமெரிக்க ஆளங்க்கும்பலால் யாரயும் பலிகிடா ஆக்க முடியவில்லை. அதனால் நிலைமையைச் சமாளிக்கும் வண்ணம் பல பொருளாதார நிபுணர்களும் நிதித் துறையை கண்காணிக்கக் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்திருந்தால், இம்மோசடி நடந்திருக்காது என முதலைக் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

பிளேடு கம்பெனிகளால் ஏமாற்றப்பட்ட தமிழக நடுத்தர வர்க்க முதலீட்டாளர்கள் இந்த ஆலோசனையைக் கேள்விப்பட்டால் வாயால் சிரிக்க மாட்டார்கள். ஏனென்றால் இந்திய நிதிச் சந்தையைக் கண்காணிக்க கடுமையான சட்டங்கள் இருந்த பொழுதுதான், பல்வேறு பைனான்ஸ் கம்பெனிகள் பல ஆயிரம் கோடி ரூபாவை ஏப்பம் விட்டன என்பது தான் வரலாறு. நிதி மோசடியும் முதலாளித்துவமும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் எனும்பொழுது, அவர்களைச் சட்டம் போட்டுப் பிரித்து விடமுடியாது.

இப்பொருளாதார மோசடி அம்பலமான அதே சமயம் மற்றொரு ஊழல் வெடித்து வெளியே வந்து அமெரிக்க அரசியலை நாறடித்து. இலினாய்ஸ் மாநில செனட்டராக இருந்த பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் அந்த செனட்டர் பதவி காலியானது. நம் நாட்டைப் போன்று அமெரிக்காவில் இடைதேர்தல் போன்ற சமாச்சாரங்கள் கிடையாது. இலினாய்ஸ் ஆளுநரே தனக்குப் பிடித்த நபரை அந்தப் பதவியில் அமர்த்திக் கொள்ளலாம். இலினாய்ஸ் மாநில ஆளுநராக இருந்த ராட் ப்ளாகோஜேவிச் இந்த அதிகாரத்தைப் பயன் படுத்திக் கொண்டு அந்தப் பதவியை இரகசியமாக ஏலம் விட்டுத் தனக்குத் தேர்தல் நன்கொடை திரட்டிக் கொள்ள முடிவு செய்தார். பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராகத் தேர்வு செய்யப்பட்டு விடுவார் என உறுதியாகத் தெரிந்துவிட்டதால் செனட்டர் பதவியை ஏலம் விடுவதற்கான இரகசிய பேரங்கள் அதிபர் தேர்தலுக்கு முன்பே தொடங்கி விட்டன. இதற்காக இரகசிய விருந்துகளும் நடத்தப்பட்டன. இதன் அடிப்படையில் ஜெஸ்ஸி ஜாக்ஸன் ஜுனியர் என்பவரிடம் 15 இலட்சம் அமெரிக்க டாலர்கள் 'நன்கொடையாக' வாங்கிக் கொண்டு அவரை செனட்டராக்கிவிட முடிவு செய்யப்பட்டது. ராட் ப்ளாகோஜேவிச்சுக்குச் சாதகமாக இப் பேரத்தை நடத்தி முடிப்பதில் அமெரிக்க வாழ் இந்திய முதலாளிகள் மும்முரமாக ஈடுபட்டனர். எனினும் பணம் கைமாறும் முன்பே இந்த இரகசிய பேரங்கள் இம்பலமாகி விட்டதால் ராட் ப்ளாகோஜேவிச்சும் அவரது இந்திய நண்பர்களும் இப்பொழுது கம்பி எண்ணிக் கொண்டுள்ளனர். பாரக் ஒபாமாவின் ஆதரவாளர்களுக்கும் இந்த ஊழலில் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டு அது எவ்வித விசாரணையுமின்றி அமுங்கிப் போனது. இந்தியாவும் அமெரிக்கா போல மாற வேண்டும் என துள்ளக் "சோ" உள்ளிட்டோர் வாதாடி வருகின்றனர். அவர்களின் நல்லெண்ணம் நடைமுறைக்கு வந்தால் தற்பொழுது இந்தியாவில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவில் நடைபெறும் ஊழலும் மோசடிகளும் அதிகார முறைகேடுகளும் இலட்சம் கோடி ரூபாயைத் தொடக்கூடும் ஒருவேளை அவர்கள் சொல்லும் 'வளர்ச்சி' என்பது இதுதானோ!

ரஹீம். நன்றி : புதிய ஜனநாயகம் பெப் - 2009

# அம்மணமாகி வரும் முதலாளித்துவம்

**வோல் ஸ்ரீற் Wall Street** அங்குதான் அமெரிக்காவின் பங்குச் சந்தையுள்ளது. மெயின் (Main Street) ஸ்ரீற் எனப்படுவது சாதாரன மக்கள் வாழும் பகுதியைக் குறிக்கிறது. அமெரிக்காவில் தினமும் இப்போது இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் மக்களின் வரிப்பணத்தை எடுத்து வோல் ஸ்ரீற் ஊழற் பேர்வளிகளுக்கு மீட்பு நிதியென்ற பேரில் அரசு நிதி வழங்குகிறது என்ற எதிர்ப்பு முழக்கம் எழுப்பப்படுகிறது. முதலாளித்துவ மோசடி ஊழல்லாப வேட்கை என்பனவற்றால் எழுந்துள்ள மோசமான நிதி நெருக்கடியானது அமெரிக்க மேற்குலகை மட்டுமன்றி உலகநாடுகளைப் பற்றிப் பீடித்து வருகிறது. இலங்கையில் ஊழல் மோசடிகளால் சிலிங்கோ நிறுவனம் 2600 கோடி ரூபா வைப்பு நிதியை ஏப்பம் விட்டது. அதற்கு முன் சக்வித்தி ரணசிங்காவும் தண்டுவம் முதலாளியும் மக்களின் பலநூறு கோடி ரூபா பணத்தை மோசடி செய்தனர். சில வருடங்களுக்கு முன் ஊழலால் பிரமுக்க வங்கியும் வங்கலோத்தானது. இந்த மோசடிகளுக்குப் பொறுப்பான இயக்குநர்கள் மதிப்பிற்குரிய பிரஜைகளாகவும் பொது சேவைத் தொண்டர்களாகவும் உயர் விருதுகள் பெற்ற கனவான்களாகவும் மக்களுக்குக் காட்டப்பட்டனர். இத்தகைய பண முதலைகள் செய்துகொண்ட பெரும் மோசடியால் பொது மக்களின் கோடிக்கணக்கான பணம் ஏப்பமிடப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் மீது உரிய காலத்தில நடவடிக்கை எடுப்பதில் அக்கறையின்மை தாமதம் என்பன காணப்பட்டதால் மக்கள் தமது பணச் சேமிப்பை இழந்து வீதியில் நிற்க விடப்பட்டுள்ளனர். இலாபங்கள் மட்டும் அந்த இயக்குநர்களின் தனிச் சொத்து. ஊழல் மூலமான நட்டம் ஏற்பட்டவுடன் அது அரசின் பொறுப்பாகி மக்களின் வரிப்பணத்தில் மீட்பு நிதி வழங்கப்படுகிறது. சிலிங்கோ குழுமத்தின் ஐந்து நிதிக் கம்பனிகளின் மீட்சிக்காக அரசு 420 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இவ்வாறான மீட்பு நடவடிக்கைகளை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன ஆட்சேபிக்கவில்லை. ஆனால் பொது மக்களுக்கு மானியம் வழங்குவதை மட்டும் இந்த நிறுவனங்கள் குறைக்குமாறு நிபந்தனை விதிக்கின்றன. வற்புறுத்தி அவற்றை வெட்டவும் நிறுத்தவும் செய்கின்றன. இதுதான் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் செயற்பாடாகும்.

அண்மையில் உலகிலேயே மிகப்பெரிய காப்புறுதி கம்பெனி எனப் பெருமைப்படும் "அமெரிக்க இன்சூரன்ஸ் குறூப்" (AIG) நிதி நெருக்கடியில் சிக்குண்ட போது அதற்கு அமெரிக்க அரசு சென்ற டிசம்பர் மாதத்தில் ஐந்து கோடி ஐம்பது இலட்சம் டொலர்களை வழங்கியது. பின்னர் 17000 கோடி டொலர் மீட்பு நிதி வழங்கப்பட்டது. இந்த இன்சூரன்ஸ் கம்பனியானது உயர் உத்தியோகத்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் 16500 கோடி டொலர்களை போனசாகவும் ஊக்கு விப்புக் கொடுப்பனவாகவும் வழங்கியதாக தகவல்கள் வெளியானதும் ஜனாதிபதி ஒபாமா அதுபற்றி தனது அதிருப்தியை வெளியிட்டார். மீட்பு நிதி என்ற பெயரில் மக்களின் வரிப்பணம் இவ்வாறு தான் பங்கிடப்பட்டது. ஒபாமாவின் அதிருப்தி வெறும் வசனங்கள் மட்டுமே. ஆனால் இந்தக் காப்புறுதிக் கம்பனிக்கு மேலும் 3000 கோடி டொலர் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பிருத்தானியாவில் றோயல் பாங்க் ஒவ் ஸ்கொட்லான்ட் வங்கி வீழ்ச்சியுற்ற போது அதன் நிறைவேற்று அதிகாரியாய் இருந்த நபருக்கு அந்த வங்கி வருடமொன்றிற்கு ஏழு லட்சம் (700 000) ஸ்ரேலிங் பவுன்சை இளைப்பாற்று ஊதியமாக வழங்கியது. இந்த நடவடிக்கை தெரியவந்ததும் பிரதமர் கோடன் பிறவுன் மற்றும் அவரது அமைச்சர்கள் அது செய்வோம் இது செய்வோம் என மிரட்டிய போதும் பணத்தை பெற்ற அதிகாரியான சேர் பிரட் குட்வின் அதைத் திருப்பிக் கொடுக்கவில்லை. மேற்கொண்டு எதுவும் இடம் பெறவில்லை. காரணம் என்ன என்பதைத்தான் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். பெரு முதலாளிகளுக்காகவும் பெரும் கம்பனிகளுக்காகவும் தான் முதலாளித்துவ அரசாங்கம் செயல்படுகிறதே தவிர மக்களுக்காக அல்ல என்பது தான் சாரம்சமான நடைமுறை உண்மையாகும்.

இது இவ்வாறிருக்க ஜேர்மனியான அலயன்ஸ் எஸ் ஈ நிறுவனம் அதன் 2008 க்கான முழு லாப நட்டக் கணக்கை வெளியிட்டுள்ளது. அந்த நிறுவனம் 321 கோடி டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

ஐரோப்பாவில் ஆயுள் காப்புறுதி ஓய்வூதியக் கொடுப்பனவில் மிகப் பிரமாண்டமான பிருட்டனின் அவிவா (AVIVA) நிறுவனம் 2008ல் 125 கோடி 80 இலட்சம் டொலர் நட்டத்திற்குள்ளானது. உலகின் பிரபல்யமான நிறுவனங்கள் பாரிய நட்டங்களை எதிர் நோக்குகையில் உலக வங்கி இந்த நெருக்கடியானது கடந்த அறுபது வருடங்களில் காணப்படாத பாரிய நெருக்கடி எனக் கூறியுள்ளது.

இந்த நிதி நெருக்கடியும் அதன் காரணமான பொருளாதார வீழ்ச்சிகளும் எதனைக் காட்டுகின்றன என்பதை அரசியல் ரீதியில் சிந்திக்கப்படல் வேண்டும். முதலாளித்துவமும் அதன் வளர்ச்சியான ஏகாதிபத்தியமும் என்றென்றும் நிலையானது என்றும் சோஷலிசம் வெற்றி பெறாதது என்றும் கூறப்பட்டு வந்த பெரும் பொய்யை இன்றைய உலகம் தழுவிய நிதி நெருக்கடி உடைத்தெறிந்துள்ளது. முதலாளித்துவத்தின் கோரத்தனத்தை நிர்வாணமாக்கிக் காட்டி நிற்கிறது. இங்கே தான் மாக்சிசத்தின் மூலச்சிறப்பாகக் காணப்படும் அரசியல் பொருளாதாரம் படிக்கப்பட வேண்டியதாகிறது. படிப்பது மட்டுமன்றி முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்களை அறிவூட்டி அணிதிரட்டிப் போராடவும் வேண்டியுள்ளது. **ஜீ.எஸ்**

புதிய பூமி 09 ஏப்ரல் 2009

# தனியார் பல்கலைக் கழகங்கள் அவசியமா?

## கல்வியும் மருத்துவமும் விற்பனைப் பண்டமல்ல

கல்வி என்பது பொருட்செல்வத்திலும் மேம்பட்ட ஒன்றாகப் பல நூற்றாண்டுகளாகப் போற்றிவரப்பட்டுள்ளது. நிலவுடைமைச் சமூகங்கள் பலவற்றிற் கற்றோர் பிறரினும் மேலானோராய்ப் போற்றப்பட்டனர். ஏனெனிற் கல்வி என்பது சமூக உற்பத்திக்கு அத்தியாவசியமானது. அத்துடன் அரசு நிருவாகம் முதலாகப் பல்வேறு அரச அதிகாரத் துறைகளின் செயற்பாட்டுக்கும் கல்வி முக்கியமானதாக இருந்தது. முதலாளியத்தின் வருகை கல்வியின் முக்கியத்துவத்தை மேலும் அறிமுகப்படுத்தியது. எனினும் எத்தகைய கல்வி எவருக்கான கல்வி என்பவற்றில் அது நிலவுடைமைச் சமூகத்தை விடவும் சனநாயகப் பண்புடையதாக அமைந்தது. இது முதலாளியத்தின் சனநாயக விருப்பால் நிகழவில்லை. முதலாளிய உற்பத்தி மேம்பாட்டுக்கு உழைப்போரின் கல்வித் திறனின் மேம்பாடு தேவைப்பட்டது. அதே வேளை அந்தக் கல்வி முதலாளிய சமூகத்தின்

## பல்கலைக் கழகங்கள் பட்டப்படிப்பு அங்காடிகளா?

இருப்பையே கேள்விக்குட்படுத்தும் என்பதை முதலாளியம் எதிர்பார்க்கவில்லை.

எவ்வாறாயினும் முதலாளிய சனநாயகத்தின் வருகையும் முதலாளிய உற்பத்தியின் தேவைகளும் எல்லாருக்குமான கல்வி என்பதையும் தேச அரசு என்பது வலுப்பட்டு வந்த சூழல் நாட்டில் எல்லாருக்கும் பொதுவான ஒரு கல்விமுறை என்பதையும் அவசியமாக்கின. முதலாளிய நலனை நாடும் அரசு கல்வியைத் தனது பொறுப்புக்களில் ஒன்றாக ஏற்றுக்கொண்டது. எனினும் உயர்கல்வி என்பது எல்லா முதலாளிய நாடுகளிலும் எல்லாருக்கும் உரியதாக இருக்கவில்லை. பாடசாலைக் கல்வி எல்லாத் தொழிலாளர்க்கும் தேவைப்பட்டது. அதற்கு மேலான கல்வி உடலுழைப்பிலும் இயந்திரங்களை இயக்குவதிலும் ஈடுபட்டோருக்குத் தேவையற்றது என்ற கண்ணோட்டத்தில் உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டன. அதை விடவும் பாடசாலை வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்களது கல்வி இலவசக் கல்வியாக இருந்த போதும் அதைத் தொடர்வதற்கான பொருளாதார வசதிகள் இல்லாததால் பல நாடுகளில் உயர்கல்வி என்பது நடுத்தர வர்க்கத்தினர் தம்மை மேம்படுத்திக் கொள்ளப் பயன்படுத்திய ஒரு சாதனமாகவே இருந்து வந்தது.

இலங்கையில் இலவசக் கல்வி ஆசியாவின் நாடுகள் பலவற்றிற்கும் முன்னரே பல்கழைக்கழகம் வரை விரிவுப்படுத்தப்பட்டு விட்டது. அத்துடன் தாய்மொழிக் கல்வியும் சேரக் கிராமப்புறத்து நடுத்தர வர்க்கத்தினருக்கும், கீழ் நடுத்தர வர்க்கத்தினரில் ஒரு பகுதியினருக்கும், தொழிலாளர் வர்க்கத்தினரில் சிறிய ஆனால் புறக்கணிக்க இயலாத ஒரு தொகையினருக்கும் உயர் கல்வி வாய்ப்புக்கள்

## மருத்துவமும் கல்வியும் பணம்படைத்தோருக்கே!

கிட்டின. இலங்கையின் பொருளாதார விருத்தி எவ்வளவு குறைபாடானதாக இருந்த போதும் அரசாங்க தொழிற்துறை தொடர்ச்சியாகவே வளர்ந்து கொண்டு வந்தது. எனவே அவ்வாறான வேலைவாய்ப்புக்கள் பெருகின. அதே வேளை கல்வி கற்றோர் தொகையும் பெருகி வந்தது. அரசாங்கத்திலும் பின்னர் உருவான அரசு சார்ந்த வங்கிகள் முதலாகக் கூட்டுத்தாபனங்கள் வரையிலான நிறுவனங்களிலும் வேலைகட்குத் தகுதியுடையோரின் தொகை கூடிக் கொண்டு வந்தது. உத்தியோகங்கட்கான தகுதியைப் படிப்படியாக உயர்த்தி வந்ததன் மூலம் அவற்றுக்கான போட்டியைக் குறைக்க முடிந்தாலும் எல்லாத் துறைகளிலும் அது இயலுமாகவில்லை. எனினும் பட்டம் பெறாமல் நல்ல உத்தியோகம் பெற இயலாது என்பது நிதர்சனமான உண்மையாகி விட்டது.

இந்தப் பின்னனியிலே உயர்கல்விக்கான போட்டி மேலும் வலுவடைந்தது. மருத்துவம் பொறியியல் சட்டம் போன்ற துறைகளில் பல்கழைக்கழக அனுமதியின் எண்ணிக்கை மட்டுப்பட்டிருந்தது. இது அரசாங்கக் கொள்கையால் என்று இல்லாமல் அவற்றுக்கான தகுதிவாய்ந்த ஆசிரியர் பற்றாக்குறையினாலும் பயற்றுவிப்புக்கு அவசியமான ஆய்வுகூட உபகரண வசதிகளின் போதாமையாலும் பொருளாதார நெருக்கடியின் விளைவாகக் கல்வியிலும் உயர்கல்வியிலும் மேலதிக அரசாங்க முதலீடு இல்லாமையாலும் ஏற்பட்ட ஒரு நிலைமை. இந்த நிலைமையில் உயர்கல்விக்கும் குறிப்பிட்ட துறைகளில் வேலைவாய்ப்புக் கட்டுமான போட்டி தீவிரமானது. அதன் விளைவாகப் பல்கலைக்கழக அனுமதி ஒரு அரசியற் பிரச்சினையாகி 1970 அளவில் பேரினவாத அரசியலின் விளைவான தரப்படுத்தலுக்கும் தேசிய இனப்பிரச்சினையின் தீவிரப்படுத்தலுக்கும் இட்டுச் சென்றது. உயர்கல்வி பற்றியும் நாட்டின் பொருளாதார விருத்தி பற்றியும் திட்டவட்டமான அரசாங்கக் கொள்கை நீண்ட காலமாகவே இல்லை என்பதை நாம் விளங்கிக் கொண்டால்

உயர்கல்வி இன்று எத்தகைய முட்டுச் சந்தில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளது என விளங்கும். பாடசாலை கல்வியைத் தனியார் மயமாக்கும் நோக்குடனும் வசதி படைத்தவர்களின் குழந்தைகள் அயல் நாடுகளிற் பட்டப் படிப்பை மேற்கொள்ள வசதியாக ஆங்கிலம் மூலம் தனியார் வழங்கும் விதமாகச் சர்வதேசங் பாடசாலைகள் 1978க்குப் பிறகு நிறுவப்பட்டு வந்து இன்று கொஞ்சம் வசதியான நடுத்தர வர்க்கத்தின் ஒரு பகுதியினர் கூடத் தங்கள் பிள்ளைகளை அங்கு அனுப்புகின்ற அளவுக்கு அவற்றின் எண்ணிக்கை பெருகி விட்டது.

அதன் அடுத்த கட்டமாக அந்நியப் பல்கலைக்கழகங்களின் ஊடுருவல் தொடங்கியது. இலங்கையின் பல்கலைக்கழகங்களில் படிக்கக் குறைந்த பட்சத் தகுதி பெற்ற மாணவர்களில் ஒரு சிறு பகுதியினருக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்கிறது. பிறர் வெளிவாரிப் பட்டங்களை நாடுகின்றனர். பல்கலைக்கழகங்கள் அவற்றை ஒழுங்கு முறையாக நடத்துவதாகக் கூற இயலாது. அதை விட இவ்வாய்ப்புக்கள் மாணவர்கள் அதிகம் விரும்புகிற துறைகளிற் கிட்டுவது குறைவு. எனவே உயர்கல்வி பல விதங்களில் வணிக மயமாக்கப்பட்டுச் "சந்தையால்" வழிநடத்தப்படுகிறது.

திறந்த பொருளாதாரமும் உலகமயமாக்கலின் பேரில் நடந்து வந்துள்ள பொருளாதார மாற்றங்களும் தேசிய உற்பத்தியின் இடத்தில் நுகர்வுப் பண்பாட்டையும் வணிகப் பொருளாதாரத்தையுமே இளைய தலைமுறைக்கான எதிர்காலமாகக் காட்டுகின்றன. இதன் விளைவாக ஆங்கிலக் கல்வி, தகவல் தொழில்நுட்பம், சந்தைப் படுத்தல் முகாமைத்துவம் போன்ற துறைகளிற் கூடிய வளர்ச்சி காணப்படுகிறது. அவ்வாறே மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்சார்ந்த துறைகளிற் மாணவர்கட்கு விருப்பு இருந்தாலும் இலங்கையில் அத்துறைகளில் பட்டப் படிப்பிற்கான வெளிவாரியான கற்கைக்கு வாய்ப்பு இல்லை. அரசாங்க முதலீட்டின் போதாமை காரணமாகப் பல்கலைக்கழக வாய்ப்புக்களும் குறைவாக உள்ள நிலையில் பின் கூறிய விதமான துறைகளிலும் வேறு சிறப்புத் துறைகளிலும் பட்டப் படிப்பிற்காக மாணவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்ப் படிக்க முற்பட்டனர்.

வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி பயில்வதற்கான செலவை இங்கிருந்து அனுப்ப முன்னர் இருந்து வந்த அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் திறந்த பொருளாதாரத்தின் விளைவாக முற்றாக நெகிழ்த்தப்பட்டு விட்டன. எனவே வெளிநாடுகளிற் பட்டம் பெறுவது பண வசதி உடையோருடைய பிள்ளைகட்கு இயலுமாயிற்று எனினும் நாலாண்டு பட்டப் படிப்பை மேற்கு ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ அவுஸ்திரேலியாவிலோ பெறுவதற்கு மொத்தச் செலவு அரைக் கோடி ரூபா வரையிலாகலாம். எனவே அதற்கு மாற்றாக ரஷ்யாவிலும் முன்னாள் சோவியத் குடியரசுகளிலும் அதைவிடக் குறைவான செலவில் கல்வி பயிலக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. அந்நியச் செலாவணித் தேவை காரணமாக இந்த நாடுகள் குறிப்பாக மருத்துவத்துறைப் பட்டப்படிப்பை வணிக நோக்கில் வழங்கி வந்தன. அதே வேளை மேலை நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் பல்கலைக்கழகங்களுக்கான அரசாங்க மானியம் குறைக்கப்பட்டு அவை தாமே தமது நிருவாகச் செலவை சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் விளைவாக அமையும் உயர் கல்வியை அந்நிய மாணவர்கட்கான விற்பனைப் பண்டமாக்கத் தொடங்கின.

பலவாறான வணிக உத்திகள் இன்று நடைமுறைக்கு வந்துள்ளன. நான்கு ஆண்டுகள் வெளிநாட்டிற் சென்று கற்க இயலாதவர்கட்கு மூன்று ஆண்டுகள் சொந்த நாட்டிலும் ஒரு ஆண்டு மட்டுமே பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ள நாட்டிலும் கல்வி புகட்டல் என்பது ஒரு வணிக உத்தியாகும். சில பல்கலைக்கழகங்கள் மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிற் நிறுவிப் பயணச் செலவையும் வாழ்க்கைச் செலவையும் குறைப்பதற்கு வசதி செய்து தமது கல்வித் திட்டத்தை மேலும் கவர்ச்சிகரமாக்கின. இவ்வாறு அந்நியப் பல்கலைக் கழகங்களின் பேர்களுடன் கூடிய பட்டங்கள் சந்தைப்படுத்தலாயின. முதலில் அதிகப் புகழ் பெறாத பல்கலைக் கழகங்களிலே பெரிதும் ஈடுபட்ட இந்தப் பட்டப் படிப்பு வணிகத்தில் இப்போது சில மதிப்புக்குரிய பல்கலைக் கழகங்களும் இறங்கியுள்ளன.

## சந்தைக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்குவதே நோக்கம்

மேற்கூறிய போக்கின் ஒரு அங்கமாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்காக பல நிறுவனங்கள் முக்கியமாக அமெரிக்கப் பிரித்தானியப் பட்டங்களை பெற்றுத் தருகிறதற்கானவை இன்று சர்வதேசப் பாடசாலைகளைப் போல நாட்டிற் பெருகி வருகின்றன. எல்லாப் பட்டங்களையும் அரசாங்கமும் தொழிற்துறை சார்ந்த நிறுவனங்களும் ஏற்காவிடினும் வசதிபடைத்த பெற்றோரின் நிர்ப்பந்தங்கள் பலவாறான வழிகளிலும் செயற்பட்டுவருகின்றன. இதன் தவிர்க்க இயலாத தொடர்ச்சியே தனியார் பல்கலைக் கழகங்களாகும்.

இலங்கையின் நிலைமையை அமெரிக்காவுடன் ஒப்பிடுவது பொருந்தாது. தனியார் பல்கலைக்கழகங்கள் ஐரோப்பாவின் முன்னாள் சோசலிச நாடுகளிலோ முதலாளிய நாடுகளிலோ அவுஸ்திரேலியாவிலோ இல்லை எனலாம். அந்த நாடுகளின் கல்வித் தரத்தின் மீது அரசு கட்டுப்பாட்டைப் பேண விரும்புகிறது. கல்வி இன்னமும் முற்றிலும் இலவசமாக அல்லது பகுதி இலவசமாகவும் சலுகைக் கட்டணத்திற்கும் கடனுதவியுடனும் வழங்கப்படுகிறது. அமெரிக்கக் கல்விமுறையின் விருத்திக்குரிய குறிப்பான சூழ்நிலைகள் மூன்றாமுலக நாடுகளில் இல்லை. எனவே தனியார் பல்கலைக்கழகங்கள் பல்வேறு வகைகளில் கல்வித் தரத்தையும் தகுதியுடைய மாணவர்களது உயர் கல்வி வாய்ப்புக்களையும் கடுமையாகப் பாதிக்கும். தகுதிவாய்ந்த ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைக்கு மேலாக செய்முறை வகுப்புகட்கான ஆய்வுகூடங்களும் பணியகங்களும் போதியளவில் இல்லாது தமது தேசியச் சூழலில் அரசாங்கம் ஒவ்வொரு பட்டதாரி மாணவருக்குமாகச் செலவழிக்கிற தொகை குறைந்து வருகிறது. வளங்களைப் பெருக்காமல் மாணவர் தொகையை பெருக்குமாறு பல்கலைக் கழகங்கள் வற்புறுத்தப்படுகின்றன. எனவே பொதுவாகவே கல்வித்தரம் பாதிக்கப்படுகிறது. பல்கலைக்கழக ஆசிரியர்களது ஊதியங்கள் தனியார் துறை உத்தியோகங்களுடன் ஒப்பிடுகையிற் குறைவாகவே உள்ளன.

இப்பின்னணியில் தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்போது முதலில் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்த அரசாங்கப் பல்கலைக் கழக அனுமதி கிட்டாதவர்கள் அங்கு போவர். இது அயல் நாடுகட்குப் போவதை விட மலிவானது. ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கத் தனியார் நிறுவனங்கள் கூடிய ஊதியமும் பிற ஊக்குவிப்புக்களும் வழங்குவதும் பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிப்பதும் எதிர்ப்பார்க்கக் கூடியது. இது அரசாங்கப் பல்கலைக்கழகங்களை நேரடியாகவே பாதிக்கும். ஏற்கனவே விழத் தொடங்கியுள்ள கல்வித்தரம் மேலும் சரிவு காண்பது தவிர்க்க இயலாதது.

எனவே தரங்குறைந்த அரசாங்க, தனியார் பல்கலைக்கழகங்கள் நடுவே சில தரமான் தனியார் பல்கழைக்கழகங்கள் உருவாகக் கூடிய நிலைமை தோன்றும். இது யாருடைய நன்மைக்கானது என்று யோசித்துப் பார்த்தால் ஒரு அற்ப சிறுபான்மையினருடைய நன்மைக்கானது என்று விளங்கும். உயர் கல்வியை விருத்தி செய்வதற்கான பொருள் வளம் அரசாங்கத்திடம் இல்லை என்பதே தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதை ஆதரிப்போர் முன்வைக்கும் முக்கியமான வாதம். அடுத்த படியாகத் தனியார் துறை அரசாங்கத் துறையை விடத் திறமாக இயங்கும் என்கிற வாதமும் உள்ளது. தனியார் துறை சந்தையின் தேவைக்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளவும் சந்தைக்குத் தேவையான விதமான பட்டதாரிகளை உருவாக்கும் எனவும் சிலர் கூறுகின்றனர். இவை எல்லாம் உண்மையான காரணங்களல்ல. 1970 கள் வரை வென்றெடுத்த பல உரிமைகள் இழக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் இயலுமாக இருந்த வரையறுக்கப்பட்ட சமத்துவத்துக்கும் குழி பறிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இரு பிரதான களங்களாகப் கல்வியும் மருத்துவமும் உள்ளன. அவற்றைக் காயப்போட்டுச் சாகடித்து அவற்றின் இடத்தில் பொருள் வசதிக்கு ஏற்ற தரமான வைத்தியமும் கல்வியும் என்கிற நிலையையே நாம் எதிர்நோக்குகிறோம்.

இன்றைய கல்வியும் உயர்கல்வியும் திருப்திகரமானவையல்ல. அவை நாட்டை முன்னேற்றக் கூடிய திறமை கொண்ட பட்டதாரிகளை உருவாக்கத் தவறுகின்றன என்றால் அது பட்டதாரிகளின் தவறு மட்டுமல்ல. கல்விக்கொள்கையும் பொருளாதாரக் கொள்கையும் குழறுபடியானவை. உயர்கல்விக்கான மூலதனத்தைச் சமூகத்திற்கு உள்ளிருந்தே திரட்ட இயலும். சமூகத்திடமிருந்து பெறுகிற கல்வியைச் சமூகப்பயனுடையதாக்க முடியும். தனியார் பல்கலைக் கழகம் இந்த நோக்கங்கட்கு எதிர்மாறான இலக்கையுடையவை. தனியார் கல்வியை ஆதரிக்கிற பலர் பரிந்துரைக்கும் கல்வித்துறைகளும் புதிய நிபுணத்துவமும் எவை? உலகமயமாதல், அந்நிய நாடுகளில்–வேலை வாய்ப்பு, அந்நிய முதலீட்டின் தேவைகளை சந்திப்பதற்கான திறமைகள் போன்று தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு முரணான கருத்துக்களையே வலியுறுத்துகின்றனர். தனியார் பல்கலைக்கழகங்களை எதிர்ப்பது அவசியம். ஆனால் அது போதாது. பாடசாலைக் கல்விக்கு ஒரு தேசிய அடிப்படை அவசியம். கல்வித் துறைக்கு ஒரு தெளிவான தூரநோக்கு அவசியம். எனவே இவ்விவாதம் தனியார் பல்கலைக்கழகத்துடன் நின்றுவிடாது நாட்டின் கல்விக் கொள்கை முழுவதையும் மறுபரிசீலனை செய்து கடந்த முப்பதாண்டு காலத்தில் ஏற்பட்ட பெருங் சீரழிவிலிருந்து கல்வியை மீட்டெடுப்பது பற்றியதாகவும் இருக்க வேண்டும்.

தனியார் பல்கலைக்கழகங்களை ஆதரிப்போர் நடுவே சீரழிந்த இடதுசாரிகளும் உள்ளனர். அவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்து வந்துள்ள துரோகங்களின் தொடரில் இதுவும் ஒன்றாக அமைகிறது. இவ்விடயம் தொடர்பான மக்கள் விழிப்புணர்வு இயக்கம் ஒன்று இல்லாமல் உலகமயமாதலுக்கு உயர்கல்வி பலியாவதை பாராலும் தடுக்க முடியாது.

தேசபக்தன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

**இமயவரம்பன் 18**

1935 முதல் 1945 வரையிலான காலப் பகுதியில் ஒரு புறம் முதலாளிய நிலவுடைமை வர்க்க நோக்கில் சிங்கள தமிழ் இனவாத அரசியலும் இன்னொரு புறம் இலங்கையின் தேசிய அரசியல் இடதுசாரிகளால் முன்னெடுக்கப்பட்டன. சட்ட சபையில் சிங்கள இனவாத அரசியல் சிந்தனையால் வழிநடத்தப்பட்ட முதலாளிய நிலவுடைமை வர்க்கப் பிரதிநிதிகளே ஆதிக்கத்தில் இருந்தனர். எனவே அக்கால இடைவெளியில் சட்ட சபை மூலம் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளில் வர்க்க நலன்களது முத்திரையும் பின்னர் இலங்கையின் எதிர்காலத்தைப் பாழாக்குவதற்குக் காரணமாய் அமைந்த பேரினவாத அரசியலின் முத்திரையும் ஆழப்பதிந்திருந்தன.

அதே வேளை தாங்கள் கற்று மேலுயர உதவிய மிஷனரிப் பாடசாலைகள் மீதான மற்றும் அப்பாடசாலை நிறுவனங்கட்கும் தமக்கும் பொதுவாக இருந்த வர்க்க நலன்களும் மிஷனரிப் பாடசாலைகளது செல்வாக்கிற்குக் கேடில்லாமல் நடந்து கொள்ளுமாறு சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடின்றிப் பலரையும் தூண்டின. எனவே பௌத்தர்களை ஏகப் பெரும் பான்மையாகக் கொண்டிருந்த சட்ட சபையில், இந்த முரண்பட்ட நோக்கங்களின் விளைவாகப் பலவாறான விட்டுக் கொடுப்புக்களின் நடுவே 27-26 வாக்கு வேறுபாட்டிலேயே கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## வர்க்க நலன்கள் வலுப் பெற்று வந்தன

டி.எஸ். சேனநாயக்கவின் தனியே சிங்களவர்களைக் கொண்ட அமைச்சரவை பின்னர் கைவிடப்பட்டாலும்' அது எதிர்காலத்திற்குக் கட்டியங் கூறிய ஒரு நிகழ்வாகும் இலங்கையின் விவசாயத்தைப் பாழாக்குவதில் முக்கிய பங்களித்த கொலனியவாதிகளே இலங்கையின் உணவு உற்பத்தியை முன்னெடுப்பதற்காக உலர் வலயத்தின் பழைய குளங்களை மீள் நிர்மாணிப்பதில் ஊக்கங் காட்டினார். முக்கியமாக அனுராதபுரம் பொலன்னறுவ மாவட்டங்களில் இருந்த பழைய நீர்த்தேக்கங்களை ஆதாரமாகக் கொண்டு குடியேற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கொலனி நிர்வாகம் இலங்கையில் முதலாளிய உற்பத்தி அடிப்படையில் நெற் பயிர்ச்செய்கையை விருத்தி செய்யச் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் எடுத்த முயற்கிகள் வெற்றி பெறாத நிலையிலேயே இவ்வாறான குடியே

> **1935 முதல் 1945 வரையான கால இடை வெளியில் சட்ட சபை மூலமான நடவடிக்கைகளில் வர்க்க நலன்களின் முத்திரையும் பேரினவாத முத்திரையும் ஆழப் பதிந்திருந்தன**

ற்றங்கள் நடைபெற்றன. இதன்போது தென்னிலங்கையிற் காணியற்றோராயிருந்த விவசாயிகள் குறிப்பிடத்தக்க பகுதியினர். அநுராதபுரம், பொலன்னறுவ மாவட்டங்களிற் குடியேற நேர்ந்தது. இது தென்னிலங்கையின் நிலவுடைமை வர்க்க நலன்கட்கு மிகவும் உடன்பாடான ஒரு நடவடிக்கையாகும். ஏனெனில் இடதுசாரி இயக்கத்தின் எழுச்சி தென்னிலங்கையில் நிலமற்ற விவசாயிகளைப் பெரிய காணிச் சொந்தக்காரர்கட்கு எதிராகத் திருப்பிவிடும் அவலத்தை குடியேற்றத் திட்டங்கள் தவிர்க்க உதவும் என அவர்கள் அறிந்திருந்தனர்.

இலங்கையின் மிக முக்கியமான ஒரு சமூகச் சீர்திருத்தம் இலவசக் கல்வியாகும். இதைச் சமூக நீதி சமூக நலன் என்கிற நோக்கில் மட்டுமே மெச்சுகிற ஒரு போக்கையே கடந்த அறுபது ஆண்டுகட்கும் மேலாகக் காணுகிறோம் அது மிகவும் முற்போக்கான சமூக நலன் சார்ந்த நடவடிக்கை என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் அதன் பின்னால் இருந்து வந்த நோக்கங்களையும் தாங்கள் சரிவர விளங்கிக் கொள்ளா விட்டால் ஏன் அக்கொள்கை நடைமுறைப்படுத்துவதில் இருந்த தடைகளைப் பற்றியும் அதிகம் பேசப்படுவதில்லை. ஏனெனில் யூ.என்.பி. இலவசக் கல்வி கொள்கைக்கு முழு உரிமை கொண்டாட விரும்புகிறது.

இலவசக் கல்விக் கொள்கையை 1939 முன்மொழிந்தவர் சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கர. 1939 கல்விச் சட்டம் வேறு பல அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. கிறிஸ்தவ பாடசாலைகள் கல்வியை மத மாற்றத்திற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்தமை பற்றிய கசப்புணர்வு 1930 தொட்டு வலுப்பட்டு வந்தது. பாடசாலைக் கல்வியை அரசாங்க நெறிப்படுத்தலுக் குட்பட்டதாக்கி மிஷனரிகளின் ஆதிக்கத்தை முறியடிப்பது முக்கியமான ஒரு சிங்கள பௌத்த அரசியல் நோக்கமாக இருந்தது. இவ்விடத்துச் சிங்கள அரசியல் தலைமையின் நடுவே முரணான நோக்கங்கள் செயற்பட்டன. இலங்கையின் பொருளா தாரம் ஓரளவு வலுப்பெறத் தொடங்கிய நிலையில் கல்வியில் அரசாங்கம் மேலும் முதலிடுவது இயலுமாயிருந்தது. (இந்த நிலை 1940 க்குப் பின்பு 1945ல் போர் முடிவுக்கு வரும் வரை தொடர்ந்தது. தோட்டத்துறை வருமானம் முக்கியமாக றப்பர் உற்பத்தித் துறையினது போர்க் காலத் தேவைகளின் விளைவாக உயர்வு கண்டது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.)

பெரு நகரங்கள் தவிர்ந்து கல்வியிற் பின்தங்கியிருந்த தென்னி லங்கையின் கல்வி விருத்திக்கு உதவிய இலவசக் கல்வி 1945ல் அறிமுகமானது. ஆயினும் அது திட்டமிட்டே மலையகத் தமிழருக்கு மறுக்கப்பட்டது. அங்கே தோட்டப் பாடசாலைகளில் வழங்கப்பட்ட கல்வி மிகச் சிறுபான்மையானோருக்கு எழுதவும் வாசிக்கவுமான ஆற்றலை வழங்கியது. பின்தங்கிய நிலையில் இருந்த அச் சமூகம் தொடர்ந்தும் அவ்வாறே இருந்து வருவது கொலனிய நிருவாகத்திற்கும் தோட்ட முதலாளிகட்கும் அரசியல் பொருளாதாரக் காரணங் கட்கு வசதியாயிருந்தது. அவர்கள் கல்வியறிவு பெற்றால் பல்வேறு உரிமைகட்கான அவர்களது போராட்டங்களும் இடதுசாரிகளது செல்வாக்கும் துரிதமாக வளரும் என்று அவர்கள் அறிவார்கள். அதே வேளை, அது சிங்களப் பேரினவாத அரசியல் நோக்கங்கட்கும் வசதியாய் இருந்தது. குறிப்பாக மலையகத்தில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பெரும் எண்ணிக்கையில் இருப்பது பேரினவாதிகட்கு நீண்ட காலமாகவே மனதை உறுத்தும் பிரச்சினையாக இருந்து வந்தது.

இலவசக் கல்வியை எதிர்த்தவர்களில் டி.எஸ்.சேனநாயக்க முக்கியமானவர். அவர் அதை எதிர்த்ததிற்கும் பொருளாதார மூல வளங்களின் போதாமையைக் காரணமாகக் கூறிய போதும் இவரது அரசியற் பிற்போக்குத்தனத்தில் பங்கு புறக்கணிக்க இயலாதது. அதேவேளை, தம்முள் மிகவும் முரண்படுகின்ற ஜே.ஆர். ஜயவர்தனவும் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவும் கன்னங்கர 1943இல் முன்வைத்த இலவசக் கல்வி ஆலோசனை 1944ல் சட்டசபையில் விவாதிக்கப்பட்டபோது அதை ஆதரித்தனர்.

இலங்கையில் அரசமொழியாக ஆங்கிலத்தின் இடத்திற் சிங்களமே வர வேண்டும் என்ற பிரேரணை 1943 ல் ஜே.ஆர்.ஜெயவர்தனவால் 'முன்மொழியப்பட்டது. இந்தியாவின் தேசிய மொழியாக ஹிந்தியை கொண்டு வருகிற ஆலோசனையின் ஒரு பிரதிபலிப்பாக இதைக் காணலாம். ஆயினும் பிரதான மொழிகள் என ஏற்கப்பட்ட பதினைந்திற்கும் அதிகமான மொழிகளையும் நூற்றுக்கும் அதிகமான சிறுபான்மைச் சமூகங்களது மொழிகளையும் கிளைமொழிகளையும் கொண்ட ஒரு நாட்டில் ஒரு பொது மொழி தேவை என்ற கண்ணோட்டத்தில் அங்கே முன்வைக்கப்பட்ட கொள்கையில் பல் தவறுகள் இருந்தன. அது பேரினவாத நோக்கிலே முன்வைக்கப்பட்டதாக கூறுவது பொருந்தாது. எனினும் ஹிந்து-ஹிந்தி என்கிற மதஞ்சார்ந்த அரசியலின் உருவாக்கத்திற்கு அது கையாளப்பட்ட விதம் உதவியது என்பதை மறுக்க இயலாது. இலங்கையில் இரண்டே மொழிகள் இருந்த சூழ்நிலையில் நாட்டின் காற்பங்கிட்கும் அதிகமானோர் பேசிவந்த ஒரு மொழியை மறுக்கும் விதமான அந்த ஆலோசனை சிங்களப் பேரினவாதத்தின் பிற்கால விஷமத்தனத்திற்கு அது ஒரு முன்னறிவித்தலாக அமைந்தது என்பது மறுக்க இயலாதது. டி.எஸ் சேனநாயக்க அதை ஏற்கவில்லை. பண்டாரநாயக்கவும் ஏற்கவில்லை. எனவே சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக வேண்டும் என்ற பிரேரணை ஒரு சமரசமாக ஏற்கப்பட்டது.

போர்க்காலப் பொருளாதாரச் செழிப்பின் விளைவாக 1930 களில் முன்னெடுக்கப்பட்ட விவசாய விருத்தி முயற்கிகள் போரின் முடிவிற் பின்னடையத் தொடங்கின. அரிசி இறக்குமதியின் அளவு 1945இல் போர் முடிந்தவுடன் மறுபடியுங் கூடத்தொடங்கியது. போர்க்காலப் பணப்புளக்கத்தின் அதிகரிப்பு விலைகளின் உயர்வுக்கும் காரணமாயிற்று. எனினும் ஏற்றுமதிப் பொருளாதாரம் வலுவாக இருந்த சூழ்நிலையில் பல்வேறு சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது இயலுமாயிற்று. முன்னேறிய சுகாதார சேவைகள் உணவு விலைகளை கட்டுப்படுத்துவதற்கான அரசாங்க நிவாரணம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

எனினும் இலங்கைக்கு பூரண சுதந்திரம் என்ற கருத்தை வலியுறுத்துகிற தைரியம் இந்தத் தேசியத் தலைவர்கட்கு உலகப் போர் முடியும் வரை மனத்தில் எழவில்லை. அதைப் பேசிவந்த இடதுசாரிக் கட்சிகள் மீது போரைக் காரணங்காட்டி விதிக்கப்பட்ட தடையால் அது தடைப்பட்டிருந்தது. அன்றைய இடதுசாரிகளில் ஒரு பகுதியினர் ட்ரொட்ஸ்கியர் எனவும் மறு பகுதியினர் கம்யூனிற்றுக்கள் எனவும் அறிவோம். ட்ரொட்ஸ்கியர்களின் குழப்பமான அரசியல் சிந்தனையின் விளைவாக இந்தியப் புரட்சியில்லாமல் இலங்கையிற் புரட்சி இயலாது என்ற கருத்து சமசமாஜக் கட்சிக்குள் வலுப்பெற்றது. எசமானர்களின் பிடியிலிருந்து தப்புவதற்காகச் சில தலைவர்களும் சிறைபிடிக்கப்பட்டுச் தப்பியோடிய சில தலைவர்களும் இந்தியாவில் இருந்து ட்ரொட்ஸ்கிவாதிகளுடன் இணைந்து செயற்பட்டனர்.

ஐக்கிய சோசலிசக் கட்சி என்ற பேரில் இயங்கிய கம்யூனிஸ்டுக்கள் இலங்கையில் தலைமறைவாகவே இயங்கி வந்தனர். சோவியத் யூனியன் உலகப் போரில் சம்மந்தப்பட்டு அதனுடைய உதவியின்றி ∴பாஸிச ஜேர்மனியை முறியடிக்க இயலாது என்ற சூழ்நிலை உருவாகிய பின்னணியில் 1943ம் ஆண்டு ஐக்கிய சோசலிசக் கட்சி தன்னைக் கம்யூனிஸ்ட் கட்சியாக மீளமைத்துத் தன் அரசியற் பணிகளைத் தொடர்ந்தது.

எனினும் 1935 முதல் இடதுசாரி இயக்கம் கண்டு வந்த எழுச்சி 1940ல் ட்ரொட்ஸ்கியர்களது சூழ்ச்சிக்கர அரசியலின் விளைவாக உடைவையும் இழப்புக்களையும் சந்தித்தது. இந்தப் பலவீனத்தின் விளைவாக கொலனி நிருவாகத்தால் பெரும் வெகுசன எதிர்ப்புக்கு முகங்கொடுக்காமலே இடதுசாரிக் கட்சிகளைத் தடைசெய்ய இயலுமாயிற்று. அதை விடவும் சமசமாஜக் கட்சியின் தலைமைத்து

> **இலங்கையின் இடதுசாரி இயக்கம் பரந்துபட்ட வெகுஜன இயக்கமாக விருத்தி பெறாத சூழலில் சிங்களப் பேரினவாத தமிழ்க் குறுகிய தேசிய வாத முதலாளிய நிலவுடைமை வர்க்கங்களே ஆதிக்கம் செலுத்தின.**

வம் வசதிபடைத்தவர்களும் படித்த நடுத்தர வர்க்கத்தினர் சிலரதும் ஆதிக்கத்தில் இருந்ததால் அது வெகுசன அரசியலில் அதிக அக்கறை காட்டவில்லை. அதன் பலவீனங்களிற் சில கம்யூனிஸ்ற்றுக்களையும் பீடித்திருந்தன. எனவே இடதுசாரிகளின் தலைமையிலான ஒரு வெகுசன சுதந்திர இயக்கம் விருத்தி பெறாத நிலையில் போர் முடிகின்ற காலம் வரை சட்டசபை அரசியலில் இருந்த சிங்களப் பேரினவாத, குறுகிய தமிழ்த் தேசிய முதலாளிய நிலவுடைமை வர்க்கங்களே ஆதிக்கஞ்செலுத்தின. அவற்றின் குறுகிய இனவாத நோக்கங்கள் பிற சிறுபான்மை இனங்களையும் பாதித்தன. எனவே போருக்குப் பின்பு கொலனி ஆட்சி முடிவுக்கு வரக் கூடிய ஒரு சூழலில் முழுநாட்டுக்குமான ஒரு தேசியத் தலைமை வழங்கி வழிநடத்தக் கூடிய ஒரு முதலாளியத் தலைமை கூட இல்லாது போயிற்று.

---

### மலையகத் தோட்டம்

4ம் பக்க தொடர்ச்சி

தோட்டங்கள் கிராமங்களாகவோ, நகரங்களாகவோ அமைக்கப்படவில்லை.

இந்நிலையில் தோட்டங்களை நடத்துவதற்கான சிறு தோட்ட உரிமையாளர்களிடம் தோட்டங்களை ஒப்படைப்பதால் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் இருப்பு பாதிக்கப்படும். பெரிய கம்பெனிகளிடமிருந்து தொழிலாளர்களை மீட்பதற்கு பதிலாக சிறு நில உரிமையாளர்களிடம் அவர்களை கொத்தடிமைகளாக்குவதற்கே வழி ஏற்படும். தோட்டங்களை சிறுதோட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதென்பது 1970-1977 வரையிலான பேரினவாத கொடுமைகளை விட மிகவும் கொடிய நிலைமைக்கு தொழிலாளர்களை பலி கொடுப்பதாகவே இருக்கும். 1970களில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டப் பின் காணி உச்ச வரம்பு 50 ஏக்கர்களாக்கப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட, உருவாகிய வர்க்கமே சிறு தோட்ட உரிமையாளர்களாகவர். அவர்கள் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை கணக்கெடுக்காத தொழிலாளர்களை இனரீதியாக அடக்கி ஒடுக்கும் நிலச்சுவாந்தர்களே பெருந்தோட்ட கம்பெனிகளிடமிருந்து விடுதலையடைய வேண்டிய தொழிலாளர்களை சிறு நிலச்சுவாந்தர்களிடம் பண்ணை அடிமையாக்குவது பெருந்தோட்டக் கம்பெனிகளால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வாகாது.

சிறுதோட்ட உரிமையாளர்களிடம் பெருந்தோட்டங்களை ஒப்படைப்பதென்பது ஸ்தாபனப்படுத்தப்பட்ட தொழிலாளர்களை சீரழித்து அவர்களின் இருப்பை சிதைத்து அவர்களின் மலையக தேசிய இனத்துவ வளர்ச்சியை அழிப்பதற்கே வழிவகுக்கும். இதனை ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான அமைச்சர் டி.யூ குணசேகரவிற்கு விளங்கிக் கொள்ள முடியாது. கைநிறைய பிரித் நூல் கட்டியிருக்கும் அவருக்கு தோட்டத் தொழிலாளர்களின் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினை விளங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் கம்யூனிஸ்ட் (திரிபுவாத) கட்சி என்ற பெயரில் முதலாளித்துவத்திற்கு முட்டுக் கொடுப்பதே அவர்களது நிலையாகும்.

### சில யோசனைகள்

அரசாங்க உடைமையிலிருந்த போது பெருந்தோட்ட பொருளாதாரத்திற்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக பெருந்தோட்டங்களை தனியாருக்கு ஒப்படைத்தல் நடவடிக்கையை (1991) மலையகத்தின் பிற்போக்கு நடைமுறை என தொழிலாளர் வர்க்கத்தின் சார்பில் எதிர்க்கப்பட்டது. அதேபோன்று பெருந்தோட்டக் கம்பெனிகளிடமிருக்கும் தோட்டங்கள் சிறு தோட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைக்க எடுக்கப்படும் தொழிலாளர் வர்க்க விரோத பேரினவாத முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும். மாற்று பொருளாதார திட்டங்கள் ஏற்படுத்தப்படும் மை தொழிலாளர்களின் வாழ்வாதாரமாகவுள்ள பெருந்தோட்டத் தொழில் துறை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான அடிப்படைக் காரணம் அதனை நம்பி இருக்கும் 4 லட்சம் தொழிலாளர்களின் இருப்பு பற்றிய பிரச்சினையை மறக்கவோ மறுக்கவோ முடியாது. அரசாங்க உடைமையிலிருந்து பெருந் தோட்டங்களை தனியார் கம்பெனிகளுக்கு ஒப்படைக்க வேண்டுமென்பதற்கு 'ஆதரவாக அன்று மலையக சமூகத்தின் புத்தி ஜீவிகள் எனப்படும் சிலரின் ஆய்வு சிபாரிசு என்பன துணைபுரிந்தன. தற்போது தனியார் கம்பெனிகளிடமிருந்து சிறுதோட்ட உரிமையாளர்களிடம் தோட்டங்களை ஒப்படைக்க வேண்டுமென ஆய்வுகளையும் சிபாரிசுகளையும் சில மலையக புத்தி ஜீவிகள் எனப்படுபவர்கள் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் ஆய்வால் முன்வைக்கப்படும் சிபாரிசுகள் தோட்டத் தொழிலாளர்களினதும் மலையகத் தமிழ் தேசிய இனத்தினதும் இருப்பிற்கு ஆபத்தானவையாகும். பெருந்தோட்ட துறையையும் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் உடனடி மாற்றுவழி யாதெனில் தொழிலாளர்களையும் தனியாரையும் அரசாங்கத்தையும் உள்ளடக்கிய கூட்டுறவு சங்க அமைப்புகளை ஏற்படுத்தி பெருந்தோட்டங்களை இயக்குவதே சிறந்த தெரிவாகும். அந்தக் கூட்டுறவு நிர்வாகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதைப் பற்றி ஆய்வுகள் செய்யலாம். வெளிநாட்டு கம்பெனிகள் அரசாங்க நிறுவனங்கள் பெருந்தோட்ட பண்ணாட்டு கம்பெனிகள் அடைந்த தோல்விகளை தவிர்த்து தொழிலாளர்களின் பங்களிப்புடனான கூட்டுறவு அமைப்புகளின் மூலம் வெற்றியைக் காண முடியும். இதன் மூலமே பெருந்தோட்டப் பொருளாதாரத்தையும் தொழிலாளர்களையும் பாதுகாக்க முடியும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சிதைக்கப்பட்ட வடக்கு கிழக்கின் வாழ்வும் வளமும்

வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வும் வளமும் சிதைக்கப்பட்டத் தொடங்கி முப்பது ஆண்டுகள் ஆகின்றன. பேரினவாத ஒடுக்கு முறை யுத்தமும் அதற்கெதிரான போராட்டங்களுமே இச் சிதைவின் காரணிகளாகும். கிழக்கை அத்தகைய அவலத்திலி ருந்து மீட்டுவிட்டதாக ஆளும் மகிந்த சிந்தனை அரசாங்கம் கூறி வருவதுடன் அங்கு "கிழக்கின் உதயம்" நிகழ்க்கித் திட்டத்தின் கீழ் துரித அபிவிருத்தியும் அரசியல் நிர்வாக நடைமுறைகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருப்பதா கவும் அரசாங்கப் பரப்புரைகள் ஓயாது ஒலித்த வண்ணம் உள் ளன.

அதே வேளை வடக்கை விரைவில் முழுமையாக விடுவித்து அங்கு "வடக்கின் வசந்தத்தை" முன்னெடுக்கப்போவதாகவும் அரசாங்கம் சூளுரைத்து நிற்கிறது. ஏ9 நெடுஞ்சாலை திறப்பும் புகையிரதப் பாதைப் புனரமைப்பும் உள்ளூராட்சித் மாகாணசபைத் தேர்தல் வைப்பும் என்றவாறு ஆசை வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன. இவை போன்ற நிகழ்ச்சி நிரலினால் சிதைத்து சீரகுலைக்கப்பட்ட வடக்கின் வாழ்வையும் வளத்தையும் மீட்டுப் பழைய நிலைக்குக் கொண்டுவந்து விடமுடியுமா என்பதே பெரும் வினாவாகும்.

அதுமட்டுமன்றி வடக்கின் விடிவிப்பு என்பது தற்போதைய முல்லைத்தீவின் மனிதாபிமானப் போருடன் அதன் வெற்றி என்பதுடன் முடிந்து விடப் போகின்றது என்றே கூறப்பட்டு வருகிறது. ஏனெனில் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு போராட்டங்களும் அவற்றை அடக்குவதற்கான யுத்த முனைப்புகளும் உருவாகுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது தேசிய இனப்பிரச்சினையாகும். அப்பிரச்சினை பேரினவாத ஒடுக்கு முறையிலிருந்தே உருவாகியது. எனவே அப்பிரச்சினைக்கு நியாயமானதும் வடக்கு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நுமான அரசியல் தீர்வு காணப்படாத சூழல் நீடிக்கும் வரை சிதைக்கப்பட்ட வடக்கு கிழக்கின் வாழ்வையும் வளத்தையும் மீட்க முடியாது என்பதே நிலவி வரும் யதார்த்தமாகும்.

இவ்வேளையில் தான் வடக்கின் இன்றைய வாழ்நிலையை ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. வடக்கு என்பது வட மாகாணமாகும். அது இரண்டு பிரதான நிலப்பரப்பை உள்ளடக்கியது. ஒன்று, ஆனையிறவுக்கு அப்பாலான யாழ் குடாநாடு. இரண்டாவது, நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பெரு நிலப்பரப்பு யாழ் குடாநாடு 1995ல் ராணுவ நடவடிக்கையால் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இன்றுவரை அங்கு ராணுவ சிவில் நிர்வாகமே இருந்து வருகிறது. ஆனால் வன்னி நிலப்பரப்பு 2008ம் ஆண்டின் ராணுவ நடவடிக்கை மூலம் படிப்படியாக அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது முல்லைத்தீவின் ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் புலிகள் இயக்க செயற்பாட்டை ராணுவம் தனது தீவிர யுத்தத்தின் மூலம் முடக்கி வைத்திருக்கிறது. அச்சிறிய நிலப்பரப்பிற்குள் உள்ள மக்களை மீட்கவும் புலிகளை அழிக்கவும் என்று கூறியே கடுமையான யுத்தம் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் அந்நிலப்பரப்பிற்குள் சுமார் இரண்டு லட்சம் மக்கள் வரை அகப்பட்டு நிற்பதுடன் நாளாந்தம் ஐம்பது முதல் நூறு வரையானோர் இறக்கவும் படுகாயங்கள் பட்டும் வரும் அவலத்தைக் காணமுடிகிறது. அத்துடன் உணவு உடை இருப்பிடம் மருந்து மருத்துவம் என்பனவின்றி மக்கள் பேரவலங்களுக்குள் இருந்து வருகிறார்கள். தமது வாழ்வையும் வளங்களையும் இழந்த ஒரு பகுதி மக்கள் தமது உயிர்வாழ்வுக்கும் மற்றொரு பகுதி மக்கள் முடக்கப்பட்ட முகாங்களில் சுதந்திரம் மறுக்கப்பட்ட வாழ்வுக்கும் ஆளாகி நிற்கிறார்கள்.

அதே வேளை யாழ் குடா நாட்டு மக்கள் தமது சொந்த மண்ணிலும் இருப்பிடங்களிலும் வாழ்கின்றோம் என்ற ஒருவகைத் திருப்தியுடன் இருந்து வருகிறார்கள். இருப்பினும் தாம் முன்பு பெற்றிருந்த சுதந்திர ஜனநாயக இயல்பு வாழ்வை இழந்தவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். சுதந்திர மனிதர்களின் பிறப்புரிமை என்பது உலகில் நிலைநாட்டப்பட்ட பின்பு ஜனநாயகம் சமத்துவம் மனித உரிமைகள் என்பன வகுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. அவற்றை அனுபவிப்பதில் ஏற்றத் தாழ்வுகளும் சமத்துவ இன்மைகளும் வேறுபட்ட அளவுகளில் இருந்து வந்த போதிலும் சுதந்திரம் ஜனநாயகம் சமத்துவம் பற்றிய கருத்துக்களை முன்வைக்கவும் அவற்றின் பால் செயற்படவும் கூடிய நிலைமை இருந்து வந்தன. ஆனால் கடந்த முப்பது வருடகாலப் பேரினவாத ஒடுக்குமுறைக்கான ராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டு யுத்தமாக முன்னெடுக்கப்பட்ட சூழலில் இயல்பு வாழ்வு படிப்படியாகச் செயலிழக்கச் செய்யப்பட்டன. தமிழர் தரப்பில் தோன்றிய போராளி இயக்கங்கள் தமிழீழ விடுதலை மட்டுமே வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு நிரந்தர விமோசனம் எனக் கோரிக்கை முன்வைத்து ஆயுத நடவடிக்கைகளில் இறங்கின. இவ்வியக்கங்களின் தூரநோக்கற்ற கொள்கைகளும் யதார்த்தத்திற்கு ஒவ்வாத நடைமுறைகளும் ஆயுதங்களை மட்டுமே நம்பிய செயற்பாடுகளும் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களின் வாழ்வையும் வளங்களையும் சிதைந்து அழிவுகளுக்கு உள்ளாக்குவதில் தம் பங்கினைச் செலுத்தி நின்றன. மறுபுறத்தில் யுத்த அழிவுகள் மக்களின் வாழ்வையும் வளத்தையும் பாழ்படுத்திக் கொண்டன. இவற்றினூடே ஜனநாயக இயல்பு வாழ்வு மறுக்கப்பட்டன. மக்களின் கருத்துக் கூறும் சுதந்திரம் பேரினவாதத் தரப்பாலும் தமிழர் போராட்ட இயக்கத் தரப்புகளாலும் மறுக்கப்பட்டது. இழப்புகளும் அழிவுகளும் விடுதலைக்கு அடிப்படைகள் என்று காட்டப்பட்டன. அதன் அடிப்படையில் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வும் வளமும் சிதைக்கப்பட்டன. இந்நிலை தமிழ்த் தேசிய இனத்தை பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாட்டுத் தளங்களில் சிதைத்து நிலைகுலைய வைக்க விரும்பிய பௌத்த சிங்கள பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கு வாய்ப்பையும் வசதிகளையும் வழங்கியது.

கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழ்த் தேசிய இனத்தினதும் வடக்கு கிழக்கு மக்களினதும் ஒட்டு மொத்த வாழ்வும் வளமும் எவ்வாறு சிதைத்து சீரகுலைக்கப்பட்டன என்பது பற்றியும் பரந்தளவிலான அரசியல் விவாதம் தொடங்கப்படல் வேண்டும். அத்தகைய விவாதத்தில் மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்கக் கூடிய சூழல் உருவாக்கப்படுவது அவசியம். ஏன் எப்படி எதற்காக போன்ற கேள்விகள் எழுப்பப்பட்ட நேர்மையான விவாதமும் விமர்சனமும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் ஊடாகவே அனுபவங்கள் பட்டறிவுகளின் அடிப்படையில் சரியான திசைநோக்கி சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட முடியும்.

வடபுலத்தான்

# ஒஸ்கார் விருதும் அதன் மறுபக்கமும்

அண்மையில் தமிழகத்தின் இசையமைப்பாளர் ஏ.ஆர் ரஹ்மானுக்கு இரண்டு ஒஸ்கார் விருதுகள் அமெரிக்காவின் லோஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த விருது விழாவில் வழங்கப்பட்டன. அதன் மூலம் உலகத் தமிழர்கள் எல்லோருமே பூரிப்படைந்து நிற்பதாகத் தமிழ் ஊடகங்கள் பறைசாற்றிக் கொண்டன. ரஹ்மான் ஒரு முஸ்லீமாக இருந்த போதிலும் அவர் ஏற்கனவே தமிழ் அடையாளத்தில் ஒன்றான இந்து மதக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கண்டறிந்த பின்பே "ஒஸ்கார் தமிழன் " என்ற பட்டத்தையும் பரப்புரை செய்து கொண்டன. எதிலும் தமிழ் இன அடையாளத்தைப் புகுத்தி அதில் பழம் பெருமையும் வீண் வீம்பும் கொள்ளும் நடைமுறையில் இருந்து நமது ஊடகங்கள் என்றுமே மாற மாட்டாது.

இங்கே சினிமா இசையமைப்பாளர் ஏ.ஆர் ரஹ்மானின் இசையமைப்பு பற்றியோ அதன் நீட்டு முடக்குப் பற்றியோ நாம் விவாதிக்கவில்லை. நமது கவனம் எல்லாம் இந்த ஒஸ்கார் விருதின் பின்னால் உள்ள விடயங்கள் பற்றியதேயாகும். அப்போது தான் சினிமாவிற்கான ஒஸ்கார் விருதின் மறுபக்கம் பார்க்கப்பட வேண்டியதாகிறது. அமெரிக்காவின் ஹொலிவூட்டாக, மும்பையின் போலிவூட்டாக, தமிழகத்தின் கோடம்பாக்கமாக உள்ள அனைத்து சினிமா உலக மையங்களும் பணம் பண்ணும் வர்த்தகமையங்களாகவே இருந்து வருகிறன என்பது இலகுவில் மறக்கப்படுகிறது. அத்துடன் சமூகச் சீரழிவுகளின் குப்பைத் தொட்டிகளாகவும் சினிமா உலக மையங்கள் காணப்படுகின்றன. மக்களிடமிருந்து பணத்தைக் கறக்கும் வழியிலேயே பெரும்பாலான சினிமாப் படங்கள் ஓடவிடப்படுகின்றன. அவர்களிடம் பணம் லட்சம் கோடியாகக் குவிகிறது. மக்களிடம் கருத்தியல் பண்பாட்டுச் சீரழிவுகள் வலுப் பெறுகின்றன.

அமெரிக்காவில் 1929ம் ஆண்டிலிருந்து இந்த ஒஸ்கார் விருது வழங்கும் நடைமுறை இருந்து வருகிறது. இதனை "நோபல் பரிசு" "புக்கர் பரிசு" "உலக அழகித் தேர்வு" போன்ற சர்வதேசப் பரிசு வழங்கல்களுக்கு ஒப்பிடலாம். இப் பரிசுகள் யாவும் பணம் புகழ் போன்றவற்றுடன் மட்டுமன்றி சந்தை வர்த்தகம் போன்றவற்றுடனும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நோக்கங்களை விரிவுபடுத்துவதுடனும் சம்மந்தப்பட்டவையாகும். அடுத்தடுத்து இந்தியாவின் அழகிகள் என்போருக்கு உலக அழகிப் பட்டமும் கிரீடமும் வழங்கப்பட்டதற்குப் பின்னால் சந்தையும் வர்த்தகமும் விளம்பரமும் வியாபாரமும் பல்தேசிய நிறு வனங்களால் முன்னெடுக்கப்பட்டன. விளம்பரங்களுக்கும் சினிமாவிற்கும் அவ் "உலக அழகிகள்" நன்கு பயன்படுத்தப் பட்டனர். அவர்களும் அவர்களை சுற்றியிருந்தவர்களும் பன்முகப் பயன்களும் பெற்றனர். ஆனால் மக்களது நிலை இன்றும் 77 சதவீதமான இந்திய உழைக்கும் மக்கள் ரூபா 20 வருமானத்துடன் பசிபட்டினியுடன் தான் வாழவேண்டியுள்ளது.

உதாரணமாக இப்போது இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற ஏ.ஆர். ரஹ்மானை அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் இரண்டாவது மிகப் பெரிய செல்போன் தயாரிப்பு நிறுவனமான மோட்டரோலா தனது சர்வதேச விளம்பர மொடலாக ஒப்பந்தம் செய்துள்ளது. அதற்கு வழங்கும் தொகை 28 கோடி ரூபாவாகும். ஏற்கனவே இந் நிறுவனம் உலகக் கால் பந்து வீரரான டேவிட் பெக்காவை ஒப்பந்தம் செய்து 22 கோடி ரூபாவை வழங்கியிருக்கிறது. இப்போது "ஒஸ்கார் தமிழனை" அவ்விராட்சத பல்தேசிய நிறுவனம் தனது விளம்பரத்திற்குப் பயன்படுத்த இத்தனை கோடிகளைக் கொடுத்து வாங்கியுள்ளது. இந்த இசைப்புயல் இனிமேல் அவ் ராட்சத மோட்டரோலா நிறுவனத்திற்காக இசையும் போஸ்சும் கொடுக்கப் போகிறார். மோட்டரோலாவைப் பயன்படுத்தி நன்மை பெறுங்கள் என மக்களுக்கு ரஹ்மான் இசையுடன் கூறப்போகிறார். அதனால் கோடி கோடியாக அந் நிறுவனம் கொள்ளை லாபம் பெறப்போகிறது. இதைத்தான் உலக அழகிகள், கால்பந்து, கிறிக்கெட் முன்னணி வீரர்கள், சினிமா நட்சத்திரங்கள் என்போர் செய்து வருகிறார்கள். மக்களின் மாற்றுச் சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடம் வைக்காத வகையில் உலகளவிலான திசை திருப்பல்களைச் செய்வதற்கு மதம் சினிமா விளையாட்டு என்பன உலகமயமாக்கப்பட்டு வருகிறது. பட்டங்களும் விருதுகளும் நாடு இனம் மொழி என்ற அடிப்படையில் சந்தைகளை விரிவாக்கவும் பல் தேசிய நிறுவனங்களை வலுப்படுத்தவும் பயன்படுகின்றன. அதில் ஒன்றே ஏ.ஆர் ரஹ்மானுக்கு வழங்கப்பட்டுள்ள ஒஸ்கார் விருதுகளும் புகழ்ப் பரப்புரைகளுமாகும்.

# கண்டதும் கேட்டதும்

## செய்திக் கோப்பு

## செங்குருவி

### • வடக்கில் மனித உரிமைகள்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பாதுகாலவர் பயிற்சி நெறி நிகழ்வு இடம் பெற்றது. யாழ் பிராந்தியத்தில் இயங்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவே இப் பயிற்சி நெறி நிகழ்வை அரச நிறுவனங்க ளுடன் இணைந்து நடாத்தியது. அதே யாழ் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 1200 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகக் கூறியுள்ளது. இவற்றில் 120 பேர் காணாமல் போயுள்ளனர். 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர் 200 பேர் வரை சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர். என்றும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய மனித உரிமை மீறல்களைச் செய்த வர்கள் யார்? அவர்கள் மீதான நடவடிக்கை என்ன? பாதிக்கப் ட்டவர்களுக்குரிய நிவாரணம் யாது? இவற்றையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். பயிற்சி நெறி நிகழ்வில் இவற்றுக்கு பரிகாரம் தேடப்பட்டதா?

### • ஐயோ வாக்களித்த மக்கள்

அண்மையில் இடம்பெற்ற மத்திய மாகாண சபைத் தேர்தலில் அமோக வாக்குகள் பெற்று உறுப்பினரான ஒருவர் பொது நிகழ்வொன்றில் பேசும் போது தோட்டத்திற்குத் தோட்டம் கோவில்கள் கட்டப்பட வேண்டும் என்றார். மற்றொரு மாகாண சபை உறுப்பினர் தோட்டங்களில் விளையாட்டை விருத்தி செய்ய உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றார். கோவில்களும் விளையாட்டுக்களும் தான் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று அவசியமானவைகளா? சம்பளம் உயர்வு உட்பட சகல அடிப்படைத் தேவைகளும் கிடைத்து விட்டனவா? வாக்களித்த மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

### • ஒரே உறையின் இரண்டு வாள்கள்

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பொலிஸ் - காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என ஏற்கனவே வலியுறுத்திக் கொண்டார். அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் முரளிதரன் (கருணா) பொலிஸ் அதிகாரம் மாகாணசபைக்குத் தேவையற்றதும் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்று கூறியுள்ளார். இவர்கள் இருவரும் முன்பு ஒரே உறையில் இருந்த இருபோர் வாள்கள். இப்போதும் ஒரே சின்னத்தின் பிரதிநிதிகள். ஆனால் வெவ்வேறாகப் பேசுவதுதான் வேடிக்கை. இப்படி இன்னும் எத்தனை பேச்சுக்கள் பேசுவார்களோ யார் அறிவார் பராபரமே.

### • சமாதானம் வேண்டவே வேண்டாம்

ஒரு கொஞ்சப் பேர் லட்சுமி சரஸ்வதி படங்களை ஒரு வாகனத்தில் வைத்து சமாதன யாத்திரை எனக் கூறி ஒலிபெருக்கிப் பிரசாரத்துடன் ஊர்வலம் வந்தனர். இதற்கு மக்களில் சிலர் ஆதரவு தெரிவித்து சிறு சிறு பண அன்பளிப்பும் வழங்கினர். இது மாத்தறை மாவட்டத்தில் இடம்பெற்றது. ஆனால் பொலிசார் அதனைத் தடுத்து நடத்தியவர்களைக் கைதும் செய்தனர். ஏனெனில் சமாதானம் பற்றி இப்போது பேசக் கூடாது என்பதோ தெரியாது. சில மக்கள் ஆயுதங்களுடன் கூடிய தெய்வப் படங்களை வைத்து யுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் வந்திருந்தால் பொலிசார் அனுமதித்திருப்பாரோ என்னவோ. ஏனெனில் இப்போது சமாதானம் மறக்கப்பட்ட சொல். யுத்தம் தினம் தினம் உச்சாடனம் செய்யப்படும் சொல்.

### • யாருக்காக அவை யாருக்காக?

விடுவிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அதே வேளை ஓமந்தைக்கு அப்பால் எவரும் வன்னிப் பகுதிகளில் இல்லை என்று வேறு செய்திகள் கூறுகின்றன. கைவிடப்பட்ட கால் நடைகளும் வன விலங்குகளுமே இருந்து வருகின்றன என்றே அச் செய்திகள் எடுத்தியம்புகின்றன. அப்படியாயின் அங்கு திறக்கப்படும் பொலிஸ் நிலையங்கள் யாருக்கானவையாக இருக்கக் கூடும்?

### • மலையகத்தின் அபிவிருத்தி

மலையகத்தின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி அமைச்சர்களாக்கி இருப்பது மலையகத்தில் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காவேயாகும். இவ்வாறு அமைச்சர் புத்திரசிகாமணி கூறி இருக்கிறார். எத்தகைய அபிவிருத்திகள் என்பதை மலையக மக்கள் தான் அவ் அமைச்சரிடம் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் மக்களுக்கு அபிவிருத்தி கிடைக்கதா அல்லது அமைச்சர்களுக்கு கிடைத்ததா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஜீ 20 மாநாடு நரகத்திற்கா சொர்க்கத்திற்கா?

ஜீ 20 நாடுகளின் மாநாடு ஏப்ரல் 2ம் திகதி லண்டனில் ஆரம்பமானது. 2008 நவம்பர் மாதம் வாஷிங்டனில் இடம் பெற்ற மகாநாட்டில் இணக்கம் காணப்பட்ட விடயங்களின் தொடர்ச்சியாகவே லண்டன் மகாநாடு இடம்பெற்றது. பெரும் எடுப்பில் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த போதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். பொலிசாருடன் இடம் பெற்ற மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயங்கள் அடைந்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். ஜீ 20 மகாநாட்டிற்கு சில தினங்கள் முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறுகையில் "உலகளாவிய ரீதியில் பொருளாதார சவால்களை முகம் கொடுக்கும் ஒரு சூழலில் உள்ளோம். இந்த சவால்களை அரைகுறை நடவடிக்கை மூலமோ அல்லது எந்த ஒரு நாட்டின் தனியான முயற்சியின் மூலமோ தீர்வு கண்டு விட முடியாது" என்றார்.

மேலும் "ஜீ 20 நாடுகளின் தலைவர்கள் தீர்க்கமான முழுமையான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் மீட்சிக்கான பாய்ச்சலின் ஆரம்பத்தை மட்டுமல்ல ஒரு புதிய பொருளாதார முன்னெடுப்பை மேற்கொண்டு இந்த மாதிரியான நெருக்கடிகள் மீண்டும் என்றுமே ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமெனவும்" நொந்து போன தொனியில் கூறியிருந்தார்.

"முதற் தடவையாக ஒரு சந்ததியினர் உலகப் பொருளாதாரம் சுருங்குவதையும் வர்த்தகம் வீழ்ச்சியடைவதையும் காண்கின்றனர். இதன் மூலம் அமெரிக்க பொருளாதாரத்தின் வெற்றி என்பது உலகப் பொருளாதாரத்துடன் விடுபட முடியாத அளவுக்குப் பிண்ணிப் பிணைந்துள்ளதை தெரிந்து கொள்ள முடிகிறது" என்றும் கூறினார்.

"மற்ற நாடுகளில் மக்கள் செலவழிக்காது விட்டால் சந்தைகள் வரண்டு போய் விடும். ஏற்கனவே அமெரிக்க ஏற்றுமதியானது கடந்த நாற்பது வருடங்களில் இல்லாத அளவு வீழ்ச்சி கண்டுள்ளது. இது அமெரிக்கர்களின் வேலையிழப்புக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகிலுள்ள நிதி நிறுவனங்கள் அசட்டுத் துணிவுடனும் பொறுப்பின்மையுடனும் செயற்படத் தொடர்ந்தும் அனுமதித்தால் நாம் குமிழ் - வீழ்ச்சி என்ற சுழற்சியில் சிக்கியிருப்போம். அதனாலேயே லண்டன் உச்சி மாநாடானது உள்நாட்டில் எமது மீட்சிக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளது" என்றார் ஒபாமா.

"எனது செய்தி மிகவும் தெளிவாக உள்ளது. அமெரிக்கா தலைமை தாங்குவதற்கு தயாராய் உள்ளது. அவசரமானதும் பொது நோக்கையும் கருத்திற் கொண்டு எம்முடன் இணையுமாறு எமது பங்காளிகளை வேண்டிக் கொள்கிறோம்" என்றும் கூறினார்.

அமெரிக்க ஏகாதிபத்திய ஜனாதிபதி மேலும் கருத்து தெரிவிக்கையில் "அசட்டுத்தனமான ஊகத்திற்கும் வருவாய்க்கும் அதிகமான செலவு பொறுப்பற்ற கடன் வழங்கும் முறை என்பனவற்றிற்கு முடிவு கட்ட வேண்டுமென்றார். அல்லாவிடில் குமிழ் தோற்றம் பெறுவதற்கும் அதைத்தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக நேரடுமெனவும் கூறுகிறார்.

எமது நிதி நிறுவனங்கள் அனைத்தும் வால் ஸ்ரீற்றில் உள்ளவையும் உலகில் ஏனைய இடங்களில் உள்ளவையும் கடுமையான மேற்பார்வையுடன் சட்டமைப்புக்குட்பட்டிருத்தல் வேண்டும்." "என ஒபாமா கூறுகிறார். அமெரிக்க இளம் கறுப்பின ஜனாதிபதியின் மேற்படி கூற்றுக்கள் நிதித்துறை வீழ்ச்சியையும் உலகமயமாதல் தோல்விகளையும் தாங்கிப் பிடிக்கும் ஒருவகைப் புதிய ஏமாற்று முயற்சிகளேயாகும். ஆளும் வர்க்கம் விளையாடும் தமது விளையாட்டில் தோல்வியுற்றால் சட்டத்தை மாற்றியமைக்கும் என ஒருவர் கூறியது ஞாபகம் வருகிறது. பிருத்தானியா முதலாவதாக கைத்தொழில் நாடானது தனது உற்பத்திப் பண்டங்களை ஏனைய நாடுகளில் தங்கு தடையில்லாமல் விற்பதற்காக சுதந்திர வர்த்தகம் வேண்டுமென பரப்புரை செய்தது. காலப் போக்கில் ஏனைய நாடுகளும் உற்பத்தி செய்து பிரித்தானியாவுக்கு பண்டங்களை அனுப்பியபோது பிருத்தானியா தனது உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதி தீர்வைகள் விதித்தது. தற்போது அமெரிக்கா, யப்பான் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தமது பண்ணை உற்பத்தியை ஊக்குவிக்க மான்யம் வழங்கப்படுகிறது. அதே சமயம் நமது நாட்டில விசாயிகளுக்கு மான்யம் வழங்குவதற்கும் மக்களுக்கு ஏனைய மான்யங்கள் வழங்குவதற்கும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் கட்டுப்பாடுகள் விதிக்கின்றன. இது தான் ஏகாதிபத்தியத்தின் முதலாளித்துவ சக்திகளின் கபடத்தனமாகும். தனக்கொரு நியாயம் பிறருக்கு வேறோரு நியாயம் என்பது லாபத்தை பெருக்கிக் கொள்ளவேயாகும்.

எதுவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் செயற்பட்டு வந்த உலக நிதி நிறுவனங்களை இப்போது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் முயற்சியாகவே ஜீ 20 நாடுகள் லண்டனில் கூடின. ஜீ 20 நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகள் தன்னைப் பாதிக்கக் கூடாதென செயற்படும் அமெரிக்கா தனது கருத்தை வெளியிட்டுள்ளது. அதனால் அமெரிக்காவுக்கும் ஜீ 20 நாடுகளுக்குமிடையே முரண்பாடுகள் வெளிப்படையாகவே வெளிவந்தன.

அதே சமயம் ஜீ.20 அமைப்பில் உள்ள நாடுகளின் செல்வந்த நாடுகளான ஜேர்மனி பிரான்ஸ் போன்றவற்றிற்கும் புதிதாக ஐரோப்பிய சமூகத்தில் இணைந்து கொண்ட நாடுகளுக்குமிடையே முரண்பாடுகள் நிலவுகின்றன. சுழற்சி முறையில் தற்போது ஐரோப்பிய சமூகத்தின் தலைமைப் பதவியை செக்கோஷலவேக்கியா நாடு வகிக்கின்றது. செக் நாட்டின் ஜனாதிபதி மிரேக் ரொப்பெல்நெக் " ஜனாதிபதி ஒபாமாவின் புத்துணர்ச்சியூட்டும் நிதிப்பொதியானது நரகத்திற்கான பாதையென" வர்ணித்துள்ளார்.

பலவீனமான பொருளாதாரங்களைக் கொண்ட ஐரோப்பிய சமூகத்தின் புதிய அங்கத்துவ நாடுகள் பெருமெடுப்பில் புத்துணர்ச்சியூட்டும் மூலதனமிடுவதை விரும்பவில்லை. ஒபாமாவின் பொதிகளானது உலக நிதிச் சந்தையில் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்துமென செக் நாட்டின் ஜனாதிபதி கருதுகிறார். பெருமளவிலான முதலீடுகளால் பண வீக்கம் ஏற்படுமென் ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன. தன்னிச்சையாக எதுவித கட்டுப்பாடும் இன்றிச் செயற்டபட்டுவந்த உலக நிதி நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு ஜி 20 நிதி அமைச்சர்களும் மத்திய வங்கி ஆளுநர்களும் ஏற்கனவே ஒரு உடன்பாட்டிற்கு வந்த நிலையில் லண்டன் உச்சி மகாநாடு இடம் பெற்றது.

இரண்டு லட்சம் கோடி டொலர்களை அந்நியச் செலாவணியாக கொண்டுள்ள சீனா உலக நிதி நெருக்கடியை கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வர எந்த வகையில் பங்களிப்பு வழங்கவுள்ளதென்பதை அறிய பொருளியலாளர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். ஏப்ரல் 2ம் திகதி மகாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களின் பதாகைகளில் ஒன்று நிதித்துறை முட்டாள்கள் தினம் எனத் தெரிவித்தது. ஜீ 20 உச்சி மாநாடு ஓர் இறுதித் தீர்மானத்துக்கு வந்துள்ளது. 2010ற்குள் சர்வதேச நாணய நிதியத்திற்கும் ஏனைய உலக நிதி நிறுவனங்களுக்கும் ஒரு லட்சத்து பத்தாயிரம் (110,000)கோடி டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. (1.1 ரில்லியன்) இதில் 75000 கோடி டொலர்கள் சர்வதேச நாணயநிதியத்திற்கும் உலக வர்த்தக ஊக்குவிப்புக்கென 25000 கோடி டொலர்களும் வறிய நாடுகளுக்கு நிதி வழங்கும் வகையில் சர்வதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு 10000கோடி டொலர்களும் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் பெரிய அளவிலான மீட்பு நிதி வழங்க வேண்டுமெனக் கோரின. நிதித்துறையை சட்டவறையறைக்குள் கொணடு வர வேண்டுமென பிரான்சும்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# ஆள் அமைப்பு ஆளுமை 3

## ஆளுமை விருத்தி தனி மனித சாதனை மட்டுமல்ல கூட்டு முயற்சியின் வெளிப்பாடுமாகும்

சி.சிவசேகரம்

பாடசாலைக் கல்வி முடியும் வரை இளையோர் எவருக்கும் தம்மை பாடசாலைகட்கு வெளியேயுள்ள சமூக அமைப்புகளில் ஈடுபடுத்திக் கொள்கிற வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. பாடசாலைகளின் ஊக்குவிப்புடன் சாரணர் இயக்கம் போன்ற சமூகப் பணி சார்ந்த அமைப்புகளில் ஒரு சிறு பகுதியினர் ஈடுப டுகின்றனர். சில சமூகச் சூழல்களில் முற்றிலும் ஒரு பாடசாலைக்கு உட்படாத கலை இலக்கியம் சமயக் கல்வி என்பன சார்ந்த அமைப்புகளிலும் சில சமயம் விளையாட்டுக் கழகங்களிலும் மாணவர்களிற் சிலர் பெரும்பாலும் பெற்றோராலும் ஆசிரியர்களதும் ஊக்குவிப்புடன், ஈபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நகரச் சூழல்களிலும் கிராமச் சூழல்களிலும் வேறுபடுகின்றன. எனினும் சமூக நலச் சார்ந்த அக்கறைகளை வளர்ப்பதில் இவ்வாறான ஈடுபாடுகள் குறி ப்பிடத்தக்க பங்களிக்கின்றன. நல்ல ஒரு பாடசாலையின் வறைய றைகட்குள் இயலுமான ஆளுமை விருத்தியை விடப் பெரியளவு ஆளுமை விருத்தி இவற்றாற் கிட்டுவதில்லை. எனினும் பாடசாலை கட்குட் கிட்டாத சில வாய்ப்புக்களும் பொறுப்புக்களும் ஒரு சில ருக்கேனும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் கிடைக்கப் பெறு கின்றன.

ஒரு பாடசாலையின் இலக்கியக் கழகமாயினும் விளையாட்டுக் கழகமாயினும் விவாத அணியாயினும் விளையாட்டு அணியாயினும் அதில் கூட்டுச் செயற்பாடு முக்கியமானது. அவ்வாறே, பாடசாலைகட்கு வெளியிலான செயற்பாடுகள் அவை ஏலவே சமூகத்தில் உள்ள நிறுவனங்களாயினும் தன்னார்வத்தின் அடிப்படையில் மாணவர்கள் அல்லது இளைஞர்கள் உருவாக்கக்கூடிய நூலகங்கள் பொழுது போக்குக் கழகங்கள் போன்ற எவையாயினும் கூட்டுச் செயற்பாட்டை வேண்டி நிற்கின்றன. இவ்விடத்துத் தனிமனித ஆளுமைக்கும் கூட்டு அடையாளத்திற்குமிடையிலான நட்பும் பகைமையும் கலந்த முரண்பாடுகள் தம்மைப் புலப்படுத்துகின்றன.

மேற்கூறியவாறான அமைப்புக்களில் இணைவோர் தமது ஆற்றல்களை மேம்படுத்துகிற நோக்கிலேயே அவற்றில் இணைகின்றனர். அது தவறானதல்ல. ஆனால் அவ்வாறான அமைப்புக்களில் ஒவ்வொருவரும் தனிப்படத் தன்னை மட்டுமே மேம்படுத்திக் கொள்ள முற்படும் போது அவர்களால் மற்றவர்கட்குப் பயனின்றிப் போகிறது. அவ்வாறே எல்கலாரும் தத்தமது சுய முன்னேற்றத்தில் குறியாக இருப் பார்களேயானால் அந்த அமைப்புக்கள் காலப் போக்கிற் சீரழிந்து சிதைந்து விட நேரிடும்.

விளையாட்டுக்களிற் பங்கு பற்றுவதால் ஆளுமை விருத்தியடையும் என்ற கருத்துப் பரவலாகவே கூறப்பட்டு வந்துள்ளது. அதன் மூலம் வெற்றி தோல்விகளைச் சமமாக நோக்கவும் ஒரு அணியாக ஒத்துழைக்கவுமான மனப்பக்குவம் ஏற்படுகிறது. தளராமையும் விடாமுயற்சியும் விருத்தியடைகின்றன. இவையாவுமே எதிர்பார்ப்புக்களே ஒழிய நிச்சயமான விளைபயனல்ல என்பதை நாம் அவதானிக்க முடியும்.

விளையாட்டு வீரர்களிடையே காணப்படுகிற போட்டி பொறாமைகள் கடந்த சில தசாப்தங்களில் மேலும் மோசமாகி உள்ளன. விளையாட்டுக்கள் வணிகமயமானதன் பின்பு விளையாட்டுக்கள் விளையாட்டுக்களாக அல்லாது குழுக்களிடையிலும் தனிமனிதரிடையிலுமான மோதல்கள் போல மாறியுள்ளன. கனவான்களின் விளையாட்டு எனப்பட்ட கிரிக்கட் இன்று கனவான்கட்கு சில நடத்தைக்கே இடமற்றதாகிவிட்டது. விளையாட்டு வீரர்கள் விளையாட்டு களத்திற்கு செய்கிற ஆரவாரங்களும் வெளிப்படுத்துகிற தீவிர உணர்வுகளும் ஒரு புறம் நாடகத்தன்மையுடனும் இன்னொரு புறம வெறித்தனமாகவும் வெளிப்படக் காணுகிறோம். இது ஆட்டங்கள் வணிகமயமாக்கப்பட்டுத் தொலைகாட்சி என்கிற ஊடகத்தில் பார்வையாளர்களுக்குக் களிப்பூட்டுகிற ஒரு நிகழ்ச்சியானதன் விளைவு. விளையாட்டு வீரர்களின் நடத்தை திட்டமிட்டே இவ்வாறு வழிநடத்தப்படுகிறது.

1970 களில் சீனாவின் பட்மின்ற்றன் (பூப்பந்தாட்டம்) டேபிள் டெனிஸ் (மேசைப் பந்தாட்டம்) விளையாட்டு அணிகள் உலகில் முன்வரிசையில் இருந்தன. சீன விளையாட்டு அணியினர் சீனாவின் நல்லெண்ணத் தூதுவர்களாக உலகப் பயணம் மேற் கொண்டபோது அன்றைய சீனப் பிரதமர் அவர்களிடம் வற்புறுத்திக் கூறிய கருத்து "முதலில் நட்பு அதன்பிறகு போட்டி " என்பதாகும். விளையாட்டை இவ்வாறு அணுகிய சீன அணியினர் தமது ஆட் நுட்பங்களை எதிரணி வீரர்களுடன் பகிர ஆயத்தமாகவே இருந்தனர். இந்த அணுகுமுறை, சீனாவின் கழைக்கூத்துக் குழுவினராகட்டும் இசை நடனக் குழுவினராகட்டும் எல்லாரிடமுங் காணப்பட்டது. அதன் விளைவாக குழுவினர் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாகவும் பிற குழுவினருடன் நட்புறவாகவும் எல்லாரும் நன்மையடைகிற விதமாக நடந்து கொண்டனர்.

விளையாட்டுக்கான அமைப்புக்கள் தமது நோக்கம் பற்றிய தெளிவுடன் இருந்தால் அமைப்பின் செயற்பாடுகள் அந்த நோக்கத்திற்கமைய நடைபெறும். எனவே தான், இன்றைய முதலாளியச் சூழல் கடும் போட்டிமிக்கதாக அனைத்தையும் மாற்றியுள்ள ஒரு நிலைமையின் கீழ் விளையாட்டுக்களோ கலைநிகழ்ச்சிகளோ தனி மனிதவாதத்தையும் பகைமையான போட்டி மனப்பான்மையையும் இயல்பானவையாக்கின்றன. தனிமனித ஆளுமையின் விருத்தி என்பது சமூகப்பயனற்றதாகவும் சில வேளைகளில் சமூகத்தில் உள்ள பிறரை நட்டப்படுத்திக் தம்மை உயர்த்துகிற ஒரு நடவடிக்கையாகவும் மாறி விடுகிறது.

அணிகள் ஆடும் விளையாட்டுக்களும், கலை நிகழ்ச்சிகளும் (அதி சிறப்பாக நாடகங்களும்) மிகுந்த அளவில் ஒத்துழைப்பை வேண்டி நிற்பன. இளையோரிடையே உள்ள போட்டி மனப்பான்மைக்கு ஒரு ஆரோக்கியமான நெறிப்படுத்தல் கிட்டும். அத்துடன் பிறருக்குப் பயன்படுவதன் மூலம் தாமும் பயன்பெற அவர்கள் பயிலுருகின்றனர். அண்மைக்கால அனுபவங்கள் இரண்டைக் கூறலாம் என நினைக்கிறேன். ஒரு கலை இலக்கிய அமைப்பின் ஆதரவில் ஒரு நாடகம் மேடையேற்றப்பட்டது. அதில் எல்லாருமே தத்தமது பாகங்களைச் சிறப்பாகவே செய்திருந்தனர். எனினும் நாடக முடிவில் அதிற் பிரதான பாத்திரமொன்றில் நடித்த ஒரு இளைஞர் முன்வரிசையில் அமர்ந்திருந்த பார்வையாளர் சிலரைத் தனித்தனியே அனுகி யார் சிறப்பாக நடித்தார் என்ற கேள்வியைக் கேட்டார். அவர் எதிர்பார்த்த பதில் என்னவென்று எனக்குத் தெரியும். என்னிடங் கேட்டபோது எல்லாருமே சிறப்பாக நடித்தனர் என்றேன். திரும்பத் திரும்ப என்னிடம் யார் எல்லாரிலும் சிறப்பாக நடித்தார் என்ற கேள்வியைக் கேட்டார். உண்மையில் அவரது நடிப்புச் சற்று மிகையானது என்பதே என் கருத்து. எனினும் ஒரு கூட்டு முயற்சியில் இவ்வாறான தரப் பிரிப்பு நல்லதல்ல என்று நினைத்ததால் தனிப்படயாரையுங் கூற முடியாது என்றேன். அவருடய ஆதரவுக்கு ஏங்கும் சிறு குழந்தையின் மனப்பாங்கு போலிருந்தது. ஒரு குழுவினருடன் செயற்பட்டு அதனால் நன்மை கண்ட போதும் அனைத்தையும் தனது சாதனையாகக் காணுகிற ஏக்கம் அவருடையது. இன்னொரு நிகழ்ச்சிக்காக ஒரு பாட்டும் மெட்டும் சொந்தமாகவே அமைத்திருந்தனர். ஒரு இளங் குழுவினர் பாட்டு நன்றாக அமைந்திருந்தது. யாருடைய ஆக்கம் என்று கேட்டேன். இது எல்லாருடையதுமான கூட்டு முயற்சி என்று பெருமையுடன் பதில் கூறினர். அங்கே பங்களிப்புக்களைப் பிரித்துப் பார்க்காமல் இணைத்துப் பார்க்கிற ஒரு மன முதிர்ச்சி தெரிந்தது. அவர்கள் பிற்காலத்திலும் பிற அமைப்புக்களிலும் அவ்வாறே நடந்து கொள்வார்களா என்று என்னால் கூற இயலாது. எனினும் கூட்டு முயற்சிக்கு அவசியமான ஒரு அடிப்படையான மனப்பக்குவத்தை அவர்கள் சார்ந்திருந்த அமைப்பு அவர்கட்கு வழங்கியுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியது.

அமைப்புக்களில் சுயவிருப்பின்பேரில் இணைவோரது ஆளுமையின் விருத்தி தனிமனிதச் சாதனை மட்டுமல்ல என்பதைப் பல இடங்களில் மறந்து விடுகிறோம். நமது விருத்திக்கு மற்றவர்கள் தனிமனித முறையிலுங் கூட்டாகவும் வழங்குகிற பங்கை நாம் மறக்கும்போது நமது ஆளுமை அகங்காரம், சுய விளம்பரம், ஆடம்பரம், புகழாசை போன்ற பலவீனங்கட்கு சிதைவடைகிறது சமூகத்தில் சமூக அமைப்பும் சமூக விருத்தியும் சார்ந்த பல்வேறு அமைப்புக்கள் உள்ளன. அவற்றின் சிலவற்றில் இணைந்து செயற்படுகிறபோது தனிமனித ஆளுமை எவ்வாறு விருத்தி பெறக் கூடமென இனி வரும் கட்டுரைப் பகுதிகளிற் கவனிப்போம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




# இந்தியாவின் 15வது பாராளுமன்ற தேர்தல் திருவிழா


நரசிம்மா

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட முன்பே பேரப் பேச்சுக்கள் தொடங்கிவிட்டன. யார் யாருடன் கூட்டணி அமைப்பது என்பது பாராளுமன்ற ஆசனக் கணக்குகளாலும் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய வாய்ப்பு எந்தக் கட்சியின் தலைமையிலானதாக இருக்கும் என்ற அடிப்படையிலேயே கூட்டணிகள் அமைகின்றன. முக்கியமான அகில இந்தியக் கட்சிகளாக உள்ளவை காங்கிரசும் பாரதிய ஜனநாயக கட்சியுமே. அடுத்த நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் இருந்தாலும் அவற்றின் ஆதரவுத் தளங்கள் மூன்று மாநிலங்களில் மிக வலுவானதாகவும் பிறவற்றில் வேறுபடும் அளவுகளிலும் உள்ளன. காங்கிரஸ் பேரளவில் மதச்சார்பற்ற கட்சி என்றாலும் அது இந்து மத வெறியர்கட்கு எதிராக உறுதியாகச் செயற்பட்டதில்லை என்பதோடு மதச் சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சங்களை நீக்க எதையுமே நடைமுறையில் செய்ததாகக் கூற இயலாது. வெகுசன எதிர்ப்பும் போராட்டங்களுமே அரசாங்கங்களை நீதிக்கான நடவடிக்கைகளை நோக்கித் தள்ளியுள்ளன: பாரதிய ஜனநாயக கட்சி ஆர்.எ்ஸ்.எஸ். எனும் இந்து மத வெற்றி அமைப்பின் முகமுடி என்பதில் நமக்கு என்றுமே ஐயம் இருந்ததில்லை. அதை விட வேறு பிரதேசவாத இந்து மத வெறி அமைப்புக்களும், முக்கியமாக மகாராஷ்டிரத்தில் உள்ள சிவசேனா இருந்து வருகின்றன. 1980 களில் பாரதிய ஜனதாவின் எழுச்சிக்குக் காங்கிரஸ் தலைமையின் பல்வேறு குறைபாடுகளும் உதவின. அதை விட காங்கிரஸுக்கு மாற்றாக ஒரு வலதுசாரி அணி 1977ல் வெற்றி பெற்று அதிகாரப் போட்டிகளாற் கவிழ்க்கப்பட்ட பிறகு தான் மத வெறுப்பை வெளி வெளியாக முன்வைத்து நாடளாவிய முறையில் அரசியல் நடத்துகிற வாய்ப்பு வலுப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் உருவான மதச்சார்பற்ற ஜனதா தளத்தினுள் காங்கிரஸ் உதவியுடன் உருவாக்கப்பட்ட அதிகாரப் போட்டி அந்த மூன்றாவது அணியின் சிறுபான்மை அரசாங்கத்தை கவிழ்த்தது. 1990 - 91 கால இடைவெளிக்குப் பிறகு முற்போக்கான மதச்சார்பற்ற கூட்டணி ஒன்று அதிகாரத்திற்கு வரும் வாய்ப்பு இல்லாமலாகி விட்டது.

எவ்வாறாயினும் 1992ல் ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்துக் காங்கிரஸ் பெற்ற வெற்றிக்குப் பின்பு எக்காலத்திலும் காங்கிரஸ் கட்சியால் தேர்தல்களில் தனித்து நின்று போட்டியிட்டு வெல்லவோ தனியே காங்கிரஸை மட்டுமே கொண்ட ஒரு ஆட்சியை அமைக்கவோ இயலாமற்போயிற்று. இந்த நிலை படிப்படியாகப் பல மாநிலங்கட்கும் பரவலாயிற்று. 1960 களில் பின்பு பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரஸ் பிளவுபட்டு அகில இந்தியக் கட்சியை விட பாரிய மட்டத்தில் இயங்குகிற கட்சியே சில மாநிலங்களில் வலுவானதாகியுள்ளது. சில இடங்களில் காங்கிரஸ் பூரணமாகவே வலுவிழந்தும் பிரதேச வாதக் கட்சிகளுடனோ வேறு கட்சி எதனுடனோ தேர்தல் உடன்பாடு இல்லாமல் ஒரு தொகுதியிற் கூட வெல்ல இயலாத நிலையில் உள்ளது. இந்த நிலையில் உள்ள காங்கிரஸ் தலைமை யதார்த்தமான நிலைமைகளை விளங்கிக் கொண்டு மாநிலங்களின் அரசியல் தேவைகளை அனுசரித்து போகக் கூடிய ஒரு அகில இந்திய வேலைத்திட்டத்தை உருவாக்க இயலாமலும் தடுமாறுகிறது. அதை விட நேரு பரம்பரை பற்றிய மயக்கமும் அக்குடும்பத்திற்குள்ள "காந்தி "என்கிற குடும்பப்பேரும் காங்கிரஸின் முக்கிய அரசியல் மூலதனமாக உள்ளன. பிற கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிர்வத ற்கு காங்கிரஸ் ஆயத்தமாக இருந்ததில்லை. எனவே அதன் கூட் டரசாங்கங்கள் காங்கிரஸ் மேலாதிக்கத்தைத் தொடருகிற நோக்கைக் கொண்டனவாகவே இருந்து வந்துள்ளன. காங்கிரஸ் தலைமையி லான கூட்டணிகள் கொள்கை அடிப்படையிலானவையல்ல. அவை யாவுமே பதவிகள் சலுகைகள் மாநிலத்திலும் மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்வது என்பன பற்றியன மட்டுமே. குடும்ப அர சியல் ஊழல் மூலம் சொத்துச் சேர்த்தல் பாதாள உலகக் கோஷ் டிகளின் ஆதிக்கம் என்பன பற்றி இங்கு விரிவுப்படுத்தத் தேவையி ல்லை. டில்லிப் பாராளுமன்ற அரசியலைப் பொறுத்தவரை பாரதிய ஜனநாக கட்சியின் கூட்டணிகட்கும் காங்கிரஸ் கூட்டணிகட்கும் ஒரு வேறுபாடும் இல்லை. மூன்றாவது அணி ஒன்றன் மூலம் சற்று வித்தியாசமான ஏகாதிபத்திய விரோத சீர்திருத்தவாத அரசியற் சக்தி ஒன்று உருவாக்கக் கூடிய வாய்ப்பு 1990 களிலுமே அடிபட்டு போய்விட்டது.







இப்போது மாநிலங்களிலும் பலவாறான அரசியற் பேரங்கள் மூலமே ஆட்சியில் நிலைக்கலாம் என்கிற சூழ்நிலை பெருவாரியான மாநிலங்களில் ஏற்பட்டுள்ளது. சாதியத்திற்கு எதிரான விடுதலை அரசியலாக வேடங் காட்டிய தலித்திய அரசியல் இன்று சாதிக் கட்சிகளின் அரசியலாகச் சீரழிந்துள்ளது. ஒடுக்கப்பட்ட சாதியினரின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு உத்தரப் பிரதேச மாநில முதல்வராகியுள்ள மாயாவதியால் பாரதிய ஜனநாயக கட்சியுடன் கூட்டணி அமைக்க முடிகிறதென்றால் தலித்தியம் எங்கே போய்விட்டது என அறியலாம். சாதி ஒடுக்குமுறை உள்ளளவும் ஒடுக்கப்பட்ட சாதியினர் ஒன்றுபட்டு போராடும் தேவை உண்டு. பிற ஒடுக்கு முறைகட்கு எதிரான போராட்டங்களுடன் அப்போராட்டங்களை இணைத்து ஒன்றையொன்று வலுப்படுத்தவும் இயலும். மாறாக அதைத் தேர்தல் அரசியலுக்கும் என்.ஜி.ஓக்கள் மூல்மான சம்பாத்தியத்திற்கும் பயன்படுத்துகிறபோது அது சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்துவதற்கே உதவும் என்பதைத் தமிழகத்தின் தலித்திய அரசியல் தெளிவுப டுத்தியுள்ளது. தமிழகத்தின் பார்ப்பனிய ஆதிக்கத்தை முறியடிப்ப தில் திராவிட இயக்கம் முக்கிய பங்காற்றியது. ஆனால் அது வர் க்க அரசியலையோ சாதிய அரசியலையோ மனித சமத்துவ நோக்கிற் கையாளத் தவறியதற்கான காரணங்களால் தி.மு.க. தன்னை ஒரு தேர்தல் அரசியற் கட்சியாக விருத்தி செய்தமை முக்கியமான ஒன்று. திராவிட ஒற்றுமை பற்றிப் பேசிய தலைவர்க ளால் தமிழ் மக்களையே ஒன்றுபடுத்த இயலாது போயுள்ளது. குடும்ப அரசியல், ஊழல், சாதிக் கட்சிகள் என்பன இன்று தமிழக அரசியலைப் பிடித்துள்ள பெரு நோய்கள். தமிழகத்தின் இடதுசாரி களை விட்டால் மற்றக் கட்சிகட்கு எந்த விதமான உறுதியான அரசியல் நிலைப்பாடுமே இல்லை எனலாம். என்றாலும் சட்டசபை ஆசனங்கட்காக இரண்டு பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் கொள்கை அடிப்படையற்ற தேர்தல் கூட்டணிகளில் பங்குபற்றித் தமது நம்பகத் தன்மையைச் சீரழித்துள்ளன.

தமிழகத்தில் ஆட்சியிலுள்ள தி.மு.க. இன்று ஒரு குடும்பத்தின் ஆதிக்கத்தில் உள்ள மிக மோசமான ஒரு அரசியற் கட்சி. தமிழகத்தில் காங்கிரஸ் மிகவும் பலவீனமாக இருந்தாலும் சில தொகுதிகளில் அதற்குக் கணிசமான செல்வாக்கு உண்டு. எனினும்



தி.மு.க.வோ, அ.தி.மு.க வோ அதனுடன் கூட்டணி அமைக்க முயலுவது அதற்காக அல்ல. மத்தியில் ஆட்சியில் உள்ளவர்களுடனான உறவின் அனுகூலங்களை விட வேறு எந்தக் கணிப்பும் இவர்களிடமில்லை. தி.மு.க. தலைமையின் திமிர்த்தனமும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியின் சீரகேடுகளும் தி.மு.க. மீதான பொதுசன வெறுப்பைக் கூட்டியிருந்தாலும் அதற்கெதிரான ஒரு மாற்றுச் சக்தியாக எதுவும் இல்லை. எனவே தி.மு.க. அணியா அ.இ.அ.தி.மு.க. அணியா என்கிற அடிப்படையிலேயே போட்டி உள்ளது. இலங்கையின் இன ஒழிப்புப்போர் இரண்டு கட்சித் தலைமைகளும் எதிர்பாராத அளவு முக்கியத்துவம் பெற்றுள்ளதன் விளைவாகக் கூட்டணிக் கணக்குகள் மாறி உள்ளன. காங்கிரஸ் தி.மு.க உறவு வலுவாக இருப்பது இப்போதைக்குத் தி.மு.க வுக்குப் பாதகமான விடயமகவே உள்ளது. ஏனெனில் இலங்கை விடயத்தில் மட்டுமன்றி அகில இந்திய அளவிலும் காங்கிரஸ் பலவீனப்பட்டுள்ளது. வடக்கில் காங்கிரஸின் தோழமைக் கட்சிகளாக இருந்தவையும் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளன. இதற்குத் தொகுதி ஒதுக்கீடு பற்றிய முரண்பாடுகளே காரணம் எனக் கூறப்பட்டாலும் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்வது தமது இருப்புக்கே கேடாகலாம் என்ற அச்சமும் ஒரு காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் பா.ஜ.க வலுவான ஒரு அணியை அமைக்க இயலாமல் உள்ளது. மூன்றாவது அணி முற்றிலும் மாநிலக் கட்சிகளின் தனிப்பட்ட வலிமை மீதே தங்கியுள்ளது. தேர்தலின் முடிவில் எந்த அணிக்கும் அறுதிப் பெரும்பான்மை வராது என்பதே பரவலான எதிர்பார்ப்பாகும். மூன்றாவது அணி முதலிடத்திற்கு வந்தாலும் அது நிலையான ஆட்சியை அமைக்கக் காங்கிரஸ் கூட்டணி அனுமதிக்கப் போவதில்லை. பா.ஜ.க வும் அதற்கு உதவப் போவதில்லை. மாறாக மூன்றாவது அணியில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் யாருடன் சேர்ந்தால் தாம் ஆட்சி அதிகாரத்தின் பங்காளிகளாகலாம். என்று கணித்துத் தமது காய்நகர்த்தலைச் செய்வார்கள். கம்யூனிஸ்ற்டுக்களை விட யாருடனும் கூட்டுச் சேர்வதில் தயக்கங்கள் எதுவும் இல்லை. எனவே காங்கிரஸ் பற்றிய அதிருப்தியையோ பா.ஜ.க பற்றிய நம்பிக்கையீனமோ பாராளுமன்ற அரசியலில் ஒரு பெரிய மாற்றத்தையுங் கொண்டுவரப் போவதில்லை. இந்தியாவில் உறுதியற்ற ஒரு அரசாங்கமே ஆட்சியை நடத்தும் வாய்ப்பு மிகுதி. இதன் மூலம் பா.ஜ.க. அணியும் காங்கிரஸ் அணியும் மாறி மாறி ஆட்சி நடத்துகிற வாய்ப்பு மேலும் வலுப்படுத்தப்படும். இந்தியாவில் ஏகாதிபத்திய விரோத ஜனநாயக அணி ஒன்றுக்கான தேவை உள்ளது. அதில் இந்தியாவில் சகல ஒடுக்கப்பட்ட சமூகங்கட்குமான இடமொன்றும் உள்ளது. ஆனால் அத்தகைய அணி பாராளுமன்றத் தேர்தலுக்கும் சட்டமன்றத் தேர்தலுக்குமான அணியாக உள்ளளவும் அதனால் இந்திய மக்களுக்கு ஒரு நல்ல மாற்றுவழியைக் காட்ட இயலாது.

இந்தியாவின் பராளுமன்ற ஜனநாயகத் தேர்தல் என்பது நூற்றுப்பத்துக் கோடிக்கு மேற்பட்ட இந்திய மக்களில் ஏகப்பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களை ஏமாற்றும் ஒரு மோசடி மிக்கத் திருவிழாவே யாகும். பெருமுதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் தமது சொத்து சுகங்களைப் பேணவும் உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கவுமான ஆட்சிக்கே இப் பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்ப டுகிறது என்பதே சாராம்ச உண்மையாகும்.

## இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களில் அதிக ஊதியம் பெறும் முதல் பத்து தலைமை நிர்வாக அதிகாரிகளின் ஒரு வருட ஊதியம்

| வ.எண் | தலைமை நிர்வாக அதிகாரி | நிறுவனம் | ஊதியம் |
|---|---|---|---|
| 1 | முகேஷ் அம்பானி | ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் | ரூ.44.02 கோடி |
| 2 | கலாநிதி மாறன் | சன் டிவி நெட்வொர்க் | ரூ.32.41 கோடி |
| 3 | பி. ஆர்.ராமசுப்ரமணியராஜா | மெட்ராஸ் சிமெண்ட்ஸ் | ரூ.32.40 கோடி |
| 4 | அனில் அம்பானி | ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் | ரூ.30.03 கோடி |
| 5 | மல்வீந்தர் மோகன்சிங் | ரான்பாக்சி லேபரட்டரீஸ் | ரூ.19.58 கோடி |
| 6 | சுனில் பார்தி மிட்டல் | பார்தி ஏர்டெல் லிமிடெட் | ரூ.19.55 கோடி |
| 7 | நவீன ஜன்டால் | ஜின்டல் ஸ்டீஸ் அண்டு பவர் | ரூ.16.93 கோடி |
| 8 | விவேக் குமார் ஜெயின் | குஜராத் ஃபுளுரோகெமிக்கல்ஸ் | ரூ.16.87 கோடி |
| 9 | சஜ்ஜன் ஜின்டல் | ஜே.எஸ்.டபிள்யு ஸ்டீல்ஸ் | ரூ.16.73 கோடி |
| 10 | பவன்காந்த முஞ்சல் | ஹீரோ ஹோண்டா மோட்டார்ஸ் | ரூ.15.73 கோடி |

நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இவர்கள் ஊதியத்தை குறைக்கச் சொல்லவில்லை. இவர்கள் ஊதியத்தை இன்னும் உயர்த்த அல்லது அப்படியே பாதுகாக்கத்தான் இந்திய உழைக்கும் மக்களுக்கு சம்பளக் குறைப்பு செய்யச் சொல்கிறார். நன்றி : மாலெ தீப்பொறி மார்ச் 2009

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## உடையும் புனிதங்களும் உறைக்க வேண்டிய உண்மைகளும்

இன்றைய சூழலில் நாம் பல விடயங்கள் தொடர்பில் மிகவும் பிழையான கருத்து நிலை களை கொண்டு இருக்கிறோம். சமூகப் பொறுப்புடன் எழுதுவோர் மிகவும் குறைத்து விட்ட சூழலில் உளமார பொய்யுரைப்போர் போலியான நம்பிக்கைகளை உருவாக்கி வருகிறார்கள். அது உள்நாட்டு அரசியலில் மட்டுமல்ல சர்வதேச அரசியல் பற்றியும் பல மாயைகளும் போலியான நம்பிக்கைகளும் கட்டமைக்கப்படுகின்றன. ஈழத் தமிழருக்கு ஐரோப்பாவோ, அமெரிக்காவோ, ஐ.நா. சபையோ, இந்தியாவோ கைகொடுக்காது என்பது எத்தனையோ தரம் படித்துப்படித்துச் சொல்லப்பட்ட போதும், கிளிப்பிள்ளைகள் போல உலக நாடுகள், தொப்புள் கொடி உறவு என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். பிறகு புலம் பெயர்ந்த தமிழரே தஞ்சம் என்றார்கள். இப்போது தமிழகத்தின் இரத்த உறவுகள் கைகொடுக்கும் என்கிறார்கள். உண்மை இன்னமும் உறைப்பதாய் இல்லை. பொய்கள் எமது மனதுக்கு மகிழ்வை தருவதாக இருக்கலாம் ஆனால் அவற்றால் விளையும் பயன் எதுவும் இல்லை.

## இரந்து நிற்போருக்கு

பாகிஸ்தானிலுள்ள போராளிகளின் முகாம்கள் மீதான தாக்குதலை அமெரிக்கா கைவிடாதென அமெரிக்க இராணுவத் தளபதி அட்மிரல் மைக் முல்லன் தெரிவித்துள்ளார். அமெரிக்கா ஆப்கானிஸ்தான் எல்லையருகே பாகிஸ்தானின் பழங்குடியின பகுதியில் அமெரிக்கா ஆளில்லாத போர் விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதலை நடத்திவருகிறது. இந்த தாக்குதலை அமெரிக்கா கைவிட வேண்டும் என்றும், இந்த தாக்குதல்களில் பல அப்பா விகள் பலியாகிவருவதால் பாகிஸ்தான் மக்கள் கோபம் கொண்டு உள்ளனர் என்றும் பாகிஸ்தான் அரசு வலியுறுத்தி வருகிறது. இதை அமெரிக்கா ஏற்கவில்லை. இதுபற்றி அமெரிக்க முப்படைகளின் கூட்டுத்தளபதி அட்மிரல் மைக் முல்லன் செய்திச் சேவை யொன்றுக்கு அளித்த பேட்டியில், 'பாகிஸ்தான் மீதான ஏவுகணை தாக்குதலை அமெரிக்கா ஒருபோதும் கைவிடாது என்றும் தொடர்ந்து தாக்குதல் நடத்தும்;" என்றும் தெரிவித்தார். மேலும், ஒபாமா நிர்வாகம் பாகிஸ்தான் தலைமையிடம் இதனை தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இங்கு இரண்டு விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும். ஒன்று அமெரிக்கா உலகில் உள்ள எந்தவொரு நாட்டுக்கும் மனித உரிமைகள் குறித்து அறி வுரை வழங்க தகுதி அற்றது. இதை குறிப்பாக அமெரிக்காவை இரந்து அழைப்பவர்களுக்கு விளங்க வேண்டும். இரண்டாவது ஒபாமா என்ற புனிதம் உடையத் தொடங்கிவிட்டது, இது புதிதல்ல. ஏற்றகனவே சொன்னதுதான்.

## நியாயம் என்ன?

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தென் சீனக் கடலுக்கு போர்க் கப்பல்களை அனுப்பியு ள்ளதைத் தொடர்ந்து அப் பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வார முற்பகுதியில் தென்சீனக் கடற்பரப்பில் அமெரிக்க சீனக் கடற்படையினருக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென் சீனக் கடற் பிராந்தியத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அமெரிக்க கப்பலொன்றை சீனக் கடற்படையினரின் 5 கப்பல்கள் தாக்குதல் பாணியில் அச்சுறுத்தியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்தது. இதனைத் தொடர்ந்தே கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் கப்பல்களுக்கு பாதுகாப்பாக போர்க் கப்பல்களை அனுப்பு வதென்ற தீர்மானத்தை ஒபாமா மேற்கொண்டுள்ளார் என்று அமெரிக்க தனது நியாயத்தை கூறியது. அவர்களது நியாயம் ஒரு புறம் இருக்கட்டும். என்னொரு நாட்டுக்கு சொந்தமான கடல் பரப்பில் அனுமதி இன்றி உள்நுழைவது நியாயமா, வேவு பார்ப்பது நியாயமா. பிடி பட்டவுடன் திருடன் முழித்து முழித்து விழி பிதுங்குவது தெரியாமல் இருக்க எப்படி யெல் லாம் சாட்டுக் கண்டு பிடிக்கலாம் என்று அமெரிக்காவைப் பார்த்துப் பழகிக் கொள்ளலாம்.

## கை நழுவும் காவியாடை

திபெத்திற்கு சட்டரீதியானதும் அர்த்தமுள்ளதுமான சுயாட்சியை வழங்குமாறு திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். திபெத்தில் அச்சமான சூழ்நிலையொன்றை சீனா உருவாக்கி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள தலாய்லாமா பரஸ்பர நலன்களின் அடிப்படையில் இருதரப்பும் செயற்பட வேண்டியது அவசியமெனத் தெரிவித் துள்ளார். அத்துடன் திபெத்திற்கு நீதி கிடைக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லையெனவும் அதற்கு அமெரிக்கா நிச்சயம் உதவும் எனவும் தலாய் லாமா குறிப்பிட்டு ள்ளார். தலாய் லாமா ஒரு உன்னதமான தலைவர் என்றும் சீனா, திபெத்திய மக்களின் உரிமைகளை பறிக்க கூடாது என்றும் ஒபாமா கூறியிருக்கிறார். தலாய் லாமாவின் முன்னாலுள்ள தெரிவு அவர் திபெத்தியரின் மதிப்புக்குரிய மதத் தலைவராகத் திபெத்துக்கு மீள்வதா அல்லது அமெரிக்காவின் எடுபிடியாக இந்திய மண்ணில் தங்கியிருந்து சீன எதி ர்ப்பு என்ற பேரில் திபெத்திய மக்களுக்குக் கேடு செய்யும் ஒரு அரசியல் பித்தலாட்டக் காரராக தொடர்ந்தும் வாழ்வதா என்பதுதான். வசதியான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுப் போன ஒரு துறவிக்கு இது எளிதான ஒரு தெரிவல்ல. இந்த தலாய்லாமாவுக்கு இப்போது எழுபது வயது தாண்டிவிட்டது. அடுத்த தலாய்லாமாவை தேர்ந்தெடுத்தாக வேண்டும். சீன அரசாங்கமும் அங்கீகரிக்கவேண்டும். அத்தோடு அமெரிக்காவின் காவியாடைத் துருப்புச் சீட்டு கைநழுவி விடும். எனவே ஒபாமாவும் அமெரிக்காவும் திபெத் விடுதலை என்பதற்குப் புதியதொரு பரிமாணத்தை அதற்கிடையில் தேடியாக வேண்டும்.

## சுருங்கச் சொல்லல்

உலகளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள பொருளாதார நெருக்கடியும் பருவ நிலை மாற்றமும் சர்வதேச சுகாதாரத்தில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. ஜேர்மனின் தலைநகர் பேர்ளினில் நடைபெற்ற சர்வதேச பிரச்சினைகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஐ.நா.வின் உலக சுகாதார பணிப்பாளர் மார்க்ரெட் சான் 'பொருளாதாரச் சரிவும் பருவநிலை மாற்றமும் சந்தை பாதிப்பு , இயற்கை சீற்றத்தால் மட்டும் ஏற்படவில்லை. மனிதனது செயற்பாட்டால் விளைந்தவை. மனித வர லாற்றின் சுழற்சியில் அவை தவிர்க்க முடியாதவை என்பதும் தவறானது. தற்போதைய பொருளாதார , பருவநிலை சூழலுக்கு உலக நாடுகளின் திறனற்ற செயல்பாடுகளே கார ணம். சர்வதேச சமூகம், முதலீட்டுச் சந்தைகள், பொருளாதாரம், வணிகம் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டிய கட்டத்தில் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இந்தத் தோல்வி தவறான கொள்கைகளால் விளைந்ததே. இன்றைய தவறுகள் அதிகவேகமாக பரவக் கூடியவை. தற்போதைய சர்வதேச பொரு ளாதாரச் சரிவால் சுகாதாரத் துறையே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வேலையின்மை, மருத்துவத்திற்கான செலவீனங்களைக் குறைத்தல் ஆகியவற்றால் சர்வதேச சுகாதாரம் மேலும் பாதிப்படையும்" எனத் தெரிவித்தார். முதலாளித்துவத்தால் வந்த வினை என்று சுருக்கமாக சொல்ல வேண்டியது தானே ஏன் மறைப்பு?

# ஏகாதிபத்திய உலகில் மக்களை ஒன்றுதிரட்டலும் போராடுதலும்

சான்பிரான்சிஸ்கோவில் அருந்ததி ராய் 2004 ஆம் ஆண்டு 'ஏகாதிபத்திய உலகில் மக்களை ஒன்றுதிரட்டலும் போராடுதலும்" என்ற தலைப்பில் உரையாற்றியிருந்தார். காலப்பொருத்தம் கருதி அதிலிருந்து சில பகுதிகளை தருகிறோம் ஆதிக்கங்களை எதிர்த்து, தம் உரிமைகளுக்காக மக்கள் தம் அரசுடனோ அல்லது ஒரு மாற்று நாட்டு அரசுடனோ போராடிய வண்ணம் இருக்கிறார்கள். இந்த எதிர்ப்புப் போரா ட்டங்கள் சந்திக்கும் முக்கியமான மூன்று சவால்கள் என்ன? என்ற கேள்வியுடன் தொடங்கிய அவரது பேச்சின் சுருக்கம் உப தலைப்புகளுடன் தமிழில் தரப்பட்டுள்ளது.

## அடக்கு முறைகள்

மக்களின் உரிமைப் போராட்டங்கள் சந்திக்கும் மூன்றாவது சவாலைப் பற்றி இப்போது பார்ப்போம். அடக்குமுறை அரசாங்கங்களுக்கும் போராட்டக்குழுக்களுக்கும் ஏற்படும் நேரடி மோதல்கள். இவை மக்கள் சக்திக்கும் பேரரசின் சக்திக்குமிடையேயான மோதல்கள்.

குடிமக்களின் எதிர்ப்புகள் ஒருவேளை (பேரரசுக்கு)ஆபத்தாகலாம் என்ற ஒரு சிறு அறிகுறி தென்பட்டாலும் போதும், அந்தப் போராட்டத்தின் மீதான அடக்குமுறை இரக்கமற்றதாயிருக்கும். சியாட்டில், மியாமி, கோதென்பர்க், ஜெனீவா ஆகிய இடங்களில் நடந்த ஊர்வலங்களிலெல்லாம் இத்தகைய ஒடுக்குமுறையை நாம் கண்டோம். அமெரிக்காவில் நீங்கள் வைத்திருக்கும் அமெரிக்க நாட்டுப்பற்றாளர் சட்டமானது உலக நாடுகளுக்கெல்லாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கான ஒரு முன்னோடியாக இருக்கிறது. சுதந்திரத்தைக் காக்கின்ற பெயரிலே சுதந்திரம் ஒடுக்கப்படுகிறது. நாம் ஒரு முறை சுதந்திரத்தை ஒப்புவித்துவிட்டால் அதை மீளப் பெறுவதற்கு ஒரு புரட்சி செய்ய வேண்டியிருக்கும்.

சில அரசாங்கங்களுக்குச் சுதந்திரத்தை ஒடுக்குவதில் பெரும் அனுபவங்கள் இருக்கும், இருப்பினும் அவ்வரசுகள் நறுமணத்துடனேயே திகழும். இந்த ஆட்டத்திலே பழங்கையான இந்தியா இவ்வழிக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. கடந்த ஆண்டுகளில் அது எக்கச்சக்கமான சட்டங்களை உண்டாக்கி அவற்றின் மூலம் எந்தவொரு ஆளையும் பயங்கரவாதி, கிளர்ச்சிக்காரர், போராளி என்று அழைத்துக்கொள்ள முடியும். இப்போது

எங்களிடம் ஆயுதப்படை சிறப்பதிகாரச் சட்டம், பொதுப் பாதுகாப்புச் சட்டம், சிறப்புப் பகுதிகள் பாதுகாப்புச் சட்டம், குழுப்போராளிகள் சட்டம், பயங்கரவாதிகள் மற்றும் பிரிவினைப் பகுதிகள் சட்டம் (இது ஏற்கெனவே காலாவதியான சட்டமாக இருந்தாலும் இதன்கீழ் மக்கள் இன்னும் வழக்குகளை எதிர்கொள்கிறார்கள்), மற்றும் தற்போது வந்திருக்கும் பொடா சட்டம், ஆகியவை இருக்கின்றன. இவை மாற்றுக் கருத்தைக் கொண்டவர்களுக்கான பல்திற உயிர்க்கொல்லி மருந்துகளைப் போன்றவை. இதற்கு அப்பாலும் சில முறைகள் இருக்கின்றன. அவை நீதிமன்றங்களிலிருந்து தீர்ப்பாகக் கிடைக்கும். அவையாவன, பேச்சுச் சுதந்திரத்தை, அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை, வாழ்க்கையைப் பிழைப்பை நடத்தும் உரிமையை நறுக்குதலாகும். நீதிமன்றங்கள் எங்கள் வாழ்வை குறுமேலாண்மை செய்துவருகின்றன, அத்தகைய நீதிமன்றங்களை விமர்சிப்பது தண்டனைக்குரிய குற்றம்.

திரும்பவும் இந்த பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளுக்கு வருவோம். போன பத்தாண்டுகளில் மட்டும் காவல் துறையினராலும், பாதுகாப்புப் படையினராலும் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில். ஆந்திர மாநிலத்தில் (இம்மாநிலம் இந்தியாவில் உலகமயமாக்கலின் கவர்ச்சிக்கன்னி) ஒவ்வோராண்டும் 'திமர்த்தாக்குதல்களில்" சராசரியாக 200 'தீவிரவாதிகள்" கொல்லப்படுகிறார்கள். பம்பாய்க் காவல்துறை 'துப்பாக்கிச்சூட்டில்" எத்தனை 'குழுப்போராளிகளைக்" கொன்றோம் என்று பெருமை பேசுகிறது. கிட்டத்தட்ட போர்ச்சூழல் நிலவும் காஷ்மீரில் 1989ம் வருடத்திலிருந்து 80,000 பேர் கொல்லப் பட்டிருப்பதாகக் கணக்கு. ஆயிரக்கணக்கில் சும்மா 'காணாமல்" போய்விட்டார்கள் என்பது மற்றொருகணக்கு.

வடகிழக்குப் பகுதியிலும் சூழ்நிலை இப்படித்தான். அண்மையக் காலங்களில் இந்தியக் காவல்துறை ஆயுதமேந்தாத பொதுமக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறது. இம்மக்களில் பெரும்பாலானோர் தலித்துகளும், பழங்குடியினருமாவர். காவலர்களுக்குப் பிடித்தமான முறை என்னவென்றால் முதலில் அவர்களைக் கொன்றுவிட்டுப் பின்னர அவர்களைத் தீவிர்வாதிகள் என்று அழைப்பது.

இந்தியா மட்டுந்தான் இப்படியென்றில்லை, உலகெங்கும் இது நடப்பதைக் காண்கின்றோம். தாராளமய காலத்தில் ஏழ்மை என்பது ஒரு குற்றம். ஏழ்மையை எதிர்த்துப் போராடுவது பயங்கரவாதம் என்று வர்ணிக்கப்ப டுகிறது. இந்தியாவில் பொடா, சமயங்களில் Production of Terrorism Act என்றுதான் அழை க்கப்படுகிறது. அந்தச் சட்டமானது எல்லா பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களையும் போலவே ஒரு அல் கெய்தா செயலாளியிலிருந்து ஒரு சிடுமூஞ்சி பஸ் கண்டக்டர் வரை அனைவரையும் பிடித்துப் போடுவதற்கான சட்டம். பொடாவின் மேதைமை என்னவென்றால் இதை அரசாங்கம் விரும்பியபடியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம். 2002ல் குஜராத்தில் மாநில அரசின் உதவியோடு நிகழ்த்தப்பட்ட திட்டங்களைத் (இத்திட்டத்தின் வாயிலாக இந்து வெறியர்களால் 2000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும், 150,000 பேர் இல்லங்களைத் துறந்ததும் நிகழ்ந்தது.) தொடர்ந்து 287 பேர் பொடாவின் மூலம் கைது செய்யப்பட்டார்கள். இதில் 286 பேர் முஸ்லிம்கள், ஒருவர் சீக்கியர். பொடாவில் காவல் நிலையத்தில் கறக்கப்படும் வாக்குமூலங்கள் சாட்சியங்களாகக் கொள்ளப்படும். இதன் விளைவாக விசாரணையைச் சித்திரவதை இடப்பெயர்ச்சி செய்தது. இந்தியாவில்தான் உலகிலேயே அதிகமான சித்திரவதையும் சிறைச் சாவுகளும் நிகழ்கின்றன என்று தெற்காசிய மனித உரிமைப் பதிவு மையம் சொல்கிறது. அரசாங்க ஆவணங்கள் 2002ல் மட்டும், நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்தோரில் 1307 மரணங்களைப் பதிவு செய்திருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் பொடா தீர்ப்பாயத்தில் நானொரு உறுப்பினராக இருந்தேன். எங்களது அருமையான மக்களாட்சியில் என்ன நடக்கிறதென்பதை அந்த இரண்டு நாட்களில் கிடைத்த கிளுகிளுப்பூட்டும் வாக்கு மூலங்களிலிருந்து தெரிந்து கொண்டேன்.அதில் எல்லாமே அடக்கம். அதாவது, சிறுநீரைக் குடிக்கச் சொல்வது, ஆடை களைவது,தாழ்மையடையச் செய்வது, மின்னதிர்ச்சி கொடுப்பது, சிகரெட்டால் சுடுவது, ஆசனவாய்க்குள் இரும்புக்கழிகளை விடுவது, அடித்து உதைத்துக் கொல்வது ஆகியவை அடங்கும். பொடா இல்லையென்றால் மொடா அல்லது இதுமாதிரி ஏதாவது ஒன்று இருக்கும்.

வன்முறையற்ற முறையில் காட்டப்படும் எதிர்ப்புகளுக்கான வாசல் மூடப்பட்டு, மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒவ்வொருவரும் தீவிரவாதியென அழைக்கப்பட்டு இருக்கும் இந்த நிலையில் யாராவது நாட்டின் பெரும்பகுதியில் ஆயுதந்தாங்கிய போராளிகளின் வசம் இருப்பதையும், நிலைமை அந்தந்த மாநிலங்களின் (காஷ்மீர, வடகிழக்கு மாநிலங்கள், மத்தியப் பிரதேசத்தின் பெரும்பகுதி, சத்திஸ்கர், ஜார்கண்ட், ஆந்திரப்பிரதேசம்) கையை விட்டுப் போனதையும் குறித்து ஆச்சரியப்படுவார்களா? காஷ்மீரில் எந்தவொரு நிமிடத்திலும் 3000 முதல் 4000 போராளிகள் இயங்குவதாக இந்திய ராணுவம் கணக்கிடுகிறது. இவர்களை அடக்க இந்திய அரசு 500,000 படைவீரர்களை அனுப்புகிறது. தெளிவாக இது எதைச் சொல்கிறதென்றால், தீவிரவாதிகளை ஒடுக்க மட்டுமே இந்தப் படை செல்லவில்லை. அங்கிருக்கும் தாழ்வுபடுத்தப்பட்ட மக்களை, இந்தியப் படையை ஒரு அந்நியப் படையாக நினைக்கும் மகிழ்ச்சியற்ற மக்களையும் சேர்த்து ஒடுக்கவே செல்கிறது.

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டமானது அதிகாரிகளுக்கு மட்டுமின்றி குறைந்த அதிகாரம் கொண்ட ராணு வத்தினருக்கும், பொது விதிகளை மீறுவோரை, தாக்கவும் கொல்லவும் அதிகாரம் கொடுக்கிறது. 1958ல் மணிப் பூரின் சில மாவட்டங்களில் மட்டுமே இருந்த அந்தச் சட்டம் இப்போது மாநில முழுமைக்கும், காஷ்மீருக்கும் செல்லுபடியாகும். சித்திரவதை, காணாமல் போதல், நீதிமன்றக் காவலில் சாதல், வன்புணர்ச்சி மற்றும் கடைசியில் தீர்த்துக்கட்டுதல் ஆகியவை குறித்த பதிவுகள் உங்கள் குடலைப் புரட்டவைக்கப் போதும்.

இந்தியாவின் இதயமான ஆந்திரப் பிரதேசத்தில், வாரங்கலில் ஜூலை 28, 2004ம் தேதி,பல்லாண்டுகளாக ஆயு தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் (ஆந்திரக் காவல்துறையின் குறியான) மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் மக்கள் போராட்டக் குழு ஒரு கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பொடாவின் கீழ் இந்த மக்கள் அனைவரும் பயங்கரவாதிகள்தான். இவர்களனைவரும் குவாண்டனாமோ சிறையினை ஒத்ததொரு இந்தியச் சிறையிலே அடைக்கப்படுவார்களா? மொத்த வடகிழக்கும், காஷ்மீரும் நொதிக்கின்றன. அரசாங்கம் இத்தனை லட்சம் மக்களை என்ன செய்யப் போகிறது?

அடுத்த இதழில் தொடரும்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# திருமண விழாவும் சடங்குகளும்

## சில குறிப்புகள்

உலகின் ஏகப் பெரும்பான்மையான மனித சமுதாயங்களில் திருமணம் என்பதும் மணவாழ்வு என்பதும் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் மட்டுமே இடையிலான சமுதாய ஒப்பந்தமாக இருந்து வருகிறது. ஒரு ஆண் பல பெண்களைத் தாரமாகக் கொண்டிருக்கக் கூடிய நிலை சில சமூகங்களில் இன்னமும் இருந்து வந்தாலும் அது விரும்பத்தக்கதாகவோ பரிந்துரைக்கப்படுவதாகவோ இருக்கும் தன்மை குறைந்தே வருகிறது. மிக மிகச் சிறுபான்மையான சமூகங்களில் ஒரு பெண்ணுக்குப் பல கணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் மட்டும் இடையிலான ஒரு சமுதாய ஒப்பந்தம் என்ற நிலைப்பாடே மிகவும் ஏற்புடையதாக உள்ளது.

இந்த விதமான ஒரு சமூக ஒப்பந்தம், கூட்டுக் குடும்பம் என்கிற தொடக்க நிலையிலிருந்து தனிக்குடும்பம் என்கிற அமைப்பு உருவான நிலையை ஒட்டி உருவாக்கப்பட்டது. திருமணம் என்கிற சமூக ஒப்பந்தம் அதைச் செய்து கொள்ளும் தம்பதிகட்கும் சிறப்பான சில சமூக உரிமைகளை வழங்குகிறது. அவற்றுள் அந்த உறவின் அந்தரங்கமான தன்மை அதனை வலுப்படுத்திப் பேணுவதற்கான உரிமை திருமண உறவின் வழியே உருவாகிற குடும்பம் என்பதை ஒரு தனியான சமூக அலகைப் பேணுவதற்கான சமூக உத்தரவாதங்கள் என்பன முக்கியமானவை. அதே வேளை தம்பதிகள் இருவர் மீதும் சில முக்கியமான பொறுப்புக்களும் சுமத்தப்படுகின்றன. அவை பெரும்பாலும் பரஸ்பர மரியாதையுடன் மணவாழ்க்கையைப் பேணி நடப்பதும் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்வதும் பற்றியன. இந்த உரிமைகளும் பொறுப்புகளும் ஒரு இணை என்ற முறையிற் கூட்டாகவும் கணவன் மனைவி என்ற முறையில் வெவ்வேறாகவும் அமைந்துள்ளமை கவனத்துக்குரியது.

திருமணம் என்கிற சமூக ஒப்பந்தம் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு விதமாக அமைகிறது. தேசிய இனம், மதம், சமூகப்பிரிவு, வர்க்கம் எனும் வேறுபாடுகள் பொதுவாகத் திருமணம் என்று குறிப்பிடப்படும் திருமண நிகழ்வு தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படுகிற சடங்குகளில் வேறுபட்ட நடைமுறைகட்கு வழி செய்துள்ளன. அதே போல காலத்துடன் மாறி வருகிற உலகில் திருமணச் சடங்கும் மணவாழ்வு பற்றிய பார்வையும் காலத்துடனே மாறி வந்துள்ளன.

ஒரு இனம் என்று கூறப்படுகிற ஒரு சமூகத்தினுள் மட்டுமன்றி அதன் உட்பிரிவுகளிடையிலும் காலத்தாலும் இடத்தாலும் திருமணம் தொடர்பான நடைமுறைகள் மாறிவந்துள்ளன. இவ்விடயத்தில் ஒரு இனத்திற்குரிய கொள்கைகளும் நடைமுறைகளும் என்று கூறும் போது அவற்றை வெறுமனே மரபு என்ற பேரில் வரையறுக்க இயலாமற் போகிறது. ஏனெனில் மரபு என்று சொல்லப்படுகிறது தன்னுள் ஒரு வகையான தொடர்ச்சியைக் கொண்டிருந்தாலும் அதன் தொடர்ச்சியான ஒவ்வொரு பகுதியும் முடிவில்லாத மாற்றங்கட்கு உள்ளாகி வந்துள்ளன.

**● திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தமாகும்**

**● சமூகச் சூழலையொட்டி சட்ட ரீதியாகவும் சம்பிரதாயபூர்வமாகவும் திருமண நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.**

சில மாற்றங்கள் சமுதாய அமைப்பிலும் சமுதாயத்தின் உற்பத்தியிலும் உற்பத்தி உறவுகளிலும் பொருளாதார வளர்ச்சியிலும் வசதிகளிலும் ஏற்படுகிற மாற்றங்களின் விளைவானவை. சமுதாய வளர்ச்சியின் போது பிற பண்பாடுகளுடன் ஏற்படும் உறவுகள் தவிர்க்க முடியாத விதமாகச் சில மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. ஒரு நாட்டின் சட்ட விதிகள் ஒருபுறம் திருமண உறவு பற்றிய இறுக்கமான கட்டுப்பாட்டுக்களை விதிக்கிறதன் மூலம் மரபு சார்ந்த நடைமுறைகளிலும் மாற்றங்களை கொண்டு வருகின்றன. உதாரணமாக இன்று திருமணச் சடங்கை விடப் பல வழிகளில் முக்கியமான விடயமாகத் திருமணப் பதிவு நமக்குள் ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. அதாவது ஒரு சமூகம் தனது பொறுப்பில் வைத்திருந்ததான திருமண உறவைப் பேணிப் பாதுகாக்கும் பணிக்கு இன்று சட்டத்தின் துணை அவசியமாகியுள்ளது.

சட்டத்தின் குறுக்கீடு பெண்ணுக்குள் கூடுதலான பாதுகாப்பிற்கு வழிசெய்துள்ளது எனலாம். பழைய நிலவுடைமைச் சமூகத்தின் தொடர்ச்சியாக உள்ள தமது மரபில் இன்னமும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப்பட்டவளாகக் கருதுகிற தன்மையை நாம் காணுகிறோம். பெண்கள் மீதான வன்முறைக்கும் குடும்பச் சூழலுக்குள் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதற்கும் எதிரான பாதுகாப்புக்கள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. எனினும் நடைமுறையில் பெண்கள் சட்டத்தின் பாதுகாப்பை நாடுவது குறைவு. குடும்பம் என்கிற அமைப்பினுள் தொடர்ந்தும் வாழ இயலாது அல்லது குடும்பம் என்பது ஒரு பெண்ணின் பாதுகாப்பை மறுக்கும் ஒரு நிலையிலேயே ஒரு பெண் சட்டத்தின் துணையை நாட நேருகிறது.

கணவனை இழந்த பெண்களினதும் மணமுறிவு பெற்ற பெண்களினதும் சமூக நிலை திருப்தியானதல்ல. பலவாறான சமூக நிகழ்வுகளிலிருந்து அவர்கள் ஒதுக்கிவைக்கப்படுகிறார்கள். அல்லது வீண் அவமதிப்பைக் தவிர்க்கிற விதமாக ஒதுங்கிக் கொள்கிறார்கள். இந்த நிலைமை சிறிது மாறி வந்தாலும் ஒரு பெண்ணின் தனிமனித ஆளுமையை மதிக்குமளவுக்கு நிலைமைகள் திருந்த நீண்டகாலமெடுக்கலாம்.

நமது பண்பாடு என்று பெருமைப்படக்கூடிய விடயங்கள் உள்ளன. அவை எல்லாக் காலத்திலும் நம்முடன் இருந்து வந்தவையல்ல. எனினும் சமூகம் தனது வளர்ச்சிப் போக்கில் அவற்றை உள்வாங்கிக் கொண்டுள்ளது. அதே போலப் பெருமைப் படத் தகாதவையும் உள்ளன. அவற்றிலும் கணிசமானவை சமுகத்தால் காலப்போக்கில் உள்வாங்கப்பட்டவையே.

எனவே தான் நம்முடையது எது சரியானது, எது பிழையானது என்கிற விதமான விடயங்களில் எக்காலத்துக்குமான திட்ட வட்டமான மறுமொழிகள் இல்லை. நமது நடைமுறைகள் நியாயமானவையா, சமூகப் பயனுள்ளவையா நமது சமூகத்தை எந்தத் திசையில் கொண்டு செல்லக் கூடியன என்பன பற்றி நம்மாற் பொதுவான உடன்பாட்டுக்கு வர இயலும்.

மணவாழ்வு தொடர்பாகச் சமூகப்பார்வை எவ்வளவு தூரம் மாறியுள்ளது என விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால் ஒரு சில உதாரணங்களே போதுமானவை. திருமணமாகுமுன் ஆணும் பெண்ணும் ஒருவரோடொருவர் பேசுவதே தவறு என்கிற விதமான பார்வை நடுத்தர வர்க்கத்தினரிடையே இரண்டு மூன்று தலைமுறைகள் முன்பு வரை இருந்தன. இப்போது அதில் நெகிழ்வு ஏற்பட்டுள்ளது. திருமணத்திற்கு ஒரு பெண்ணின் உடன்பாடு தேவையற்றதாகக் கருதப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஆண்கூடப் பெற்றோரின் விருப்பப்படியே ஒரு பெண்ணை மணந்து கொள்வது வழமையாயிருந்தது. விதவைகளின் சமூக நிலையும் மணவிலக்குப் பெற்ற பெண்களின் நிலையும் கணிசமாகத் திருந்தியுள்ளது. இவற்றுக்கான காரணங்கள் சொத்துடைமை சாதி, மதம், இனம் போன்ற பல வேறுபாடுகளைப் பேணுவதற்கான அகமண முறையுடன் தொடர்புடையவை. இன்று நாம் காணக்கூடிய நெகிழ்வு முழுமையானதல்ல. என்றாலும் மனிதரின் சமத்துவம் பற்றிய சிந்தனைகள் வலுப்பெறும் போது மேற்கூறிய விதமான தடைகளும் தகர்ந்து போகின்றன. ஆனால் அவ்வாறான மாற்றங்களை ஊக்குவிப்பதில் நாம் ஒவ்வொருவரும் சிறு பங்களிப்பையேனும் வழங்க முடியும்.

திருமணச் சடங்குகளிற் பல முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாலு நாட்கள் நடைபெறுகின்ற ஒரு மணவிழாவை நாம் இன்று காண முடியாது. வேறு சமூகங்களில் அதை விடக் கூடிய காலத்திற்கும் மணச் சடங்கு நடைபெற்று வந்துள்ளது. எனினும் சம்பிரதாயமாக நாலாஞ்சடங்கு போல ஒரு சில விடயங்கள் பேணப்படுகின்றன. பழைய சடங்குகட்கான நியாயங்கள் வலுவிழந்து போனதாலும் அவற்றை நடத்தக் கூடிய சமூகச் சூழல் இல்லாது போனதாலும் அச்சடங்குகளின் பல பகுதிகள் கைவிடப்பட்டாலும் மரபின் பேராற் சில விடயங்கள் தொடருகின்றன. எனினும் நடைமுறைகள் இடத்துடனும் சூழலுடனும் தனி மனித விருப்பு வெறுப்புகட்கமையவும் மாறுபடுகின்றன.

எவ்வாறாயினும் திருமணச் சடங்குகள் தமிழரிடையே உள்ள ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் பிரதேசங்கட்கமையவும் வேறுபடுகின்றன. நமது சமுதாயத்தில் பிராமண மதம் இறுக்கமாக நிலைபெற்றுப் பதினைந்து நூற்றாண்டுகள் அளவிலாகின்றது. நமது சமுதாயத்தில் மண நிகழ்வுகளில் பிராமணரது தலைமையான பங்கு படிப்படியாகவே விருத்தி பெற்று வந்துள்ளது. திருமணத்திற்குத் தெய்வங்களின் ஆசிகளைப் பிராமணர் மூலமே பெற இயலும் என்ற நம்பிக்கை வலுப்பெற்றதன் மூலமே பிராமணர்களின் கையால் திருமணச் சடங்குகளை நடத்துவது பொதுவான நம்பிக்கையாகவும் நடைமுறையாகவும் இருந்து வருகிறது.

**● நமது தமிழ்ச் சூழலில் பிராமணியச் சடங்குகளே அறிவியலுக்கும் யதார்த்த சூழலுக்கும் பொருந்தாத வகையில் இன்றும் முன்னெடுக்கப்படுகின்றன.**

**● அறிவியல் நிடைமுறைகள் சார்ந்த திருமணச் சடங்குகள் மூலம் புதிய பண்பாட்டு நடை முறைகள் உருவாக முடியும்.**

இன்றும் கூட ஒரு பிராமணர் மட்டுமே இந்துக் கோவில்கள் எனப்படுகிறவற்றில் பூசை நடத்த அனுமதியுடையோரயுள்ளனர். இதற்குத் "தூய்மை" காரணம் காட்டப்படுகிறது. ஆனால் ஒரு பிராமணரின் நடத்தை எவ்வாறிருந்தாலும் அவருக்கு விதிக்கப்பட்ட ஒழுக்க விதிகளை அவர் மீறி நடந்தாலும் அவர் ஒரு கோயிலிற் பூசை நடத்தலாம், பிராம்ணரல்லாத எவருமே எவ்வளவு பக்தியும் சமய நூல் அறிவும் நல்லொழுக்கமும் கொண்டவராயினும் அவரால் கோயிலில் பூசை நடத்த இயலாது. இது பிற மதங்களில் ஒன்றிலேனும் நாம் காண முடியாத ஒரு நடைமுறை. இது இன்னமும் இந்திய சமூகங்களிலுள்ள பிராமணியத்தின் வலுவான பிடிப்பையே உணர்த்துகிறது. பிறப்பால் மனிதரிடையே ஏற்றத்தாழ்வை, தூய்மை தூய்மையின்மை என்ற என்ற வேறுபாட்டை வற்புறுத்தும் நடைமுறைகளை நம்முள் திணித்ததில் பிராமணியத்தின் பங்கு முக்கியமானது. இது நமக்குத் தேவையானவையா?

பிராமணர் சமூக இயக்கத்தின் ஒரு பகுதியாக இல்லாத இலங்கையிலும் திருமணம், கோயில் ஆகிய இரண்டிலும் பிராமணியம் ஆதிக்கஞ் செலுத்துகிறது. பிராமணர்கள் மீதான துவேஷத்தாலோ தனிப்பட்ட பகைமையாலோ இல்லாமல் நமது சமூகத்திற்குப் பொருந்தி வராததும் பல நூற்றாண்டுகளாகப் பிறப்பால் ஏற்றத்தாழ்வை வலியுறுத்தியும் சமுகத்தில் பெரும் பகுதியினரை ஒதுக்கி வைத்தும் வந்துள்ள ஒரு நடைமுறையை நாம் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தொடர இயலும் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

பிராமணியத்தின் ஆதிக்கம் முடிவுக்கு வருவதும் வழிபாடுகளும் சமூகச் சடங்குகளும் சமூகத்தின் தேவைகட்கமையவும் அறிவுக்கு அறவே பொருந்தி வராத விடயங்களைப் பூரணமாக மறுத்து அமைவதும் நமது சமூகத்தின் முன்னோக்கிய நகர்வுக்கு மிகவு தேவையானவை.

**கடந்த காலங்களில் கம்யூனிஸ்டுக்கள் தமது இல்லத் திருமணங்களை பிராமணியச் சடங்குகள் பழைமைவாத நடைமுறைகள் தவிர்த்தே நடாத்தி வந்திருக்கிறர்கள். அவ்வாறே அண்மைக் காலத்தில் புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த குடும்பங்களில் மலையகம் கொழும்பு யாழ்ப்பாணப் பிரதேசங்களில் திருமண நிகழ்வுகள் வெவ்வேறு முறைகளில் இடம் பெற்றன. அவற்றில் பிராமணியச் சடங்குகளோ பழைமைவாத நடைமுறைகளோ இடம் பெறவில்லை: இவற்றை கவனத்தில் கொண்டே திருமணம் பற்றிய இக் கட்டுரை வெளியிடப்படுகிறது. (ஆ-ர்)**

அதேவேளை சடங்குகள் தேவையானவையா என்ற கேள்வி எழுகிறது. எவ்வ கையான சடங்குகள் என்பதைப் பொறுத்தே அதற்கு விடை கூற இயலும். ஒரு பொது நிகழ்ச்சியை விளக்கேற்றித் தொடக்கி வைக்கிறோம். வாழ்த்துப் பாடல்கள் பாடி நிகழ்ச்சியை தொடக்கியும் முடித்தும் வைக்கிறோம். வாழ்த்துரைகளும் வரவேற்புரைகளும் நன்றியுரைகளும் ஒருவிதமான சடங்குத் தன்மையுடையன. இவ்வாறான சடங்குகளும் சடங்குத்தன்மையுடைய நிகழ்வுகளும் தனிமனித மட்டத்திலன்றி ஒரு குழுவாக அல்லது ஒரு மக்கள் திரளாகச் செயற்படுகிற போது அந்நிகழ்வுக்கு பங்கு பற்றுவோருக்கும் மரியாதை செலுத்துகிற நோக்கிலானவை. அவற்றை மிகைப்ப டுத்திப் பூசைகளாகவும் பலவாறான மேளதாள நிகழ்ச்சிகளாகவும் சிலர் செய்வதுண்டு. அவை எவ்வளவு பொருத்தப்பாடுடையன என்பது பற்றிச் சிந்திப்போமானால் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஏற்ற விதமாகச் சடங்குகள் அமையும். கருத்துத் தெளிவுடைய எளிமையான சடங்குகள் சிந்தனையின் வழிகாட்டல்கள்ளற்ற மூட நம்பிக்கை களினதும் மரபு பற்றிய பாவனைகளின் பேரிலும் நடக்கும் சடங்கு களை விட மேலானவையும் மக்களை மதிப்பனவுமாகும் .

திருமணம் என்பது சாரம்சத்தில் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான ஒரு சமூக ஒப்பந்தத்தின் நிறைவேற்றல் நிகழ்வு எனலாம். ஆனால் அது ஒரு சமூக நிகழ்வாகவும் அமைகிறது. ஒரு ஆணும் பெண்ணும் எந்த விதமான சடங்குமின்றிச் சட்டப்படி தேவையான சாட்சிகள் இருவரது முன்னிலையில் தமது சமூக ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளலாம். அது அவர்களது தெரிவு. எனினும் தமது மகிழ்ச்சியைத் தமக்கு நெருக்கமானோருடன் அவர்கள் பகிர விரும்பலாம். அந்த மகிழ்ச்சியை கொண்டாடவும் தமது புதிய வாழ்க்கைக்குத் தமது விருப்பத்திற்குரியோரது வாழ்த்துக்களைப் பெறவும் அவர்கள் விரும்பலாம். இந்த விருப்பங்கட்கமையத் திருமண விழா நடைபெறுகிறது. சில சடங்குகளும் சடங்காசாரமான காரியங்களும் நடைபெறலாம்.

தாலி என்பது இன்றும் ஆணாதிக்கத்தின் அடையாளமாகவே உள்ளது. ஆனால் அது இல்லாததால் ஆணாதிக்கம் இல்லாமற் போய்விடாது. இவ்வாறான விடயங்களில் ஒரு ஆணும் பெண்ணும் தமக்கிடையே ஏற்படவுள்ள புதிய உறவையும் தம்மிடையே உள்ள பரஸ்பர மரியாதையையும் அன்பையும் சடங்காசாரமாக ஒரு மண நிகழ்வின்போது மாலை மாற்றலோ, கணையாழி மாற்றலோ போன்ற செயல்கள் மூலம் வெளிப்படுத்தலாம்.

நாளைய சமூகம் பகுத்தறிவின் அடிப்படையிலானதாக இல்லாவிடின் அது செழிக்க இயலாது. பகுத்தறிவு சார்ந்த முறையில் நமது செயல்களை அமைத்துக் கொள்வதன் மூலம் நமது சிந்தனை பகுத்தறிவு சார்ந்து விருத்தி பெறுகிறது. சமுகத்தின் மீதும் அது நல்லதொரு பாதிப்பை ஏற்படுத்துகிறது. திருமண நிகழ்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்று யாரும் விதிக்க இயலாது. எனினும் நமது சமூகத்தை மூட நம்பிக்கைகளின்றும் தவறான ஆதிக்க சிந்தனைகளினின்றும் விடுவிக்கக் கூடிய நடைமுறைகளை நாம் ஊக்குவிப்பது பயனுள்ளது. அதன் போக்கில் நமது சமூகத்திற்குத் திருமணம் சடங்கு பற்றிய ஒரு புதிய பண்பாட்டு நடைமுறை உருவாகலாம். அது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சமமாக கருதி நேசிக்கும் ஒரு நல்லுறவை அடையாளப்படுத்தும் ஒரு வலுவான அத்திவாரமாயும் அமைய முடியும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

ஏப்ரல் 2009

# புதிய பூமி


இணையத் தளம் : Website: www.ndpsl.org

## ஐ. அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளரின் வெற்றி



வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் பெப்ரவரி 15ல் இடம் பெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெற்று தனது பதவிக்கால நீடிப்பிற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.







அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்கடி பொருளாதாரச் சரிவால் வேலையிழந்த ௬௦,௦௦௦௦ இலட்சம் ஊழியர்கள் வீதிக்கு வந்துள்ளனர். அவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் காணலாம்.



இந்தியாவில் வேலையிழந்தோர் மற்றும் விலைவாசி உயர்வுக்கு எதிராக தொழிலாளர் நடாத்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்








## G20 மாநாட்டின் போது மக்கள் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்









வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரிண்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.